புதுமைப் பெண்

மாதர்களுக்கான மாதப் பத்திரி...

ஆசிரியை: குகப்ரியை

ல 1
3

சென்னை
டிசம்பர் '47

ஸர்வஜித் வருஷ
மார்கழி

இந்த மலரில்

...து சுதந்திரம் ?	2
...னின் திருநாள்—ஜானம்மாள்	5
...பெண்களின் உரிமைகளும், கடமைகளும் —சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள் B. A., L. T.,	9
...சின்ன விஷயந்தான் !	10
...ஏன் விழுவானேன் ?—ஸ்வர்ணம்	13
...சிசு சம்ரக்ஷணை—பார்வதி	17
...வாழ்க்கை—சரஸ்வதி தியாகராஜன்	21
...மலாவின் புடவை—லக்ஷ்மி நாராயணன்	26
...பெண்—இந்திரா	29
...ரயும் சேயும்—எல். என்.	32
...ரேமலதா—(தொடர் நாவல்)	34
...ற்பச் செல்வம்—திருப்பரங்குன்றம், 'ஹேமா'	41
...டுக்கனை	44
...ண்டை வீட்டு விஷயம்—சரோஜா ராமமூர்த்தி	45
...வாக ரத்து—கி. ச.	47
...ப்பிகே வேலை—வை. சரோஜினி	50
...தல் கேஸ்—சீதா தேவி	52
...ரம்—வசுமதி ராமசாமி	58
...ர்க்கைப் புயல்—சந்திரா ராமசேஷன்	6...

ஏது சுதந்திரம்?

நமது சமூகம் பரந்த கட்டிடத்துக்கு ஒப்பானது.
நமது கட்டுப்பாடுகள் ஒவ்வொன்றும்
இதன் ஒவ்வொரு அங்கத்திற்கும் சமானம்.
சமூகத்தை அல்லது நாட்டை ஒரு உடல்
என்று வைத்துக் கொள்வோம். அதன் எந்தப்
பகுதியில் ஒரு சிறு நோய் ஏற்பட்டாலும்
துன்பமும் சோர்வும் ஏற்படுகிறது. அதன்
பொருட்டு உடலின் ஒரு பகுதியைச் சேதித்து
விடலாமா? அல்லது துன்பத்தை அப்படியே
இருக்கட்டும் என்று நீடிக்க விடுவது சிறந்ததா?
துன்பத்தைப் போக்கடிக்கவல்லவோ வழி
தேட வேண்டும்.

சண்டை சச்சரவுகள், ஒருவர் மற்றவரை
அடக்கி நசுக்க நினைத்தல், அபிப்பிராய பேதங்
கள் இவைகளினால் நாட்டிலும்சரி, வீட்டிலும்
சரி, குழப்பமும் அமளிகுமளியும் தான் ஏற்
படுகிறது. பெண்கள் தேசத்தின் இருதயம்.
இருதய ஓட்டம் நின்று போன பிறகு உடல்
எப்படி ஒன்றுக்கும் உதவாததென்றும் சவ
மென்றும் கருதப்படுகின்றதோ அதே போல்
பெண்களின் உரிமைகளும் சுதந்திரமும்
குறைந்தால் சமூகம் வெறும் சடப்பொருளா
கத்தான் தோன்றும். உரிமையற்ற அடிமை
மனப்பான்மையும், குறுகிய நோக்கமும்,
கோழைத்தனமும் மலிந்த தாயின் குழந்தை
கள் எப்படி வீரர்களாகவும், மேதாவிகளாக
வும், ஞானிகளாகவும் ஆக முடியும்?

இன்று பெண்களின் நிலை என்ன? நமக்குத்
தேவையானவைகள் எவை, முன்பு நாம் எப்
படி இருந்தோம், இப்பொழுது எப்படி இருக்
கிறோம், இனி எப்படி இருக்க வேண்டும்?
அரசியல் துறைகளிலும், குடும்ப நிர்வாக
விஷயங்களிலும், பொருளாதார விஷயங்களி
லும், கல்வியிலும் நாம் அடைய வேண்டிய
வைகள் எவை? அடைந்திருப்பவை எவை?
அவைகளைச் சரியான முறையிலே பயன்படுத்
திக் கொள்வதற்குப் போதுமான மனப் பண்பு
நமக்கு இருக்கிறதா?

பெண்களுக்குச் சமூகத்தில் எப்படிப்பட்ட
உரிமைகள் வேண்டும் என்பதைப் பற்றி நூற்
கணக்கான அபிப்பிராயங்கள் நாள்
ம் பத்திரிகைகளிலே வெளி வருகின்
ஒரு சிலர் முன்பு பெண்கள் அடிமை
களாக இருந்ததாகவும் இப்பொழுது மு
றிக் கொண்டு வருவதாயும் எண்ணுகிறா

பண்டைத் தமிழ்ப் பெண்களிலே சிற
களாகிய ஔவையார், மங்கையர்க்கர
காரைக்காலம்மையார் இவர்களது சரி
லிருந்தும் ஒருவரேனும் அடிமையாய் சு
மற்று வாழ்ந்ததாகத் தெரியவில்லை.

தவிர, பெண்களின் சுதந்திரம் இ
காலத்திலேதான் குறைந்திருக்க வே
என்பதற்குப் பல ஆதாரங்களிருக்கின்
மொகலாயரது படையெடுப்புக்குப் பின்
பெண்களின் நிலையில் மாறுபாடு ஏற்பட்
கட்டுத் திட்டங்கள் அதிகமாயின என்
கள். இதிலும் ஓரளவு உண்மையுண்டு.

வேறு சிலர் மொகலாயரது ஆட்சியின்
னாக, இப்பொழுது உயர்வென்று கருதி
லேயரது பாஷையையும், நடை, உடை, ப
களையும் பின்பற்றுவதே போல், வட
டிலே பெரும்பான்மையான மக்கள்
வென்று கருதி "படுதா" முறையைத் அ
பின்பற்றினர் என்கிறார்கள்.

அதை ஒரு விசேஷமான முன்
மென்றோ கௌரவமென்றோ கருதி
நாட்டு மக்களுள் மேற்குலத்தாரும், த
ரும் தமக்குள் சில கட்டுத் திட்டங்க
படுத்தி யிருக்கலாம் என்றும் நினைக்கிறா

மற்றும் சிலர் பெண்களை அபலைகள்
றும், மெல்லியல் என்றும் கூறி வந்திரு
கள் புராண, வேத கால முதல். இப்பொ
அதையே ஒட்டித்தான் நம்மை சமத்து
மதிப்பதில்லை; இழிவு படுத்தி வைத்
றார்கள் என்றும் குறை கூறுகிறார்கள்.

இது வெறும் பிரமை. நம்மை இழிவு
இவர்களுக்கு என்ன அதிகாரம்? சுத
இவர்கள் கொடுத்து நாம் பெறவேண்
நமக்கு இவர்கள் வழங்குகிற வள்ள
என்ன? சுதந்திரம் நம்மிடமிருக்கிறது.
தெரிந்து உபயோகிப்போம் என்

புதுமைப் பெண்

ஆம்! உண்மைதான்! ஆழ்ந்து யோசி
பார்த்தால் இதில், நாம்இழிவு படுத்தி

களென்று கோபிப்பதற்கு இடமே இல்லை. கடவுளின் படைப்பிலேயே நமக்கு உரிய செயல்கள் வேருகவும், ஆடவர்களுக்குரிய செயல்கள் வேருகவும், அளிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் நாகரீகத்தின் சிகரத்தை அடைந்து விட்டதாகக் கருதப்படும் தேசங்களிலும் சரி, அநாகரிகமாய் காட்டுமிராண்டிகளாய் வாழும் நாட்டிலும் சரி, தாய், தாயின் அன்பு இவைகள் ஒரே நிலையில்தானிருக்கின்றன. இவைகள் நமது பிறப்புரிமையல்லவா?

குமுதினி சொல்லுவது போல், குழந்தைகளைப் பெறுதல், வளர்த்தல் முதலியவைகளுக்குப் புருஷர்களையே நியமித்து விடும்படி கடவுளுக்கு மனுப்போடலாமா?

× × ×

எந்த நிலையிலே நின்று பார்த்தாலும் குடும்பத்தில் சுதந்திரமில்லை என்பதும், சமம் என்று சொல்வதும் இரண்டுங்கெட்ட நிலையிலுள்ளவர்களுடைய ஒரு பொய்த்தோற்றம். பொருளாதார உரிமை யில்லாமையால் தான் இந்தத் தோற்றம்.

பொதுவாக பெரும்பாலான குடும்பங்களிலே பெண்களை அனுசரித்தேதான் நடக்கிருர்கள். மாடு வாங்கவும், மோட்டார் வாங்கவும் நம்முடைய ஆலோசனையைக் கலந்துகொள்ளாமலிருக்கலாம். ஆனல் குடும்ப சம்பந்தமான பண்டிகை, பருவம், கலியாணம், கார்த்திகை முதலியவைகளில் பெண்களின் ஆலோசனையின்றி ஒரு செயலும் நடைபெறுவதில்லை. ஏதோ நூற்றில் ஒன்றிரண்டு மூர்க்கர்கள் "கொடிலும் பேதையும் கொண்டது விடார்" என்று இருக்கக்கூடும். அத்தகைய அசட்டுத்தனம் இருபாலாருக்கும் இருக்கலாமல்லவா?

உண்மையில் நாம் நமது பெருமையை உள்ளபடி சொல்லப் புகுந்தால், புருஷர்கள் "எங்களுக்கு மட்டும் ஒருவிதமான சுதந்திரமுமில்லையா? வித்தை வேண்டுமா? நான் தான் அதிதேவதை சரஸ்வதி என்கிருய். செல்வம் வேண்டுமா? நான்தான் லக்ஷ்மி. உன் தோள்களில் வீரமில்லையா? நெஞ்சிலே உரமில்லையா? இதோ நான் தருகிறேன் சக்தி. சங்கீதமா? நான்தான் அதிதேவதை மாதங்கி தெரியாதா? என்னை வழிபடு என்கிருய். நதியா? நான் நான் கங்கை. நாடு வேண்டுமா? நான் தான் பாரதமாதா. பாஷை வேண்டுமா? நான்தான் தமிழ்த்தாய் அடாடா! எல்லாம் ஒரே பெண்கள் கூட்டமா? இந்தப் பெண்களெல்லோரும் ஒன்றுகூடி நம்மை அடிமையாக்கச் செய்திருக்கிற மாபெரும் சூழ்ச்சி! விழிமின் எழுமின்!" என்று கோஷிக்கலாமல்லவா?

இவைகளெல்லாம் வீண் விதண்டாவாதம். சுதந்திரம் என்ருல் என்ன என்பதை உள்ளபடி தெரிந்து கொண்டவர்கள் வீண் விதண்டாவாதங்களில் தலையிட மாட்டார்கள். பகவான் இராமகிருஷ்ணதேவர் தமது உபதேசங்களில் சொல்லுகிருர். ஒரு குழந்தை நெடுநேரமா[illegible] விளையாடிக்கொண்டிருக்கிறது. திடீரென்[illegible] தாயின் ஞாபகம் வரவே அம்மா! அம்மா[illegible] வென்று கூவுகிறது. தாயாரை நேரில் கண்ட உடனே சத்தம் நின்றுபோகிறது. தாயின் மடியிலே படுத்து பாலுண்ண ஆரம்பிக்கிறது.

இதேபோல சுதந்திரம் என்ருல் என்ன பெண்களுக்கு எத்தகைய சுதந்திரம் வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளும் வரையில் தான் கூச்சலும் குழப்பமும். உண்மையை அறிந்துவிட்டால் மேல் செய்யவேண்டியவைகளை யோசிப்போமேயன்றி இந்த அனுவசியமான பேச்சுக்களே இராது.

நம்மில் சிலர் பெண்கள் சுயேச்சையா[illegible] அங்குமிங்கும் செல்வதினல் கற்புநிலை குன்[illegible] விடுகிறது என்று வாதிக்கிருர்கள். சுதந்திர[illegible] தினல் ஒழுக்கம் குன்றிவிடுமென்று நினை[illegible] பதைக்காட்டிலும் தாழ்ந்த எண்ணம் எ[illegible] இவ்வாறு நினைப்பவர்களுக்கு கவியரசர் பார[illegible] யார் நல்ல பாடம் கற்பிக்கிருர்.

கற்புநிலை என்று சொல்லவந்தார்—இரு
கக்ஷிக்குமஃது பொதுவில் வைப்போம்

என்கி[illegible]

ஆண்மக்கள் அனைவரும் ஒரே உறுதியா[illegible] தமது கற்பு நிலையைக் காத்துக்கொள்ளவே[illegible]டும். ஒழுக்கத்தால் உயர்ந்தவர்களாக இரு[illegible] வேண்டும் என்ற நியமத்துடனிருந்தால் என்று ஒரு கேள்வி கேட்கிருர். அதற்[illegible] மேலாக

பெண் அறத்தினை ஆண் மக்கள் வீரந்தான்
பேணுமாகில் பிரிதொரு தாழ்வில்லை

என்கிரு[illegible]

இந்த மந்திரச் சொற்களை நம்மில் ஒவ்வொ[illegible]வரும் சற்று ஆராய்ந்து யோசிக்கவேண்டும்.

× × ×

நம்முடைய பண்ணையாள் குப்பன் மனை[illegible] சுயேச்சையாகத்தான் நடவு நடப்போகிருள்[illegible] அவளை, "அங்கே போகக்கூடாது, இங்[illegible] நிற்கக் கூடாது" என்கிற விதிகள் கட்டு[illegible]

படுத்தக் காணேம். காய் கறி விற்பவள் காலை ஏழு மணி முதல் மார்க்கெட்டில் உட்கார்ந்து கறிகாய் விற்கிருள். அவளைக் குறைந்தவள் என்று சொல்லிவிட முடியுமா?

இதோ துவரை வண்டியை இழுத்து வருகிருன் செட்டி. அவன் மனைவி அவனுக்கு உதவியாய் பின்னின்று வண்டியைத் தள்ளிக் கொண்டு இராகம் போட்டு 'துவரம் பருப்போ ......துவரம் பருப்போ' என்று கூவுகிருள். அவளுக்குத் தேவையான சுதந்திரமில்லையா? அவளுடைய மலர்ந்த முகம் நம்மைப் பார்த்து ....ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோமிந்த நாட்டிலே என்று சொல்வது போல் தோன்றுகிறது.

மிகப் பெரிய தனவந்தர் மகள் கமலா, கையிலே பையை எடுத்துக்கொண்டு கடைக்குப் போய் சாமான் வாங்கி வருகிருள். ஆழ்ந்து கவனித்தால் மிகுந்த நாகரிகமாய் வாழ்பவர்களும், சுதந்திரர்களாய்த் தானிருக்கிருர்கள். அநாகரீகமாக இருக்கிருர்கள் என்று நாம் நினைக்கும் மற்றவர்களும் சுதந்திரர்களாகவே தான் வாழ்கிருர்கள். இரண்டிற்கும் இடையிருப்பவர்கள் தான் சிரமப் படுபவர்கள். அவர்களுக்குத் தங்களது சுதந்திரத்தை சரியான முறையில் உபயோகிக்கத் தெரியவில்லை.

உதாரணமாக நடுத்தரமாயுள்ள சில குடும்பங்களில் எங்கேயாவது அவசரமான வேலை இருக்கலாம். வேலைக்காரி வரவில்லை, தனி ...ப் எப்படிப் போவது? உண்மையில் பெண் ... அவ்வளவு கோழைகளா? அல்ல. வாக்கு ...தத்திலே மகா வீரர்களுக்கு முதுகுக்கு ...ன் காட்டக்கூடியவர்கள் தனியாகச் சென் ...ல் ஏதோ பெரிய கௌரவக் குறைவு என் ...ற எண்ணம்.

'காவற்ருனே பாவையர்க் கழகு' என்ற பாவையாருடைய வாக்கிற்கு வீட்டிற்குள் அடைந்து கிடத்தல் என்றே பொருள் கொள்வார்கள். சாக்ஷாத் ஔவையாரே நேரில் வந்து, நான் சொன்ன காவல் என்ற பதத்திற்கு வேறு கருத்து என்று விரிவுரை கூறினும் ஒப்ப மாட்டார்கள்.

ஒரு சிலர் மிதமிஞ்சிய சுதந்திரத்தினுலும் ...ற்போக்கான மனேபாவத்தினுலும் தான் ...ழுக்கம் கெடுகிறது என்கிருர்களல்லவா? அவர்கள் மனம் போன போக்கெல்லாம் போவதையே சுதந்திரமென்று பெயரிட்டுவிட்டார்கள். அது சுதந்திரமா? அவிவேகமா? மேல்நாட்டிலிருந்து இறக்குமதியாயிருக்கும் பொருள்களில் இந்த அநாகரீகமும் ஒன்று. அதாவது நாகரீகம் என்ற பெயரால் நடைபெறும் மிருகத்தனமான அநாகரீகம்.

மேல் நாட்டாரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த படிப்பினைகள் எவ்வளவோ உண்டு. அவற்றை நாம் சட்டை செய்வதில்லை. நல்லது வர நாட் செல்லும், வேண்டாதவை வெகு சீக்கிரம் நம்மிடம் வந்து ஒட்டிக் கொள்ளுகின்றன. எது எல்லை என்பதையும் தெரிந்து கொள்ளாமல் எதிலே புகுந்தாலும் எல்லை மீறி மனம் போனபடி போய்க்கொண்டே இருக்கிருேம். எல்லை தெரியாமல் சென்றுகொண்டே இருந்தால் முடிவு வீழ்ச்சிதானே!

இதைப்பற்றி நாம் தீர ஆலோசித்துப் பார்க்கவேண்டும். நாம் யார்? சமூகத்தில் இன்று நம்முடைய நிலை என்ன? சுதந்திரத்தை உபயோகித்துக் கொள்வதற்கு எல்லை எது? எந்த விஷயத்திற்குமே எல்லை வேண்டு மல்லவா? அந்த எல்லை எது என்பதைப் பற்றித்தான் பலரும் சிந்திப்பதில்லை.

பகவான் இராமகிருஷ்ண தேவர் ஒரு இடத்தில் சொல்லுகிருர். தீபம் மிகவும் ஒளிவிட்டு எரிகிறது. அதன் வெளிச்சத்தில் பக்த விஜயமும் படிக்கலாம், அல்லது பொய்ப் பத்திரமும் எழுதலாம். ஆகவே செயல்களின் பலாபலன் செய்கின்றவனது மனப்பான்மையைப் பொறுத்ததேதவிர தீபத்தின்மேல் குற்றமோ, அல்லது புகழோ சாருமா?

இதேபோல, சுதந்திரம் என்பது ஒரு தீபம். அதை எப்படி உபயோகிக்க வேண்டும் என்பதே கேள்வி. அதை வீட்டிற்கு விளக்காகவும், கடவுளின் சந்நிதானத்திலே வைத்து மலரிட்டு வணங்கி பூஜிக்கலாம். அல்லது அக்னிக் குஞ்சு என்று கருதி கூரையிலும் ஒளித்து வைக்கலாம். இந்த இரண்டு செயல்களில் எது சிறந்தது என்பதைச் சின்னஞ்சிறு குழந்தைகூட சொல்லி விடும்.

உண்மையை அறிந்து தன்னை வழிபடுவர்களை விட்டு சுதந்திரத் தேவி ஏன் போவாள்? எங்கே செல்ல முடியும்? அடாடா! மறுபடி சுதந்திரத் தேவியா? பெண்ணல்லவா? புருஷர்கள் விழுமின்! எழுமின்!! என்று கோஷிக்கப் போகிருர்கள்—ஜாக்கிரதை.

இதந்தருமனை யினீங்கி இடர்மிகு சிறைப்பட் [டாலும்
சுதந்திரத் தேவி! நின்னைத் தொழுதிடல் [மறக்கிலேனே.

கவிஞன் திருநாள்

ஜானம்மாள்

"சுயராஜ்யத்தைக் கண்ட, ஆம்! நாம்தான் புண்யாத்மாக்கள். நல்ல அதிர்ஷ்டசாலிகள், கொடுத்துவைத்த பாக்கியசாலியுங்கூடதான்" என்று எத்திசை நோக்கினும் எதிர்ஒலி செவிகளைத் துளைத்த வண்ணம் இருந்தது. ஆனால் அசரீர வாக்கொன்று "ரொம்ப வாஸ்தவம். நமது நாடு நமக்கு உரிமையாகிவிட்டது" அமரகவியின் கனவும் பலித்தது. என்றது. கவி அரசின் ஒலி தமிழரின் தூக்கத்தைக் கலைத்தது. இளைஞர்களுக்கு வீரசௌரியத்தையூட்டி தலை நிமிரும்படி செய்தது. அக்கவியரசரின் திரு மாளிகை பூர்த்தியாகிவிட்டது. மூன்று காணி நிலத்தின் மத்தியில் அவரின் மந்திரம் சந்திரனைப் போல் பிரகாசிக்கிறது. அதை தரிசித்தவருக்குதான் புகழும் கீர்த்தியும். எட்டியாபுர சமஸ்தானத்தை தரிசித்தவர்களுக்கே பரிபூரண புண்ணியமும் சித்தியும் கிடைக்கும் என்பதும் உண்மையே.

பாரதியார் என்ற ஒரு லக்ஷிய தமிழ் கவிஞருக்கு தமிழ் மக்கள் காட்டும் மரியாதையின் சின்னம் எட்டியாபுரத்தில் அல்லவோ இருக்கிறது. அவரது திருவாக்கில் மலர்ந்த உண்மைப்பொறி நம் தென்னாட்டின் முழுமையிலும் பளீர் என்று வீசுகிறது. மூலை முடுக்குகள் எங்கும் "ஆடுவோம், பள்ளுப் பாடுவோம். ஆனந்த சுதந்திரம்அடைந்துவிட்டோம்" என்று ஆடிப்பாடி, சகலரும் ஆரவாரம் செய்கிறார்கள். உள்ளத்திலே உண்மை ஒளி இருக்குமானால் வாக்கினில் தானாகவே ஒளி உண்டாகும். அதைத்தான் தீர்க்கதரிசி என்று போற்றுவதும். அப்பெரியாரின் மந்திரத்தை தரிசித்த புண்ணியம் தான் இந்த கட்டுரையை எழுதும்படி எனக்கு அளித்திருக்கிறது. பலன் கிட்டியது சந்தேகமே இல்லை. இதுவும் ஒரு பாக்கியம்தானே.

பல வருஷங்களுக்கு முன்பே இந்த சுதந்திர வித்தை பக்குவமாக இந்திய பூமியில் நட்டு பாமாலைகளைத் தொடுத்து பராசக்திக்கு சாத்திவிட்டார் சுப்ரமணிய பாரதியார். நமக்கு தமிழ் உணர்ச்சியை ஊட்டிய தந்தை யாரும் அவர்தான். தமிழ் வளர்ச்சியும், சுதந்திர உணர்ச்சியும் பெருகுவதற்கு அரும்பாடுபட்டு, அதற்காக வாழ்வில் பலவித துன்பங்களையும் கஷ்டங்களையும் அஞ்சாமல் ஏற்றுச் கொண்டவரும் அவரேதான். அவர் செய் சேவைக்கும், அவர் நமக்கு வைத்துவிட்டுப் போயிருக்கும் விலையில்லாத மாணிக்கங்களான கவிக்குவியல்களுக்கும் நம்மால் ஈடு செய்வது சாத்தியமில்லை என்றாலும் ராமனுக்கு சேது பந்தனத்தில் பங்கை எடுத்துக்கொண்டு உத விய அணில் போல நாமும் வரகவி பாரதியாரின் ஞாபக சின்ன மண்டப கைங்கரிய கோஷ்டியுடன் சேர்ந்து எட்டியாபுரத்திற்கு போய்வந்து விடுவதுதான் சிறந்த யோசனை. பூவுடன் நாரும் மணம் பெறட்டும் என்று உள்ளத்தில் ஒன்று சொல்லிற்று.

பெரியாரின் பழமொழி ஒருபோதும் பழு தாகாது. அதாவது:

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

என்பதைப்போல கவியரசர் உற்சவத்திற் ரயிலில் எப்படியோ தொத்திக்கொண்டு போய் வந்துவிட வேண்டியதுதான் என்று எண்ணி கொண்டிருந்த எங்களுக்கு ஒரு ஸ்பெஷ ரயில்வண்டியே வந்துவிட்டது. அது சாமான் ஸ்பெஷல் என்று நினைக்கவேண்டாம். வங் நாடு கவர்னரும், இந்தியா வைஸிராயாக வர போகும் நமது தமிழ்த்தாயின் புதல்வரான ராஜாஜி அவர்களை அழைத்துக்கொண்டு பெருமையுடன் கிளம்பிப்போகும் பாரதியார் ஸ்பெஷல் அது. அக்டோபர் மாதம் 11ந் தேதி எழும்பூர் ஸ்டேஷனில் கண்டவர் களுக்குத்தான் அதன் பெருமையும் அழகும் தெரியவரும். சுதந்திர மணம் வீசுகிறது ஸ்டேஷன் முழுமையும். எந்த பெட்டியை நோக்கினாலும் தமிழ் மணம் கமழ்கிறது. தமிழ் மந்திரிகள், தமிழ் ஸ்பீக்கர் (Speaker) பெயர்கள் மாயமாகவே வண்டிகள் முழுமையும் பொறித்திட்டிருந்தது. வங்க நாட்டு கவர்னரின் செலூனுக்கு அருகில் கையில் ஈட்டி தாங்கிய சிப்பாய்கள் நிற்கும் தோரணை

ளையக் கண்டதும் மெய்மறந்து ஆனந்தத்தி
ஞல் நாங்கள் கல்லாய் சமைந்து நின்றுவிட்
டோம் சற்று.

ஆனல் ராஜாஜியோ முன்பு இருந்ததுபோல்
தான் கருப்பு மூக்கு கண்ணுடிப் போட்டுக்
கொண்டு சலவை வேஷ்டி கட்டிக்கொண்டு
தூய வெள்ளை ஜிப்பாவுடன் தோற்றமளித்
தார். சூட்டு, கோட்டு எல்லாம் மலை ஏறிவிட்
டது இந்த கவர்னர்களுக்கு. அவர் வந்தவுடன்
புஷ்ப மாலைகள் மலைப்போல் குவிய, போடும்
ஜெயகோஷம் ஈரேழு லோகத்தையும் தாண்டி
அதற்குமேலும் ஊடுருவிச் சென்றிருக்கும்
என்பதில் ஐயமே இல்லை. அந்த ஜெயகோஷம்
சொர்க்கத்திலிருக்கும் கவிச்சக்கரவர்த்தி
பாரதியாரை தட்டி எழுப்பி எட்டியாபுரத்தி
லிருத்திருக்கும் மந்திரத்திற்குப் போகும்
வேளையும் சமயமும் நெருங்கிவிட்டது என்
பதை தெரிவித்து இருக்கும் என்பதில் ஐயமே
யில்லை. ஜெயகோஷத்துடன் புஷ்பமாரி
பொழிகிறது. ஸ்டேஷனில் கூடி குழுமி
யிருந்த மகா ஜனங்களுக்கு அது கிடைத்த
தும், உடனே அவர்களின் முகத்தில் ஒரு
அலாதியான பெருமையும் ஆனந்தமும் பிரகா
சித்தது. ஆகஸ்டு மாதம் 15ந்தேதி இந்தியா
வுக்கு சுதந்திரம் உதயமாகிவிட்டது என்று
டெல்லி மாநகரத்திலிருந்து வந்த செய்தியைக்
காதினல் கேட்டு யாவரும் களிப்படைந்தோம்
என்பது என்னமோ உண்மைதான். ஆனல்
அந்த சுதந்திரத்தை பிரத்யக்ஷமாக நேரிலேயே
கண்டு அனுபவித்து பெருமைபட்டதும்
மகிழ்ச்சி அடைந்ததும் அக்டோபர் மாதம்
ந்தேதி எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில்
தான் என்று சொன்னல் மிகையாகாது.
தேசீய மூவர்ணக் கொடியை கழுத்தில் மாட்
டிக்கொண்டது, புஷ்ப மாலைகளின் மத்தியில்
புதைந்து இருந்த கவியரசரின் உருவப்
படத்தை ஆதரவோடு தன் வயிற்றில் அணை
த்து வைத்துக் கொண்டது. டணு, டணு,
வென்று 7 மணிக்கு மணி அடித்ததும், தலைவி
லிருக்கும் ஜனங்களுக்கு எல்லாம் தான் கவர்ன
ரையும் கவியரசரையும் சுமந்து வருவதை 'கோ,
கோ, கூ, கூ' என்று கூவி தெரிவித்துக்
கொண்டே மேஜர் ஜனரல் என்ஜின் கிளம்பி
ஸ்பெஷலை இழுத்துக்கொண்டு கம்பீரமாக
கிளம்பிவிட்டார். அந்த அழைப்பு சப்தத்
தைக் கேட்டதும் வயலிலிருந்த குடியானவர்
கள், குடிசையிலிருந்த பெண்கள் குழந்தை
குட்டிகளுடனும், எரியும் பந்தத்தை கையில்
ஏந்தி வழி நெடுக நின்றுக்கொண்டு தங்களின்
வரவேற்பை ராஜாஜி அவர்களுக்கு குதூகலத்
துடன் ஆரவாரம் செய்து தெரிவித்துக்
கொண்டார்கள். ஸ்பெஷல் ஸ்டேஷன்களில்
நின்று விட்டாலோ வண்டுகள் ரீங்காரம்
செய்துகொண்டு புஷ்பத்தை மொய்ப்பதுபோல்
ஜெயகோஷமிட்டுக்கொண்டு ஜனம் ராஜாஜி
அவர்களின் செலூனை மொய்த்துக்கொள்ளும்.
அப்பேர்ப்பட்ட மாபெரும் கூட்டம் வருவது
மகாத்மா காந்தி மஹான் ஒருவருக்கு தான்.
ஆனல் அதைப் பார்த்த கண்கள், தமிழ் கவி
யின் மந்திர திறப்பு விழாவுக்குப் போகும்
தமிழ்த் தாயின் தவப் புதல்வரான ராஜாஜி
அவர்களை வரவேற்பதற்காக சமுத்திரம்போல்
திரண்டு உருண்டு வந்த ஜன சமூகத்தைப்
பார்த்தது இதுதான் முதல் தடவையாகும்.
அத்துடன் சுதந்திர மணம் கமழ்ந்திருந்த
தினல் ஆனந்த வெள்ளம் ஜன சமூகத்தில்
கரைபுரண்டு ஓடியது குறிப்பிடத்தக்கதாகும்.

காலை 8 மணி இருக்கும், விருதுநகரை
பாரதியாரின் ஸ்பெஷல் வந்தடைந்தது. அங்கு
குழம்பியிருந்த திருநெல்வேலி அன்பர்கள்
தமிழ் கவர்னரையும், மந்திரிமார்களையும்,
தமிழ் அன்பர்களையும் சும்மா விட்டுவிடுவார்
களா? அந்த ஸ்டேஷனில் ஏற்பாடாக அமைந்
திருந்த மேடைமீது ராஜாஜியையும் பிரதம
மந்திரியையும் ஏற்றிப் பேசும்படி செய்துவிட்
டார்கள். மற்ற மந்திரிமார்களும் அன்பர்
களும் மேடையின் கீழ் இருந்துகொண்டு
காற்றை உல்லாசமாக வாங்கி அனுபவித்துக்
கொண்டிருந்தார்கள். மேஜர் ஜனரல் என்ஜின்
தன் குறிப்பிட்ட நேரத்துக்குச் சரியாக கூச்
சல் போட்டுக்கொண்டு மளமள வென்று
கிளம்பிவிட்டார். ஆனல் வண்டித்துடர் வெகு
லேசாகயிருந்த காரணத்தை அறிந்தவுடனே
கிளம்பிய வண்டி நின்றுவிட்டது. பிரதமரின்
பேச்சு முடிந்த பிறகுதான் எல்லோரும் ஆர
அமர வண்டியில் ஏறி உட்கார்ந்துக் கொண்
டார்கள்.

வந்ததையா, கோவில்பட்டி! பாரதி வாழ்க
தமிழ் வாழ்க. என்ற முழக்கம் வானை முட்டி
யது (இடித்தது). தலைவர் ராஜாஜியையும் மந்
திரிமார்களையும் அன்பர்களையும் வரவேற்க
ஸ்டேஷனில் வரவேற்புக் கமிட்டியார் மாலை
யும் கையுமாக காக்ஷியளித்தனர். ராஜாஜியை
குதூகலத்துடன் வரவேற்று கவர்னருக்குரிய
விசேஷ மரியாதைகளோடும் நம் தமிழ்த்
தாயின் அரும் செல்வருக்கு உரிய விசேஷ
அன்போடும் எட்டியாபுரம் அழைத்துச் சென்
றனர். நாங்களும் வாடி வதங்காமல் காரில்

அழகிய பட்டு

சிறந்த வேலைப்பாடுக்கும், உயர்ந்த தரத்துக்கும், நீண்டகால உழைப்புக்கும் இந்தியாவெங்கும் பெயர் போனவை மைசூர் பட்டு ஆடைகள், மனத்திற்குகந்த பல கலர்களில் கிடைக்கும். மைசூர் கிரேப்--டி--ஷினே, ஜியார்ஜெட்டுகள், ஸாடின்கள் உங்கள்

அழகுக்கு அழகு செய்யும்

MSK 7

A MYSORE GOVERNMENT PRODUCT, GOVERNMENT SILK WEAVING FACTORY, MYSORE

ஏறிக் கொண்டு எட்டியாபுரத்தை 10 மணிக்கு அடைந்தோம்.

அடாடாடா! இதையா நமக்கு நாட்டுப்புறம், என்றும் கிராமம் என்றும் சொல்லி ஏமாற்றினர்கள். சென்னை தார் ரோட்டுகளிலாவது பள்ளமும் குழிகளும் கணக்கில்லாமல் விழுந்திருக்கும். இந்த எட்டியாபுரத்தில் பேஷான கப்பி ரோட்டு தாம்பாளம் போலல்லவா துலங்கினது. தண்ணீர் இல்லாத பாலைவனம் இது என்றார். தண்ணீர் தொட்டிகளிலிருந்தும், தண்ணீர் வாகனங்களிலிருந்தும், ஓஸ் பைப் வழியாக அருவிபோல் சதா கொட்டிக் கொண்டேயிருக்கிறதே ஜலம்! வரும் அதிதிகள் கூடங்களின் ரேஷனை கொண்டுவர வேண்டும் ன்று விளம்பரம் செய்திருந்ததைக் கண்டதும் சற்று பயமாகவே இருந்தது. ஆனால் ங்கள் வரையிலும் நல்ல வெண்ணெய் காய்ச்சிய நெய்யுடன் இரண்டு வேளையும் பருப்பு ாம்பாருடன் நல்ல விருந்து சாப்பாடு தான் கிடைத்தது. இது பாரதியாரின் மகிமை ன்றுதான் சொல்ல வேண்டும்.

சுமார் ஐந்து லக்ஷம் ஜனங்களுக்கு குறையில்லாமல் குவிந்திருந்தனர். நிமிஷத்துக்கு மிஷம் எட்டியாபுரத்திற்கு வந்த பஸ் ஜனங்களை அள்ளிவாரி கொட்டி விட்டு காலியாகவே காவில்பட்டிக்குத் திரும்பும். அந்த வைபவ ிழா அகில இந்திய காங்கிரஸ் மகாநாடு பால இருந்ததேயன்றி கவியின் மந்திர ாதாரண திறப்புவிழாவாக தோன்றவே ல்லை.

12ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 ணிக்கு ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் ின்னிசைக் கச்சேரி மேடை மீதில் ஆரம்பமாயிற்று. ஏறக்குறைய அதே சமயத்தில் ரு மேகங்கள் திரண்டு குமுறியது. சற்று குளிர்ந்த மழைக்காற்றும் வீசியது. இரண்டு ுக்ஷதைகளும் விழுந்தன. ஆனால் கச்சேரி ந்தலில் கூடியிருந்த 50,000 ஜனங்களைக் ண்டதும் அஞ்சி மேகம் கரைந்து மாயமாக மறைந்து போனதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.

13ந் தேதி, எட்டியாபுரத்தில் தீபாவளி ற்சவம்தான். அவரவர் விடியற்காலை 3 ணிக்கே எழுந்து ஸ்நானம், அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, பந்தலில் இடம் பிடித்துக்கொள்வதற்கு கிளம்பிவிட்டார்கள். கூப்பியையும் மறந்து ராஜாஜி அவர்கள் கவியரசின் மண்டபத்தை திறந்த வைபவத்தை ஒரு சிலரேதான் காண முடிந்தது. ஏன் என்றால் பிரசங்க மேடைக்கு பாரதியாரின் மந்திரம் வெகு தூலவிலிருந்துவிட்டது. பிறகு எப்படியோ ராஜாஜி அந்த ஜன சமூகத்தில் மிதந்து வந்து மேடை மீதில் ஏறிவிட்டார். ராஜாஜி பேச ஆரம்பித்ததும் பந்தலில் சாந்தி நிலவியது. ஜனங்களுக்குள் பொறுமையும் உண்டாகிவிட்டது. ராஜாஜி, கவி பாரதியாரைப் பற்றி அருமையாகப் பேசிவிட்டு நம் சென்னைதான் இந்தியா முழுமைக்கும் ஒற்றுமையிலும் அமைதியிலும் வழிகாட்டியாக இருக்கிறது என்று கூறினர். பிறகு பேசியவர்கள் எல்லோரும் பாரதீயத்தின் தத்துவங்களை தங்களுக்குத் தோன்றிய விதத்தில் வெளியிட்டுக் கொண்டனர். எல்லோரும் வெகு அழகாகவும் சுருக்கமாகவும் பேசினபடியால்தான் குறிப்பிட்ட நேரத்திற்குள் சபை முடிவடைந்தது.

(1) அவ்விழா பொதுவுடமை தோரணையில் நடந்தேறியது. பிரத்யேகமாக நடத்துகிறவர் ஒருவர் இருப்பதை எடுத்துக் காட்டவேயில்லை. பாரதியாரின் கொள்கையும் அதுதானே.

(2) கடைசியில் கல்கி ஆசிரியர் அவர்கள் வந்தனோபசாரம் கொடுக்கையில்தான் அந்த பாரதியாரின் விழாவிற்கு T. சதாசிவன் அவர்களும், கல்கியும் ஆர்கனைசர்கள் என்பதை நினைப்பு மூட்டியது.

கலைக்கோவில் திறப்புவிழா அமோகமாகவும் வெற்றிகரமாகவும் நடந்தேறியது. விழாவில் குறை எதுவும் கண்டுபிடிப்பதற்கு முடியவில்லையே என்று சிலருக்கு வருத்தங்கூட இருக்கலாம்.

13ந் தேதி திங்கட்கிழமை பகல் 2-45-மணிக்கு கிளம்பிய அதே பாரதி ஸ்பெஷலில் எங்கள் கூட்டமும் கிளம்பிவிட்டது. மதுரையில் பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட இட்லி, வெண் பொங்கல், சட்டினி, பழம் முதலியவைகள் அடங்கிய கூடை ஒன்றை எங்களுக்குக் கொடுத்து உபசரித்தனர். நாங்கள் வண்டியில் கும்மாளம் அடித்து களித்துக்கொண்டு வந்ததை மறக்கவே முடியாது. இதை வாசிக்கும் நீங்களும் எட்டியாபுரத்திற்கு வர கொடுத்து வைக்கவில்லையே என்று கண்டிப்பாய் வருந்துவீர்கள்.

ஜெய் ஹிந்த் !

பெண்களின் உரிமைகளும் கடமைகளு

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள் B.A.,

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இந்த நிலைமையில் பண்புக்கு வேண்டிய கல்வி, சித்திரம், சிற்பம், சங்கீதம் முதலிய கலைகள், இயலிசை நாடக வளர்ச்சி இவையெல்லாம் பரவுவதற்கு வேண்டிய ஆதரவு இல்லாமற் போயிற்று. ஆண் மக்கள் கல்வியே இவ்விதம் குறைந்து போனபோது பெண் மக்களுக்கு ஒரு சிறிது கல்விகூட இல்லாமற் போயிற்று. இந்தப் பழைமைப் பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டு எழுத்து வாசனையேயின்றி இயற்கையறிவைக் கொண்டும் பெரியோர்களுடைய பரம்பரையான வழக்க பழக்கங்களை பின்பற்றியும் குழந்தைகளைப் பெற்று வளர்த்துக்கொண்டும் இருந்தனர்.

இந்த நிலைமையில் ஆங்கிலேயர் ஆதிக்கம் இந்தியாவில் நிலைத்து அவர்களது பாஷை, நாகரிகம், வழக்க பழக்கங்கள் யாவும் பரவத் தொடங்கின. நாட்டில் அமைதி நிலவியது—அநேகம் வருஷங்களாக வெளி நாட்டாருடன் யுத்தங்களினாலும், உள்நாட்டுக் கலகங்களினாலும் நொந்துபோயிருந்த நம் ஜனங்களுக்கு இந்த அமைதி ஒரு பெரிய பாக்கியமா யிருந்தது, ஆறுதலா யிருந்தது. ஆயினும் இந்தியாவில் ஏற்பட்ட நீண்டகால அமைதியின்மையினால் பொது மக்கள் தங்கள் பழைய நாகரிகம், கல்வியறிவு, செல்வம் எல்லாவற்றையும் சிறிதளவு இழந்திருந்தமையால் ஆங்கிலேயரது பாஷை, நாகரீகம், வழக்க பழக்கங்களெல்லாம் நம் மக்களுக்கு ஒரு மோகத்தை யுண்டாக்கினது. மேலும் மெக்காலே என்பவரின் ஆலோசனைப்படி இந்தியாவில் ஆங்கில அரசாட்சியில் அவர்களிடம் உத்தியோகம் வகிப்பவர்கள் யாவரும் அவர்களிடம் ஆங்கில பாஷையிலேயே பேச வேண்டும். குமாஸ்தா முதல் யாவரும் ஆங்கிலம் கற்க வேண்டுமென்று தீர்மானித்து அநேகம் ஆங்கிலப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. மேதாவிகளான, அறிவாளிகளான நம் மக்கள் சிலர் ஆங்கிலேயர்களை விட திறமையாக ஆங்கிலம் பேசும் சக்தி வாய்ந்தவர்கள். எற்கனவே எல்லாவற்றையும் இழந்து எழைகளாகி யிருந்த பொதுமக்கள் வயிற்றுப் பிழைப்புக்கு வேண்டிய உத்தியோகம் கிடைப்பதற்காக ஆங்கிலம் கற்க ஆரம்பித்தனர். நாட்டுத் தொழில்கள் யாவும் அரசாங்க ஆதரவின்றி படுத்துப்போயின. ஜனங்களுக்கு கிருஷித் தொழிலும், சர்க்கார் உத்தியோகமும்தான் மீதியிருந்தன. கிராமங்களிலிருந்து பயிர்த் தொழில் செய்த 100-க்கு 90 விகிதம் ஜனங் களுக்கு தாய்ப் பாஷையைக்கூட கற்பதற்கு வேண்டிய வசதி யில்லை. பாக்கி சுமார் 10 விகிதம் ஜனங்கள் ஆங்கிலம் கற்று பல அடிமை வேலைகளில் அமர்ந்தனர். ஆங்கிலம் கற்ற அவர்கள்தான் நாகரீகம் உடையவர்கள் என்றும் கல்வியறிவில்லாதவரும் அல்லது தாய் பாஷை மட்டும் கற்றவர்களும் நாகரீகமில்லாதவர்கள் என்றும் கருதப்பட்டனர். தாய் பாஷை யறிவு அறிவாகவே கருதப்படவில்லை. ஆங்கில பாஷை அவர்களது நாகரீகம், வழக்க பழக்கங்களில் எல்லாம் நம்மவர்களுக்கு ஒரு புதிய மோகம் ஏற்பட்டது. ஆண்கள் போகும் வழிதானே பெண்ணுக்கும். ஆகவே இந்தப் புதிய மோகம் பெண்களையும் பிடித்துக் கொண்டது. பழைமைத் தாய்மார்களின் இந்தப் புதுமைப் பெண்கள் புதிய ஆங்கில நாகரீகத்தில் 4 வார்த்தை இங்கிலீஷ் பேசுவதில் பெருமையும், எனக்கு Tamil ஏ பிடிக்கவில்லை Tamil பாடமே எனக்கு Difficult ஆ யிருக்கிறது, French அல்லது Latin பாஷையை இரண்டாவதாக எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லுவதில் ஒரு மதோன்மத்தமும் உடையவராயிருக்கின்றனர். நாகரீகம் நிறைந்த பட்டணங்களில் சென்று பார்த்தால் நடுவகுப்புப் பெண்களும், உயர்ந்த குடும்பப் பெண்களும் நடத்தும் வாழ்க்கையைப் பார்த்தால் நான் சொல்வதின் உண்மை நன்கு விளங்கும். நிற்க,

காலம் மாறிக்கொண்டே வருகிறது. பத்து இருபது வருஷங்களாக ஆங்கில மோகம் குறைய ஆரம்பித்திருக்கிறது. நாட்டுப் பற்று, மொழிப் பற்று, மதப்பற்று எல்லாம் ஜனங்களுக்கு உண்டாகி வருகிறது. மஹாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, ஸரோஜினி தேவி முதலான அநேகம் தேச பக்தர்கள், தலைவர்கள் தோன்றி, மறைந்து போன ஒரு வீர உணர்ச்சியை, சுயமரியாதை உணர்ச்சியை ஜனங்களுக்கு உண்டாக்குகின்றனர். தேசத்திலேயே ஒரு பெரிய மாறுதலையுண்டாக்கக் கூடிய இந்தக் கிளர்ச்சிக் காலத்தில் பெண் மக்களுடைய கடமை யாது அவர்களது உரிமைகள் யாவை என்பதை ஆராய்ந்து அவர்களை நல்ல சரியான மார்க்கத்தில் செலுத்த வேண்டியது பெரியோர்களுடைய பொறுப்பாகும்.

சின்ன விஷயந்தான்!

'பாம்போடு பழகேல், நீர் விளையாடேல் என்றெல்லாம் எச்சரிக்கை செய்கின்றன பழமொழிகள். ஆனால் பொழுது விடிந்ததும் அடுப்பைப் பற்றவைக்க வேண்டியிருக்கிறது நமக்கு. நெருப்போடு விளையாடுகிறோம் என்று கூடச் சொல்லி விடலாம். ஆனால் எவ்வளவு எச்சரிக்கையுடன் இருக்கவேண்டுமென்பதை அடுப்பு ஒவ்வொரு நிமிஷமும் நினைவு மூட்டிக்கொண்டே இருக்கிறது. "கண்ணொன்று நோக்க, விழியொன்று நாடக் கருத்தொன்று எண்ண," என்று மன ஒருமையில்லாத பூசை பயனற்றது என்று சொன்னார்கள் பெரியவர்கள். ஆனால் பூசைமட்டும் தானா? இல்லை. எல்லா வேலைகளுமே ஒருமனப் பட்டுக் கருத்தோடு செய்தால் தான் சுலபமாகவும், சௌகரியமாகவும் செய்ய முடியும். அடுப்பைப் பற்றவைக்கும் பொழுதே மேன் மேலும் செய்ய வேண்டியவைகளை முன் கூட்டி யோசித்து, வேண்டியவைகளை எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். அவசர அவசரமாய் வேலை செய்வதாய் நினைத்து 'குடு குடு' வென்று இங்கும் அங்கும் நடந்து பொழுதைச் செலவு செய்து விடுகிறோம். பல சமயங்களில் முக்யமான சிறு விஷயம், பிடித்து இறக்குவதற்கு வேண்டிய துணி, அல்லது இடுக்கி இவைகளை முதலிலேயே எடுத்துத் தயாராய் வைத்துக் கொள்ள மறந்து விடுகிறோம். பிறகு அவசரத்தில் அண்டாவில் கூட கை நுழையாது. பால் பொங்கி வரும். முன்றானையை பிடித்து இறக்குவோம். இப்படி முன்றானையால் இறக்கி விபத்துக்கு ஆளான பலரை நமக்குத் தெரியும். இருந்தாலும் ஏன் அப்படிச் செய்ய வேண்டும் என்பதைத் தான் சிந்திப்பதில்லை. இதென்ன பிரமாதம்! சின்ன விஷயந்தான் ஆனால்—?

* * *

கதவைத் திறக்கும் பொழுதும் சரி மூடும் பொழுதும் சரி, அருகிலிருப்பவர்களை அதிலும் முக்யமாய்க் குழந்தைகள் அருகிலிருக்கிறார்களா என்று முதலில் கவனிக்க வேண்டும். சிற்சில வீடுகளில், காற்று வீசி அடித்தாலும் அல்லது கதவின் இசைப்பு, பழையதாகித் தளர்ந்திருந்தாலும் தானே மூடிக்கொள்ளும். எல்லா வீடுகளிலுமே திறந்தால் நிறுத்து வதற்கு கொக்கியோ இசைத்திருக்குமா? இராது. நாம் அவசரமாகக் கதவை மூடுவோம். எதிர்பாராத விதமாய்க் குழந்தைகள் எங்கேயாவது ஓரிடத்தில் பிடித்தவண்ணம் நின்றிருப்பார்கள். அழுதபிறகுதான் விஷயம் நமக்குப் புலனாகிறது. பிறகு நெடுநாள்வரை, பேசத் தெரியாத சிறு குழந்தையானாலும், அந்தக் கதவைச் சுட்டிக் காட்டிக் குற்றம் சாட்டும் கண்களுடன் நம்மையும் பார்க்கும். இதேபோல், டிராயர்கள், திறந்து மூடும் பொழுதும் வெகு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பார்க்கப் போனால் சின்ன விஷயம் தான்.

* * *

அவசரமாய் காய் கறி நறுக்குகிறோம், ஏதோ கொஞ்சம் சில்லறையாக வேலை இருக்கிறது. இஞ்சி, பச்சைமிளகாய் இவைகளுக்காக அரிவாள் மணையை நிற்கும் நிலையிலேயே வைத்து விட்டு எழுந்து விடுகிறோம். நம

முடைய நாட்டிலே எல்லாப் பொருள்களும், 'ஆளும் பண்டங்கள் அறுபத்து நாலும்' கலையுணர்ச்சியுடன் கூடித்தான் இருக்கும். அரிவாள் மனைக்கு மயில் மூக்கோ, அல்லது தலையில் தேங்காய்த் துருவியாய் உபயோகிக்கும்

வட்ட வளையோ இருக்கும், அவசரமாய் எழுந்தால், புடவை அதில் மாட்டித் தடுக்கி கணுக்காலையே வெட்டிக் காயமாக்கி விடும். இப்படிச் சிறு பெண்கள் வேலை செய்யும் பொழுது பல முறைகள் நேருவதையும் பார்க்கிறோம். எழுந்திருக்கும் பொழுதே அரிவாள் மனையைப் படுக்க வைத்து விட்டால்?

★ ★ ★

கண்ணிற் கண்டவைகளை எல்லாம் பொறுக்கிப் போட்டுக் கொள்ளுகிறது குழந்தை. அதைக் கவனிக்கவே நேரம் போதாது. பல் முளைத்து விட்டதோ கேட்கவே வேண்டாம், அகப்பட்டவர்கள் தோள்களையெல்லாம் பதம் பார்க்கும். இது உடல் நலத்தைப் பாதிக்கும் வயிற்றுக் கோளாறுகளை உண்டாக்கும் இதையும் தாண்டி

னால் வாழைமட்டை, நார் முதலியவைகளைக் கையில் எடுத்து அழகாய் கடிக்கும். வாழை மட்டைதானே கடித்து விட்டுப் போகட்டும் என்று அசட்டையாய் விட்டு விட்டாள் ஒரு தாய். தற்செயலாய் ஒரு நாள் சேம்பு மட்டையும் இலையுமாய் வாங்கி வைத்திருந்ததை எடுத்துக் கடித்து விட்டது குழந்தை. அது என்ன பாடு பட்டது என்பது கடவுளுக்குத்தான் தெரியும். விஷயம் அற்பந்தான், ஆனால்—?

★ ★ ★

சின்னஞ் சிறு அறைகள் இந்தப் பஞ்ச காலத்திலே இவ்வளவாவது வீடென்று கிடைத்திருக்கிறதே என்று பூரித்துப் போக வேணும். குழந்தைகளோ விஷமக் கொடுக்குகள். இந்த நிலையில் அவர்களைத் தனியே விடலாமா? நம்முடைய தோழிகள் வருகிறார்கள், ஆனந்தமாய் மெய்மறந்து பேசுகிறோம். வெற்றிலை போட்டுக் கொள்ளுகிறோம். எழுந்து போகும் அவளை வழியனுப்ப வாசல் வரை போகிறோம். குழந்தை தவழ்ந்து வந் சுண்ணாம்பை எடுத்து வாயிலே போட் கொள்ளுகிறது. பிறகு வந்து பார்த்தா தெரிகிறது. ஓடுகிறோம், மஞ்சட் பொடியை போட்டு வாயைத் துடைக்கிறோம். கிளி ரைன் கொடுக்கிறோம், ஆனால், பயனென்ன குழந்தை வாய்வெந்து ஒருவாரம் வரை பா குடிக்கச் சிரமப்படுகிறது. ஒன்று தாம் ளத்தையாவது மேலே வைத்திருக்கலா அல்லது குழந்தையையாவது எடுத்து வை துக் கொண்டிருக்கலாம், இரண்டில் ஒன் செய்திருந்தால்?—

★ ★ ★

ஆம்! பார்க்கப்போனால் இவைகளெல் சின்ன விஷயங்கள் தான்! ஆனால் சுணம்த னால் ஏற்படும் தொல்லைகளும் விபரீதங்க அனந்தம். எண்ணைக் கையோடு ஒரு யையும் செய்யக் கூடாதென்பது தெரி ஆனால் எப்பொழுதும் ஒரே மாதிரி செய்ய முடிகிறதா? என்று நாமே ஒரு தானத்தைக் கற்பித்துக் கொள்ளுகிறே எண்ணையில் செய்த பக்ஷணமோ, அல் எண்ணெய் நெய் இவைகளுடன் சம்ப பட்ட பாத்திரம் பண்டங்களையோ எடுக் றோம். கையில் ஒட்டியும் ஒட்டாமலு ஓரளவு எண்ணெய் படுகிறது. உட கைகளைச் சுத்தமாகக் கழுவி துடைத் கொள்ளவேணுமென்பதும் தெரியும். ஆ சோம்பலினாலோ, அசிரத்தையினாலோ மலிருந்து விடுகிறோம். அவசரமாய், பாத்திரத்தையோ அல்லது கண்ணாடி சாம களையோ எடுக்க வேண்டி வருகிறது.

ம்பவம் நினைவில் இருப்பதில்லை. அவசரமாக டுக்கிறோம், கை வழுக்குகிறது. முடிவென்ன? ாத்திரங்கள் உடைந்தோ நசுங்கியோ ோகின்றன. பண்டம் பாழாகிறது. முத லிலேயே ஒரு நிமிஷம் நிதானித்துக் கைகளைக் கழுவியிருந்தால்? எண்ணெய் தேய்த்துக் கொள்ளுமுன் நகைகளைக் கழற்றி வைப்பது வழக்கம். சோம்பல் காரணமாக பெட்டியைத் திறந்து உள்ளே வைப்பதில்லை. காகிதத்திலே
சுற்றி எங்கே
யாவது வைக்
கிறது. எடுக்
கும் பொழுது
மறதியினால்
டதறி விடுகி
து. இரண்
ரை காரெட்
வரத்தோடு
ள் தீக்ஷதர
த்து மாமி
திய தாய்
ங்கி போட்'

க் கொண்டவை. காகிதத்திலே பொட்டலமாய்
டி ஐந்தரை பெட்டியில் வைத்தாராம். காய்கறி அரியும் பொழுது அவர் பெண் சுந்தரி எடுத்து வந்து கொடுத்திருக்கிறாள். இடது கையினால் வாங்கிப் பக்கத்தில் வைத்துக் கொண்டாராம். பிறகு அந்த விஷயமே மறந்து விட்டது. காய்கறிக் குப்பையோடு காகிதமும் குப்பை மேட்டை அடைந்தது. சாப்பிடும் பொழுது தான் அவருக்குக் கம்மலைப் பற்றிய ஞாபகம் வந்தது. எழுந்து ஓடினார். குப்பை மேட்டில் காகிதம் மட்டும் கிடந்தது, பெரிய தென்னந்தோப்பு. வெளிமனிதர்கள் நடமாட்டம் அதிகமில்லை. ஆகவே காக்கை பொட்டலத்தைத் தூக்கி இருக்கலாமென்ற அனுமானம். ஒரு தென்னைமரம் பாக்கியில்லாமல் ஏறித் துழாவினார்கள் கூலி ஆட்கள். ஒரு தோடு தென்னைமரத்தின் மேலிருந்து கிடைத்தது. தோப்பிலுள்ள கிணறுகளை யெல்லாம் 'தூரு' எடுத்தார்கள். மற்றொன்று அகப்படவேயில்லை. பொருள் விலையுயர்ந்தாகவே இவ்வளவு முயற்சிகள். சாதாரணமாயிருந்தால் வீண் மனவருத்தம் தான் மீதியாகும். கூடுமானவரையில் முன் எச்சரிக்கையோடு பெட்டியிலேயே வைத்திருந்தால்—?

கூனல் விழுவானேன்?

ஸ்வர்ணம்

'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்டபார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்' என்று பாடிவைத்துப் போய்விட்டார் அமரகவி பாரதி. அவர் நடை என்று குறித்தது எதை, என்று ஆராயவேண்டியதே இல்லை. ஆனல் பாரதியார் இன்று நம் நாட்டு நவயுவதிகளைப் பார்த்தால் அவருக்கே தடுமாற்றமாகிவிடும். அதுவும் மாணவிகள் பள்ளிக்கூடங்களுக்கு செல்லும் பொழுது பார்த்தால்!

மாணவர் குழாத்துள் 'கூனல்' ஒரு நவநாகரிகச் சின்னமாகக் கருதப்படுகிறது. அன்னநடை கற்கப் போய்த் தன் நடையும் கெட்டகதை போல இன்று இளம் பெண்கள் கூனி நடப்பது அழகென்று கருதி உடலை விகாரப்படுத்திக் கொள்வதோடு மட்டுமின்றி ஆரோக்கியத்தையும் கெடுத்துக் கொள்கிறார்கள். கூனி நடப்பதனல் எவ்வளவு கெடுதல்கள் உண்டாகிறதென்று தெரிந்தால் பிறகு ஒருவரும் அப்படி நடக்கத் துணியமாட்டார்கள். நடப்பது மட்டுமென்ன? நிற்கும் பொழுதும், உட்காரும் பொழுதும், பாடும் பொழுதும் படிக்கும் பொழுதும் முதுகை வளைத்து தோள்பட்டைகள் துவளும்படிதான் உட்காருகிறார்கள். நம் நாட்டு விக்ரகங்களிலே, மூன்று வளைவுகளுடன் கூடி தேவி நிற்கும் நிலையை 'த்ரிபங்க' என்று குறிப்பதுண்டு. தற்காலப் பெண்கள் அதற்கும் மேல் ஒரு படி தாண்டி விட்டார்கள். இவர்கள் செய்து கொள்ளும் வளைவுகளைக் கணக்கிட்டால், சப்தபங்க, நவபங்க, என்றுகூடச் சொல்லி விடலாம்.

அவசர அவசரமாய்ச் சாப்பிடவேண்டியது, பள்ளிக்கூடம் போக வேண்டியது. இத்துடன் நம்முடைய வேலைகள் முடிந்து விட்டதென்றும், பெண்கள் மற்ற விஷயங்களில் தம்மைத் தாமே திருத்திக் கொள்வார்களென்றும் எதிர்பார்க்கிறோம். ஆனல் நம்மையும் மீறிச் சில சமயங்களில், தலைவாரிப் பின்னிவிடும் பொழுது கூனலைக் கண்டு நமக்குக் கோபம் வருகிறது. அந்த அவசரத்திலே, சிந்திக்கவோ, திருத்தவோ நமக்கு அவகாசம் ஏது?

இந்தக் கூனல் விஷயத்தில் நமது பிள்ளைகளும் ஒன்றும் சளைத்தவர்களல்ல. நிற்கும் பொழுது நிமிர்ந்து நிற்பதில்லை. உட்காரும் பொழுதே முதுகு வில்போல் வளைந்து ஒரு முழம் பின்னே நிற்கிறது. தலைமட்டும் முன்னே நீண்டு விடுகிறது. நிற்கும் பொழுதும் பூவின் கனந்தாங்காத சூரியகாந்திச் செடிபோல வளைந்து கொள்கிறார்கள்.

'இருக்கிற உலகத்தில் ஒழுங்காய் வாழத் தெரியாமல், எங்கேயோ பறக்கிற உலகை நினைத்து தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் மூடர்கள் இந்தியர்கள்' என்று பழிக்கிறார்கள் பிற நாட்டினர். ஆனல் நமது குழந்தைகளோ விண்ணை நோக்கி நிமிர்ந்து நில்லாமல் மண்ணை நோக்கி வாடுவானேன்? இது தான் விளங்காத விந்தை. இந்த விந்தை மனிதருக்காகவேதான் 'குன்றென நிமிர்ந்து நில்' என்று ஆத்திசூடி எழுதினர் பாரதியார்.

உடல் கூனுவதால் உள்ளமும் கூனிவிடலாம் என்று நினைத்தே நம் பெரியவர்கள், ஒவ்வொருவரும் யோகாசனப் பயிற்சிகளைச் செய்ய வேண்டுமென்று விதித்தார்கள். ஆனல் இன்று நமக்கு அவைகளின் உயர்வு தெரிகிறதில்லை. தெரிந்தாலும் பின்பற்றி நடக்கச் சோம்பல். யாராவது துணிந்து செய்தாலும் "ஆளைக்கண்டு ஆசனம் போடு" என்று பரிகசிக்கிறோம்.

ஆணுக்கும் சரி, பெண்ணுக்கும் சரி, வளைந்த முதுகினல் வரும் தீமைகள் அனந்தம். அதைத் தெரிந்து கொள்ளுமுன் சரீர அமைப்பையும் சற்றே கவனிக்க வேண்டும். நமது சிரத்தையும், இடுப்பு வரையிலுள்ள சரீரத்தையும் தாங்கி நிற்பது முதுகெலும்பு. இது முப்பத்திரண்டு சிறு எலும்புகளால் இணைக்கப்பட்ட ஒரு கோவை. இது உட்புறம்

சதையாலும், தசைநார்களாலும் நிலை நிறுத்தப் பட்டு உபயோகப் படுகிறது. இந்த இணைப்பின் உட்புறம் மெல்லிய குழல் போன்ற பகுதி ஒன்று நேராகச் சிரத்திலிருந்து முடியும் வரை செல்லும். இது ஒரு வாய்க்கால் போன்றது. இதன் வழியாக மெல்லியதும் ஜீவாதாரமானதுமான ஒரு அதிசய நரம்பு ஓடுகிறது. இதை (Spinal Cord) என்றும் முதுகு நரம்பென்றும் கூறுவர். மூளையிலுள்ள பொருளே நீண்டு இந்த முதுகு நரம்பாக வந்திருக்கிறதென்று உடல் கூறு நூல் சொல்லும்.

முதுகெலும்புகள் எல்லாவற்றிலும் பக்கங்களில் துவாரங்கள் உண்டு. இந்தத் துவாரங்களின் வழியாகச் சிறிய நரம்புகள் முதுகு நரம்புகளுடன் சேர்க்கப்பட்டு இரண்டு பக்கங்களிலும் பிரிந்து செல்கின்றன. இவைகளுட் சில மூளைக்கு விஷயங்களை அறிவிக்கவும், வேறு சில மூளையிலிருந்து வரும் உத்திரவுகளை மற்ற அங்கங்களுக்கு அறிவித்து அதன்படி நடக்கவும் உபயோகப்படுகின்றன. முதுகெலும்புகளின், அதாவது நீண்ட வீணை தண்டத்தின் இருபக்கங்களிலும் நம் இச்சையில் அடங்காது வேலை செய்யும் அதிசூட்சுமமான நரம்புச் சக்கரங்கள் (Sympathetic Gangila) அமைந்து மூளையுடன் இசைந்து நிற்கிறது. இதை முதுகு நரம்பின் ஒவ்வொரு பகுதியும் தலையிலிருந்து கால் வரையிலும் உள்ள ஒவ்வொரு அங்கத்தையும் ஆட்சி செய்கிறது.

இந்த முதுகெலும்பானது நேராய் நிமிர்ந்து நின்று அப்படியும் இப்படியும் சொற்ப சலனத்துக்கு ஏற்பட்டதே தவிர வளைந்து நிற்கும் பொருட்டுப் படைக்கப் படவில்லை. வளைவது அனாரோக்கியம். காச நோயுள்ளவர்கள் இருமல் காரணமாக முதுகு கூனிக் குரங்குகள் போல் உட்காருவதையும், நிற்பதையும் அனுபவத்தில் பார்க்கிறோம். பரிணாம தத்துவத்தின்படி (அதாவது டார்வின் கொள்கைப்படி) கூன் நிமிர்ந்திருப்பதுதான் மனிதருக்கு உரிய லட்சணங்களுள் ஒன்று என்றும் நமக்குத் தெரியும். ஆனால் நாம் என்ன செய்கிறோம்? இதைத் தான் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் யோசித்துப் பார்க்கவேண்டும்.

நிமிர்ந்து நிற்கும் பொழுது முதுகைச் சேர்ந்த ரத்தாசயங்களும், சதைகளும், நரம்புகளும், இயற்கையான நியதிப்படி வேலை செய்து ஆரோக்யத்தை அளிக்கின்றன. சுவாச கோசம் அகன்று பரவி நிற்கும். இருதயம் இறுக்கமற்றுத் தாராளமாய் வேலை செய்யும். ஆகாரக் குழாயும் ஒழுங்காக இருக்கும். சுவாசம் பூரணமாகவும் சமமாகவும் ஓடும். மார்பையும் வயிற்றையும் இரண்டு பகுதிகளாகத் தடுத்துக் கொண்டிருக்கும் சதைவளைவானது (Diaphragm) சிரமமில்லாமல் சுவாசத்தின் ஓட்டத்திற் கிணங்க அசையும். வயிற்றிலுள்ள குடல், பெருங்குடல், ஈரல், மண்ணீரல் இவைகள் சரியான நிலையில் நிற்கும். இதனால் தான் கூன் முதுகர்கள் கூட உயர்ந்த குரலில் பேசும் பொழுதும் பாடும் பொழுதும் நிமிர்ந்து கொள்ள வேண்டி நேருகிறது.

கூனல் விழுவானேன் என்று கேட்டுவிட்டு, உடற்கூறு நூலைப்பற்றி விவரிப்பானேன் என்று உங்களுக்குத் தோன்றும். ஆனால் கூனல் உண்டாவதால் உடலில் ஏற்படக்கூடிய மாறுதல்களும், தீங்குகளும் தெரிந்தாலல்லவா கூனல் ஏற்படும் காரணங்களை ஆராய்ந்து சீர் திருத்திக்கொள்ள வேணுமென்ற மனோபாவம் ஏற்படும். கூனிக் கொள்வதனால் ஏற்படும் தீங்குகள் ஆண்களைவிடப் பெண்களைத்தான் அதிகம் பாதிக்கின்றன.

தற்காலப் பெண்கள் 'கூனி' களாயிருப்பதற்கு அவர்கள் மட்டும் காரணமல்ல, தாய்மார்களும் ஓரளவு குற்றவாளிகளே.

ஒரு காலத்தில் சிறுபெண்கள் பிஞ்சிலே பழுத்ததுபோல் பேசுவதும் உடையணிவதும் உண்டு. ஆனால் இன்று என்னதான் நமது குழந்தைகள் இயற்கையின் நியதிப்படி வளர்ந்தாலும் நாம் அவர்களைக் குழந்தைகளாகவே நினைக்கிறோம். அதற்கு உரிய மனோவளர்ச்சி தான் காணப்படுகிறது. 12, 13 வயதுள்ள பெண்கள் பாவாடை சட்டை அணிந்து செல்வதே நாகரிகம் என்றும், நம் குழந்தை "இன்னமும் சின்னவள் தானே, இன்னும் கொஞ்ச நாட்களுக்கு இப்படியே தான் இருக்கட்டுமே," என்றெல்லாம் ஆசைப்படுகிறோம். இதன் பயனாக தாவணி அணிந்து நிமிர்ந்து நடக்கக் கூடிய பெண்கள் இயற்கையாகவே ஏற்படும் சங்கோஜத்தினால் கூனி முதுகை வளைத்துக்கொண்டு நடக்கிறார்கள். இது நம்முடைய குற்றங்களுள் முதன்மையானது.

அடுத்தபடியாக மாணவர்களும் உயர்தரப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் சென்று படித்துப் பட்டம் பெறுகிறார்கள். ஆனால் பெண்கள் சுமந்து செல்வது போல் ஒரு அடுக்குப் புத்தகங்களைக் கையிலேந்தி மார்புடன் அணைத்துக்கொண்டு செல்வதில்லை. புஸ்தக அடுக்கு, தவிர ஒரு சோப்பெட்டி, டிபன் பாத்திரம் இத்தியாதி அலங்காரங்களுடன் வீதியிலே செல்லும் மாணவிகளைப் பாருங்கள்! புத்தகங்களையும் பெட்டிகளையும் பாதுகாக்க அவைகளின் மேல் வளைந்து கொண்டு நடக்கிறார்கள். இப்படிச் செய்வது அனாரோக்யம். ஒரு பையிலே எடுத்துச் சென்றால்?—அது நகைப்பிற்கிடமாம்!

இப்படிச் சில்லறையான பல காரணங்களால் முதுகுக் கூனல் ஏற்படுகிறது. ஆனால் இந்தக் காரணங்கள் இல்லாமலே சில பெண்கள் 'கூனிசுந்தரி'களாகத் திகழ்கிறார்களே என்ற கேள்வி எழக்கூடுமல்லவா? நாகரீகப் பெண்கள் முதுகைக் கூனித் தலையை முன்னே நீட்டி நடப்பதைப் பார்த்து மற்றப் பெண்களும் இதையே நாகரீகமாகக் கருதிப் பி[illegible] பற்றுகிறார்கள்.

ஆனால், இந்தக் கூனல் காரணமாகவே த[illegible] கால மாணவிகளுள் பலரும் மூக்குக் கண்ணாடி[illegible] அணிய நேருகிறதென்பதை வைத்திய நி[illegible] ணர்களும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். பள்ளி[illegible] கூடங்களில் தேகப்பயிற்சிப் பாடங்கள் இரு[illegible] கின்றன. அதற்கென்றே தனி ஆசிரியர்களு[illegible] தான் இருக்கிறார்கள். ஆனால் என்ன[illegible] இந்தக் கூனல் அவர்கள் கண்களிற் படுவதில்லை[illegible]

பாடாவளியிலுள்ளபடி அப்பியாசங்களை[illegible] செய்ய வேண்டியது, அவைகளைச் செய்[illegible] முடித்து விட்டால் தங்கள் கடமை முடிந்[illegible] விட்டதாக ஆசிரியர்களின் எண்ணம். ஆனா[illegible] நம் பெண்களோ பருவத்திற் கேற்ற செழுமை[illegible] யின்றிக் கூனல் முதுகும் குடலை வயிறுமா[illegible] ஆகிறார்கள்.

ஒரு மாணவி, ஒரு வகுப்பில் இத்தனை[illegible] நாட்கள் விளையாட வேண்டுமென்று விதி[illegible] திருக்கிறார்கள். நன்மைதான். ஆனால் எனக்[illegible]

புதுமைப் பெண்

(மாதர்களுக்கான மாதப் பத்திரிகை)

தமிழ்நாட்டு மாதர்களுக்கென மாதர்களாலேயே நடத்தப்படுகிறது. ஸ்திரீ சௌந்தர்யம், சுகாதாரம், நாகரீகம், கலைப் பண்பு, கடமைகள், மாதர் மேம்பாட்டுக்கான ருசிகரமான கதைகள், கட்டுரைகள், அனுபவ மிக்க சோதரியரின் எழுத்தோவியங்களாக புதுமைப் பெண்ணில் திகழ்கின்றன.

ஆசிரியை—குகப்ரியை

வருட சந்தா ரூ. 6—0—0
ஆறு மாதம் ரூ. 3—0—0

சந்தா முன்பணமாக செலுத்தப் படவேண்டும்.

மானேஜர்,

புதுமைப் பெண் காரியாலயம்,

19, ராஜா ஹனுமந்தலாலா தெரு, சென்னை-5.

அறிமுகமான ஒரு பெண், பிரவேச வகுப்பில் (S.S.L.C) படிக்கும் பொழுது ஒரு Termக்குள் 42 தடவை Strong men's test என்ற ஒரு அப்பியாசத்தைச் செய்ததன் பயனாக கால் இரத்தக் குழாய்கள் வீங்கி நெடுநாள் அவஸ்தைப் பட்டது கண்கூடாகக் கண்ட உண்மை.

ஆகவே முந்நாளில் கிராமங்களில் இருந்த பொழுது இடுப்பிலும் கையிலுமாகத் தண்ணீர் சுமந்தவர்களுக்கும், தலையில் பளுவான சாமான்களைத் தூக்கி வேலை செய்தவர்களுக்கும், போர் போராகச் சாணியை வைத்துத் தட்டிய கிராமவாசப் பெண்களுக்கும், முதுகெலும்பு நிமிர்ந்திருந்ததன் பயனாக மற்ற தசைநார்கள், இரத்தக் குழாய்கள் இவைகள் சரியான நிலையில் இருந்திருக்க வேணுமென்று நமக்குத் தோன்றுகிறது.

ஒரு பெரியவர் ஒரு சமயம் இந்தப் பெண்களுக்கெல்லாம் இந்த மாதிரி தேகாப்பியாசங்களைக் கற்பிப்பதை* விட, தலையிலே 'சும்மாடு கோலி வைத்து' தலைக்கு ஒரு தோண்டி தண்ணீரை வைத்து நடக்கச் செல்லுவது நல்லது, என்றார். அவர் பரிகசித்தாலும் அதிலும் ஓரளவு உண்மையுண்டு.

ஆகவே தற்கால தேகப்பயிற்சி ஆசிரியர்களும், பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர்களும், மாணவ, மாணவிகளின் தேக வன்மையையும், சக்தியையும் அனுசரித்து தேகப்பயிற்சிக்கான திட்டங்களை வகுக்க வேண்டும். ஆரோக்ய விரோதிகளான கூனல், கவிழ்ந்து படித்தல், சாய்ந்து நடத்தல், ஆகியவற்றைப் போக்க முயல வேண்டும்; 'ஊருக்கெல்லாம் ஒரே கூரை' என்பது போல தாய்மார்களும் ஆசிரியர்களும் குழந்தைகளும் ஒரே பாடாவளியைக் கண்மூடித்தனமாக அனுசரிப்பதில் பயனில்லை. ஆரோக்கியமே ஐசுவரியம் என்று உணர்ந்து நடத்தல் வேண்டும்.

எமது அடுத்த இதழில் வாசகர்களுக்கு சில விசேஷமான அம்சங்களை நல்குகிறாள்

புதுமைப் பெண்

தமிழ் நாட்டின் தலை சிறந்த இலக்கிய ஆசிரியைகளின் எழுத்தோவியங்களும், அறிஞர்களின் ரஸமான கட்டுரைகளும் கண் கவர் சித்திரங்களுடன் மிளிர்ந்து வாசகர்களுக்கு நல்விருந்தாக அமையப் போகின்றன என்று இப்பொழுதே சொல்லி வைக்கிறோம்.

பொங்கல் மாதமுதல் புத்தாண்டாகப் பாவிக்கும் தமிழ் நாட்டின் கலைப் பண்புக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமையப் போகிறது எமது **தைமாதத்து புதுமைப்பெண்.**

உங்கள் பிரதிக்கு இன்றே முந்துங்கள்.

மானேஜர்,

புதுமைப் பெண்

19, ராஜா ஹனுமந்தலாலா தெரு, சென்னை-5.

சிசு சம்ரக்ஷணை

பார்வதி

நமது சரீரம் ஒரு கோட்டை. இந்த கோட்டைக்கு ஒன்பது வாயில்கள். இவை இரவு பகலாகத் திறந்து கிடக்கின்றன. விஷக் கிருமிகளாகிய பகைவர்கள், எந்த நிமிடம் வேண்டுமானாலும், இந்த வாயில்கள் வழியாக தங்கு தடையின்றி செல்ல முடியும். எதிரியை கோட்டைக்குள் நுழைய விட்டு விட்டால் பிறகு அவர்களை வெல்லுவது லேசான காரியமா என்ன? அது போலவே நோய் வந்த பின் சிகிச்சை செய்வதும், நோயாளியை காப்பாற்றுவதும் மிகச் சிரமம். கோட்டையை சுற்றி உள்ள அகழிகளை, தண்ணீரால் நிரப்பியும், வாயில்களை வீரர்களால் காத்தும், எதிரிகளை உள்ளே நுழைய விடாமல் இருப்பதும்தான் உயர்ந்த யுத்த முறை ஆகுமல்லவா? வெற்றிகரமாகவும் முடியும். நோயாளியை சுற்றியுள்ள வஸ்துக்களை லோஷன் (Lotion) என்கிற கிருமி நாசினியால் கழுவி, எல்லா சாமான்களையும் நன்கு கொதிக்க வைப்பதால், கிருமிகள் மாண்டு போகின்றன. வியாதி நம்மை அணுகாது.

விஷக் கிருமிகள் நமது ரத்தத்தில் பரவ பல காரணங்கள் உண்டு. உடல் பலஹீனமான நிலைமையில் இருந்தாலும் சரி, மனிதனுக்கு வயதாகி, கிருமிகளுடன் போராட முடியாத ஸ்திதியில் இருந்தாலும் சரி, இக் கிருமிகள் கெட்டியாக பிடித்துக் கொள்ளும். பிரசவமான ஸ்திரீயை இவை வெகு எளிதில் அடைந்துவிடும். ஆகையால், நம்முடைய முன் ஜாக்கிரதையால், பிரசவித்திருக்கும் ஸ்திரீகளை, இக் கிருமிகள் அண்ட விடாமல் பார்த்துக்கொள்வது ஒவ்வொரு பெண்ணின் கடமையாகும். வீட்டில் கர்ப்பிணி இருந்தால், அவளுடைய பிரசவ காலத்துக்கு உரிய நாளுக்கு ஒரு மாதம் முன்பாகவே, எல்லா சாமான்களையும் வெகு ஜாக்கிரதையாகவும், சுத்தமாகவும் தயார் செய்து வைக்க வேண்டும்.

அன்று நான் எங்கள் சித்தியின் வீட்டிற்கு போயிருந்தேன். அங்கு ஒரே அமளி குமளி, கடைக்கு ஓடவும், ஒட்டடை அடிப்பதற்குமாக ஆட்களை விரட்டிக் கொண்டிருந்தாள் சித்தி. அவளும் தண்ணீர் கொதிக்க வைப்பதும், சாமான் தயார் செய்வதுமாக, ஒரே ஓட்டமாக ஓடிக் கொண்டிருந்தாள். நான் போன உடன் அவள் வியர்க்க விறுவிறுக்க ஓடி வந்து "இன்னும் ஒரு மாதம் இருக்கே என்று அசிரத்தையாக இருந்து விட்டேன். இப்பொழுது என்னடா வென்றால் அந்தப் பெண் இடுப்பை வலிக்கிறது என்கிறாள். நானும் பறக்க, பறக்கதான் ஓடுகிறேன். அவளை கூட கவனிக்க முடியவில்லை. சற்றே அவளை போய்க் கவனித்துக் கொள்" என்றாள். அதற்குள் பாட்டிக்கு பெரும் கவலை. "எண்டீம்மா, இன்னை போது தள்ளுமான்னு பாரேன். தள்ளினா தேவலை. இன்னிக்கு சித்ரா நக்ஷத்திரம், தகப்பனுக்கு ஆகாது" என்றாள். எனக்கு கோபம் ஒரு பக்கம் வர, சிரிப்பு ஒரு பக்கம் தாங்கவில்லை. பாவம், அந்தப் பெண் இப்பொழுதே தவிக்கிறது. பாட்டி இன்னும் 24 மணிநேரம் கஷ்டப்படட்டும் என்கிறாள். இன்னும் 24 மணிநேரம் குழந்தை பிறக்காமல் இருந்தால், சித்திரை நக்ஷத்திரம் மட்டுமா போகும், குழந்தையும் போய்விடும் என்று சொல்ல வாய் எடுத்தவள் அடக்கிக் கொண்டேன்.

சாதாரணமாக நாம் மாதக்கணக்கு பார்ப்பது, தவறித்தான் போகிறது. வைத்திய முறைப்படி நாட்களைத் தான் கணக்கிடுகிறார்கள். அது முக்கால் வாசி சரியாகத்தான் இருக்கிறது. நம்மவர்கள் ஸ்னானம் செய்த தேதி மாதமுதலாக இருந்தாலும், 30-ஆம் தேதியாக இருந்தாலும், ஒரு மாதமாக கணக்குப் போடுகிறார்கள். அது தான் தப்பிதம். கடைசி மாத விடாய் ஸ்னானம் செய்த தேதிக்கு மூன்று மாதங்கள் பின் சென்று, ஆறு நாட்களை கூட்டினால் சரியான கணக்கு வரும். அதாவது ஆகஸ்ட் மாதம் 15-ஆம் தேதி ஸ்னானம் செய்திருந்தால் 3மாதம் பின் சென்றால் மே மாதம் 15-ம் தேதி ஆகிறது. அத்துடன் ஆறு நாட்களை கூட்டினால் மே மாதம் 21-ஆம் சரியான நாள். இதற்கு ஒரு வாரம் முந்தியோ, பிந்தியோ இருக்கலாம். சாதாரண திடமாக இருக்கிறவர்களுக்கு சரியாகவே தான் பிறக்கும். பலஹீனையாயிருந்தாலும் எதாவது அதிர்ச்சி எற்பட்டாலும், ஒருமாதம் அல்லது 20 நாட்கள் முந்தி பிறப்பதும் உண்டு. ஆகவே நாம் ஏமாந்து போகாமல் எப்பொழுதும் முன்கூட்டியே தயாராக இருப்பது நலம்.

கீழ்கண்ட சில முக்கியமான விஷயங்களை நோவு எடுத்தவுடன் தயார் செய்துக் கொள்ள வேண்டும்.

(1) பிரசவ அறையை ஒட்டறை அடித்து, சுண்ணும்பு பூசி ஒரு மாதம் முன்பாகவே தயார் செய்து வைக்க வேண்டும். பிறகு அன்றுடம் இவ்வறையை பெருக்கி துடைத்து சுத்தமாகவே பூட்டி வைத்திருக்க வேண்டும். நோவு ஆரம்ப மானதும், (Lysol lotion) லைஸால் லோஷனுல் மெழுகி, பெஞ்சு, ஸ்டூல், நாற்காலி, மேஜை எல்லாவற்றையும் லைஸாலால் துடைத்து வைக்க வேண்டும்.

(2) நன்ருக தேய்த்து கழுவின பாத்திரத்திலோ, பேசினிலோ, தண்ணீரை நன்ருக தள தளவென்று கொதிக்க வைத்து மூடி வைக்க வேண்டும். வண்ணுனிடம் போட்டு வெளுத்த சவுக்கங்கள், படுக்கை விரிப்புகள், குழந்தையை எடுக்க துணிகள், இவை தயாராக மேஜை டிராயரில் வைக்க வேண்டும்.

(3) ஒரு பேசின் தண்ணீரில், ஒரு கத்திரிக்கோல், கொடியை கட்ட பட்டுநூல், கொஞ்சம் பஞ்சை பிய்த்துப் போட்டு சில துண்டுகள், இவைகளை போட்டு மூடி கொதிக்க வைத்து வைக்க வேண்டும்.

(4) பெஞ்சியின் மேல் கெட்டியான படுக்கை போடலாம் அல்லது வெறும் பெஞ்சியின் மேல், லைஸாலால் துடைக்கப்பட்ட ரப்பர் துணி, அதற்குமேல் வெளுத்த விரிப்பு. பெஞ்சியை அறையின் மத்தியில் போட்டு, இரு பக்கங்களிலும் டாக்டரும் உதவி புரிகிறவர்களும் போக இடம் விடவேண்டும்.

நோவு ஆரம்பமானதும் கர்ப்பிணியை நன்ருக ஸ்னனம் செய்வித்து தலையை வாரி பின்னிவிடுவது நலம். கால வேளையாக இருந்தால் ஒரு அவுன்ஸ் அல்லது 2 டேபிள் ஸ்பூன் விளக்கெண்ணே கொடுக்கலாம். எண்ணெய் ஒத்துக் கொள்ளாதவர்களாயும், பலஹீனமானவர்களாயும் இருந்தால் கொடுக்கக் கூடாது. ஸமயம் மத்தியானத்திற்கு மேல் இருந்தாலும் கொடுக்க வேண்டாம். ஒரு சூடான எனிமா கொடுத்தால் போதும் (எனிமா எப்படி கொடுப்பது என்று முன்பே சொல்லியிருக்கிறது) வயிற்றில் மலம் நிறைந்திருந்தால், குழந்தை வெளியில் வரும் பொழுது, அதன் தலை ஆசனத்தை அழுத்துகிறது. அப்பொழுது மலம் வெளிவருகிறது. கூடவே குழந்தையும் வருகிறது. இந்த மலம் குழந்தை மேல் படுவதல்லாமல் தாய்க்கும் ஆபத்தை விளைவிக்கும். நோவு அதிகரிப்பதற்கு முன்பாகவே இரண்டு தரம் நன்ருக வெளிக்குப் போகவேண்டியது அவசியம். ஓர், இரண்டு தரம் வெளிக்குப் போன பிறகு கொஞ்சம் ஆகாரம் கொடுக்க வேணும். இல்லாவிட்டால், பலமான நோவை தாங்க சக்தியில்லாமல், நாக்கு உலர்ந்து கஷ்டப் படுவார்கள். அதிகமான ஆகாரமும் கொடுக்கக் கூடாது. தலை திரும்பி, பிரசவம் ஆகும் பொழுது பலர் வாந்தி எடுப்பது வழக்கம். ஆகையால் அதிக ஆகாரம் கொடுத்தால், ரொம்பவும் கஷ்டப் படுவார்கள். கொஞ்சமாக கரைத்த ரஸம் சாதமோ, சூடான காப்பியோ கொடுப்பது அவசியம். ஒரேயடியாக பட்டினி போட்டாலும் ஆயாச மிகுதியால் மயக்கம் வந்து, பிரசவத்திற்கு இடையூருக முடியும். ஒரு நோவு வந்து நின்று மீண்டும் இன்னெரு நோவு தொடங்குமுன் இருக்கும் இடைவேளையில் மெதுவாக, அறைக்கு உள்ளேயே நடக்க வைப்பது நலம்.

பிரசவ அறைக்குள் போகிறவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவர்கள் உடுத்தியிருக்கும் ஆடைகள், வெளுத்து சுத்தம் செய்து இருப்பதோடு, அவர்கள் கை, கால்களையும் சோப்பு போட்டு தேய்த்து சுத்தமாக கழுவிக்கொள்வது மிக்க அவசியமானது. கொதித்து ஆறின இரண்டு படி ஜலத்தில் ஒரு அவுன்ஸ் அல்லது 2 டேபிள் ஸ்பூன் டெட்டால் (Dettol) அல்லது லைஸால் (Lysol) ஊற்றி லோஷன் (Lotion) தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். பிரசவிக்கும் ஸ்திரீயை நெருங்குகிறவர்கள் தங்கள் கைகளை பத்து நிமிஷ காலம் இந்த லோஷனில் வைத்துவிட்டு பிறகே உதவி புரிய வேண்டும். இந்த மாதிரி முன் ஜாக்கிரதையுடன் நடந்துகொள்வதால் ‘ஜன்னி’ என்று சொல்லப்படும் விஷஜ்வரத்தை (Septic fever) தவிர்க்க முடியும். ஜன்னி என்பது விஷக்கிருமிகள் நோயாளியின் ரத்தத்தில் பரவுவதால் ஏற்படும் ஒருவித விஷ ஜ்வரம். இது வந்துவிட்டால், இதை வெல்லுவதும், இதிலிருந்து நோயாளியை காப்பாற்றுவதும் வெகு கடினம். ஆகையால் கூடியவரை இதைத் தவிர்க்க ஏற்பாடு செய்வது நமது கடமையாகும். மேற்கூறிய சுகாதார விதிகளை நேராக பின்பற்றினுல் விஷக்கிருமிகள் நோயாளியை அணுகவே அணுகாது.

குழந்தையின் தலை வெளியில் வந்ததும், அதை இடது கையால் தாங்கிக்கொண்டு வலது கையால் கழுத்தைச் சுற்றித் தடவிப் பார்ப்பது மிக்க அவசியம். சில சமயங்களில் ‘தொப்புள் கொடி’ குழந்தையின் கழுத்தை சுற்றி யிருக்கும். இதை கவனிக்காமல் இருந்துவிட்டால், அது கழுத்தை இருக்கி, குழந்தையை கொன்று விடும். அப்படி சுற்றியிருக்கும் கொடியை மெதுவாக எடுத்து தலை வழியாய் கழற்றிவிட வேண்டும். இப்படிச் செய்யும்பொழுது அதிகமாக இழுக்காமல் மிக்க ஜாக்கிரதையுடன் செய்ய வேண்டும். பிறகு குழந்தையின் கண்களை

துடைக்க வேண்டும். பேசின் தண்ணீரில் கொதிக்க வைத்து மூடி வைத்திருக்கும் ஒரு பஞ்சுத்துண்டை எடுத்து பிழிந்துவிட்டு அதை முன்பே தயாராக இருக்கும் போரிக் லோஷனில் (ஒரு அவுன்ஸ் காய்ச்சி ஆறின ஜலத்தை நன்றாக வடிகட்டி அதில் இரண்டு சிமிட்டா போரிக் பவுடரை போட்டு மறுபடி கொதிக்க வைத்து, பிறகு ஆறினதும் ஒரு சுத்தமான புட்டியில் விட்டு வைக்கவேண்டும். இதுதான் Boric lotion) அந்த பஞ்சை நனைத்து குழந்தையின் கண்களை மெதுவாகவும் நன்றாகவும் துடைக்க வேண்டும். ஒவ்வொரு கண்ணிற்கும் தனி தனி பஞ்சை உபயோகிக்க வேண்டும். தலை வெளி வந்த பிறகு ஐந்து அல்லது பத்து நிமிஷங்கள் நோவு இல்லாமல் இருக்கும். பிறகு நோவு மீண்டும் வந்து குழந்தை பூரா வெளி வரும். அப்படி இல்லாமல் நோவு நின்று உடம்பு வராமல் நின்றுவிட்டால், தலையையோ, கழுத்தையோ பிடித்து இழுக்கவே கூடாது. நம் பலத்தை உபயோகித்து எதுவும் செய்யக்கூடாது. எல்லாம் இயற்கையின் நியதிப்படி தானாகவேதான் நடக்கவேண்டும். இரண்டு விரல்களை உள்ளே விட்டு, தோளைப் பற்றிக்கொண்டு மெதுவாக இழுப்பதுதான் வழி. விரலை விடுவதால் குழந்தையின் கழுத்து அழுந்திப்போய் மூச்சு வராமல் இருப்பதை தவிர்க்கலாம்.

பிறந்தவுடன் குழந்தை அழவேண்டியது மிக்க அவசியம். இல்லாவிடில், குழந்தையின் வாயில் கோழை சேர்ந்து கொண்டு, அழ வழியில்லாமல் கஷ்டப் படுகிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும். சுத்தமான துணியை விரலில் சுற்றிக் கொண்டு, வாயைத் துடைத்தால் உடனே அழ ஆரம்பிக்கும். அப்படியும் அழாவிட்டால் கொடியைக் கத்தரித்து விட்டு உடனே குழந்தையை கவனிக்க வேண்டும். குழந்தையின் கால்களைப் பற்றிக் கொண்டு மெதுவாக தூக்கி முதுகில் தட்ட வேண்டும். அவசியம் ஏற்பட்டால் பச்சை ஜலத் துளிகளை முகத்தில் ஜில்லென்று தெளிக்கலாம். இப்படிச் செய்தவுடன் குழந்தை அழ ஆரம்பிக்கும். குழந்தை நன்றாக அழுது கொண்டும் மூச்சு விட்டுக் கொண்டும் இருந்து விட்டால் பிறகு தொப்புள் கொடியை கீழ் சொல்லுகிறபடி கத்தரித்து, அதை கம்மென்று ஒரு கம்பிளியால் சுற்றி விட்டுவிட்டு, தாயை கவனிக்க வேண்டும்.

கொடியை கத்தரித்தல்

பழங்காலத்தில், நம்மவர்கள் நஞ்சு விழுகிற வரை குழந்தையை கவனிக்கவே மாட்டார்கள். தொப்புள் கொடி என்பது, தாய்க்கும் சிசுவிற்கும் தொடர்பாக இருக்கிறது. குழந்தை வயிற்றில் இருக்கும் பொழுது, கொடியின் வழியாகவே ரத்தமும் ஆகாரமும் செல்லுகிறது. வெளியே வந்த பிறகும், தாயின் ரத்தம் குழந்தைக்கு வருகிறது. தொப்புள் கொடியை பிடித்துப் பார்த்தால், நாடி அடிப்பது புலப்படும். பிறந்த சில நிமிடங்களுக்கெல்லாம், இந்த நாடி நின்று விடும். நாடி நின்ற உடனேதான் கொடியை நறுக்க வேண்டும். இல்லையேல் நஞ்சின் விஷம், குழந்தையின் ரத்தத்தில் பரவி செவ்வாப்பு என்று சொல்லப்படும் வியாதியை உண்டு பண்ணுகிறது. நாடி நின்றதும், குழந்தையின் தொப்புளிலிருந்து இரண்டு அங்குலம் தள்ளி, நம் விரல்களால் அந்த இடத்தை நசுக்கி சப்பையாக்கிக் கொள்ள வேண்டும். பிறகு அங்கு ஒரு கட்டுப் போட வேண்டும். முன்பே சொல்லியிருக்கிறபடி கொதிக்க வைத்த கெட்டியான பட்டு நூலால்தான் கட்டவேண்டும். நன்றாக இறுகக்கட்டி (reaf knot)என்றுசொல்லப்படும் முடியாக முடிய வேண்டும். (==)பிறகு தாயின் பக்கமாக உள்ள கொடியை மூன்று அங்குலம் விட்டு அங்கும் இதுபோலவே ஒரு கட்டு போடவேண்டும். பிறகு குழந்தையின் தொப்புளுக்கு அருகில் போட்டிருக்கும் கட்டிற்கு அரை அங்குலம் தள்ளி கத்தரிக்க வேண்டும். முன்பே கொதிக்க வைத்த கத்திரியை லோஷனில் அலம்பி உபயோகப்படுத்தவும். நன்றாக கட்டியிருந்தால் குழந்தையின் கொடியிலிருந்து ரத்தம் கசியாது. ஆகையால் அதை பிறகு ஒருமுறை கவனித்துப் பார்க்கவேண்டும். ரத்தம் கசிந்தால் அந்தக் கட்டிற்கு அருகில் இன்னொரு முறை கட்ட வேண்டும்.

குழந்தை பிறந்த அரைமணி நேரத்திற்கெல்லாம் நஞ்சு விழவேண்டும். சிலருக்கு பிரசவமான உடன் நோவுநின்று நஞ்சு விழாமலேயே தங்கிவிடும். இது அபாயகரமானது. நஞ்சை வயிற்றில் ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்திற்கு மேல் தங்கவிடக் கூடாது. டாக்டரை உடனே கூப்பிடவேண்டும். அவர் வந்து ஊசி போட்டால் உடனே கஷ்டமின்றி வந்துவிடும். டாக்டரை கூப்பிட வசதி இல்லாவிட்டால், நல்ல அனுபவமுள்ள நர்ஸோ, பெரியவர்களோ வந்து கவனிக்க வேண்டும். வயிற்றை தடவிப்பார்த்தால் கர்பப் பை, உருண்டையாக நம் கைக்கு தென்படும். அதற்கு மேல்புரம் உள்ள வயிற்றை நன்றாக அழுத்தி முதுகோடு முதுகாக பிடித்துக் கொள்ளுவது வழக்கம். இப்படிச் செய்வது, அனுபவமுள்ளவர்களாலேயே முடியும். தவறாக கர்பப் பைக்கு மேலோ, அடியிலோ அமுக்கிவிட்டால், தானாக வரும் நஞ்சைக்கூட நாம் தடுத்து விடுவோம். இப்படிச் செய்வதில், நின்றுபோன நோவு மீண்டும் வந்து நஞ்சு பூராவும் சுலபமாக வெளியில் வந்துவிடும். நஞ்சு விழ நேரமாகிவிட்டால் டாக்டரைக் கூப்பிட தயங்கவே கூடாது. நஞ்சு தங்குவதால் பெரிய ஆபத்து உண்டாகும் என்பது பலருக்கு தெரிவதில்லை. இது மிகவும் முக்யமாகத் தெரிந்துகொள்ள வேண்டியவை

ளில் ஒன்று. நஞ்சு விழுந்த பின்னர் *Extract Ergot* என்னும் மருந்தை ஒரு அவுன்ஸ் (*Extract Ergot—1 ounce*) வாங்கி அதை எட்டு அவுன்ஸ் தண்ணீரில் கலந்து வைத்துக் கொண்டு, அதில் ஒரு அவுன்ஸ் மருந்தை கொடுக்க வேணும். பிறகு ஒரு நாளைக்கு இரண்டு வேளை இம் மருந்தை கொடுக்கலாம். இதனால் நல்ல போக்கு ஏற்பட்டு எல்லா அழுக்கும் வெளி வரும். அதிகப் போக்கு ஏற்பட்டால் உடனே டாக்டரைக் கூப்பிடவேண்டும். இக் கைமருந்தை சாதாரணமாக பிரசவித்தவர்களுக்கு மட்டுமே உபயோகிக்கலாம். மேலும் பிரசவத்தின் போது சிறு கிழிசல் ஏற்படுவது முதல் பிரசவத்தில் சகஜம். ஆகையால் இதை கவனித்து, ஏதேனும் ஏற்பட்டிருந்தால் டாக்டரை வரவழைத்து உடனே தையல் போட வேண்டியது அவசியம். இல்லையேல் ஜன்னி வர இடம் ஏற்படும்.

பிறகு தாயாரை சுத்தம் செய்ய வேண்டும். பேசினில் கொதிக்க வைத்து இருக்கும் பஞ்சுத் துண்டுகளை எடுத்து லோஷனில் நனைத்து சுத்தமாக துடைக்க வேண்டும். துடைக்கும்பொழுது வயிற்றுப் பக்கத்திலிருந்து கீழுக்கு வர வேண்டும், மேல் நோக்கி துடைக்கக் கூடாது. பிறகு ஆவியில் வைத்து ஸ்டெரிலைஸ் செய்த துணிகளையோ, அல்லது ஸ்டெரிலைஸ் செய்து விற்கும் பட்டைகளையோதான் உபயோகிக்க வேண்டும். வேகாத துணிகளையும், அசுத்தமான துணிகளையும் அருகிலேயே கொண்டு போகக் கூடாது. பிறகு அடியில் இருக்கும் துணியையும் ரப்பரையும் எடுத்துவிட்டு, ரப்பரை மட்டும் லோஷனால் சுத்தம் செய்து போட்டுவிட்டு, அதன் மேல் வேறு வெளுத்த துணியை போட வேண்டும். ஆவியில் வைத்து சுத்தம் செய்ய நேரம் போராவிட்டாலோ, வசதி இல்லாவிட்டாலோ, அவசரத்திற்கு சுத்தமான வெள்ளை துணியை மடித்து தீயில் காட்டி, செவக்கும்வரை ஜாக்கிரதையாக காய்ச்சினால்கூட போதும். துணி வேகாமல் பார்த்துக்கொள்ள வேணும். அந்த சூட்டில் கிருமிகள் மாண்டுபோகின்றன. இப்படி ஜாக்கிரதையாக இருப்பதால் ஜன்னியை தவிர்க்கலாம். பிறகு 9 அல்லது 10 அங்குலம் அகலமுள்ளதும், நான்கு கஜம் நீளமுள்ளதுமான கெட்டியான துணியைக்கொண்டு அடி வயிற்றைச் சுற்றி இறுகக் கட்ட வேண்டும். இடுப்பு எலும்பிற்கு இரண்டு அங்குலம் கீழ் வரை இறுக்க வேண்டும். கீழ் பக்கம் நன்றாக இறுக்கியும், மேல் பக்கம் கொஞ்சம் தளராகவும் கட்ட வேண்டும். பேண்டேஜின் முடிவு பாகத்தை பெரிய சேப்டி பின்களால் பொருத்தி வைக்க வேண்டும். பிறகு தாயாருக்கு கொஞ்சம் சூடான நீர் ஆகாரமாகக் கொடுத்து, நேராகவே படுத்துக்கொண்டு இளைப்பார விட வேண்டும். 24 மணி நேரம் திரும்பவே கூடாது.

வாழ்க்கை

~ சரஸ்வதி தியாகராஜன் ~

"என்னடி ! இன்னுமா பூத்தொடுக்கறே ?" என்று அதட்டிக்கொண்டே வந்தாள் சுசிலா.

"இதோ ஆகிவிட்டதே! உனக்கு என்ன வேண்டும் சுசீலா ?" என்று மெதுவாகக் கேட்டாள் லலிதா.

"ஏண்டி மூதேவி! அவளை பெயரிட்டுக் கூப்பிடாதே. 'நீ' என்று சொல்லாதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது? பிச்சைக்கார நாய்க்கு திமிர் வேறே!" என்று வழக்கம்போல் தனது சுடு சரங்களைத் தொடுத்தாள் அலமேலு அம்மாள்.

"இனிமேல் அப்படிச் சொல்லவில்லை மாமி!" என்று பயத்துடன் சொல்லிவிட்டு அவசர அவசரமாக பூத்தொடுக்க ஆரம்பித்தாள் லலிதா.

காலையில் பத்து படி அரிசியைக் குத்திப் புடைத்ததினால் அவளுடைய தளிர் விரல்கள் வீங்கியிருந்தன. அத்துடன் கிணற்றிலிருந்து ஜலம் இழுத்ததினால் விரல்கள் விண் விண்ணென்று வலித்தன. பூ தொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டாள் லலிதா.

"என்னடீ இப்படித் தொடுக்கறே! யாருக்குப் பிடிக்கும்? அந்த ஜாதி மொட்டுக்களைத் தனியாக பூராண் கட்டு கட்டிவை! சாயந்திரம் கோவிலுக்குப் போகவேண்டும்!" என்று உத்திரவு போட்டுவிட்டுப் போனாள் சுசிலா.

லலிதா அந்த வீட்டிற்கு வரும்பொழுது அவளுக்கு பத்து வயது. ஐந்து வருஷங்கள் எப்படியோ சென்றுவிட்டன. அவள் மனத்திலும் மேனியிலும் ஏற்பட்ட துன்ப வடுக்களோ எண்ணற்றவை. சுகந்தம் நிரம்பிய மலராக மொட்டு போன்ற அவள் மனத்தில் எவ்வளவோ அபிலாஷைகள் புதையுண்டிருந்தன. ஆனால் அந்த ஏழைப் பெண்ணைக் கவனிப்பவர் அந்த வீட்டில் ஒருவருமில்லை.

கைலாஸமய்யரின் தங்கைப் பெண் லலிதா. கணவனை இழந்து கஷ்டப்படும் தங்கையை தன்னுடன் வைத்துக் கொள்வதுதான் கடமை என்று கருதினார் அவர். ஆனால் மனைவி அலமேலு அம்மாளோ அதைக் கொஞ்சம்கூட விரும்பவில்லை. "அவளுக்கொரு பெண் இருக்கிறதே, தரித்திரம்! அது வந்தால் இந்த வீடே துடைத்துப்போகும்!" என்று வாதாடினாள். கைலாஸம் அவள் வார்த்தைக்குச் செவி சாய்க்கவில்லை. அபார அழகும், புத்திசாலித்தனமும் நிறைந்த லலிதாவை அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. தூர தேசத்தில் டாக்டருக்குப் படித்துக் கொண்டிருக்கும் தன்னுடைய மகனுக்கு அவள் சிறந்த மனைவியாகக் கூடுமென்று அவர் நம்பினார்.

அலமேலுவுக்கோ ஆத்திரமும் கோபமும் பற்றிக்கொண்டு வந்தன. தன்னுடைய பணக்காரத் தம்பியின் ஆசைக் கொழுந்தான சுசிலா இருக்கும் பொழுது இந்த மூதேவி எதற்கு என்பது அவள் எண்ணம். பிடிவாதமாக தன் தம்பியின் பெண்ணை அழைத்து வைத்துக் கொண்டாள் அவள். அத்தையைப் போன்ற அவலக்ஷணங்கள் நிறைந்த சுசிலா தன் அதிகாரத்தை வீட்டில் பிரயோகிக்க சிறிதும் தயங்கவில்லை.

மன்னியின் கொடுமைகளைச் சகிக்க முடியாமல் லலிதாவின் தாய் தன் பெண்ணை அனுதையாக விட்டுவிட்டு இறந்து போனுள். அன்றிலிருந்து லலிதாவின்மேலேயே தன் கொடுமைகளைத் தீவிரமாக பிரயோகிக்க ஆரம்பித்தாள் அலமேலு.

பதினைந்து வயதுகூட நிரம்பாத சிறுமி. பொறுமையின் பொக்கிஷமாக இருந்ததினுல் ஏதோ பிழைத்துக்கொண்டு வந்தாள். மாமியும், அவள் மருமகளும் சேர்ந்து இழைக்கும் அத்தனை கொடுமைகளையும் அவள் ஏற்றுக் கொண்டாள். தன்னுடைய விதி, சதி செய்யும் பொழுது பிறரை நோவதில் என்ன பயன் என்பது அவள் கொள்கை.

"அலமேலு! அலமேலு!" என்று கூவிக் கொண்டே உள்ளே வந்தார் கைலாஸம் ஒரு நாள்.

ரேடியோ உள்ளில் உட்கார்ந்து சுவாரஸ்யமாய் நாடகம் கேட்டுக் கொண்டிருந்த அலமேலு "என்ன"? என்று எரிச்சலுடன் கேட்டவாறு வெளியில் வந்தாள்.

"பரதேவதை! உன் பிள்ளை வராண்டி! உன் பிள்ளை!" என்று சந்தோஷத்துடன் கூத்தாடினுர் கைலாஸம்.

அலமேலு பரப்பரப்புடன் "என்றைக்கு வருகிறுன்?" என்று கேட்டாள்.

"நாளைக் காலை!" என்று தந்தியை அவள் கையில் கொடுத்துவிட்டு கைலாஸம் போய்விட்டார்.

"அடி சுசி! எங்கேடி போயிட்டே? அத்தான் வரான்டி! நாளைக்கு காலம்பற சீக்கிரம் எழுந்திருந்து குளித்துவிட்டு டிரஸ்பண்ணிண்டிரு! தெரிஞ்சுதா!" என்று இப்படியே ஒருத்தொருத்தருக்கும் உத்திரவு இட்டுக்கொண்டே சென்றுள் அலமேலு.

அம்மாஞ்சி வருகிறுன் என்றசெய்தி லலிதாவுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. கூடத்தில் மாட்டியிருக்கும் அவனுடைய படத்தை அவள் அனேகம் தடவை பார்த்திருக்கிறுள். "அம்மாஞ்சி எவ்வளவு அழகாயிருக்கிறுன், நம்ம அம்மா மாதிரி!" என்று மனதிற்குள் மகிழ்ந்தும் இருக்கிறுள். தான் இதுவரையில் பார்த்திராத ஒரு மனிதனை இடீரென்று பார்க்கப் போகிறோம் என்ற நினைவு அவள் உடலை பரவசமாக்கியது.

அதிகாலையிலெழுந்திருந்து, சுறுசுறுப்பாக எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு தட்டு நிறைய புஷ்பங்களை வைத்துக் கொண்டு தொடுத்துக் கொண்டிருந்தாள் லலிதா. அன்று ஏனே லலிதாவுக்கு தானும் கொஞ்சம் பூ வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஆசையாக இருந்தது. வழக்கம்போல் சுவாமிக்கும் சுசீலாவுக்கும் தொடுத்து வைத்துவிட்டு மிகுதி இருக்கும் பூவில் தனக்கும் ஒரு செண்டு கட்டி வைத்துவிட்டுக் குளிக்கப் போனுள்.

புஷ்பத்தை மேற்பார்வை பார்க்கவந்த சுசீலா இரண்டு செண்டுகள் இருப்பதைப் பார்த்துவிட்டு அலமேலுவிடம் ஓடோடிச் சென்று "அத்தே! அத்தே! பார்த்தாயா அதிசயத்தை!" என்று முகவாயில் கையை இடித்துக் கொண்டாள்.

சுடச்சுட தோசை வார்த்துக் கொண்டிருந்த அலமேலு முகத்தைத் திருப்பாமலேயே "என்னடி அதிசயத்தைக் கண்டுவிட்டாய்?" என்று அசிரத்தையாகக் கேட்டாள்.

"லலிதா, தனக்கும் பெரிதாக ஒரு பூச்செண்டு கட்டிவைத்துக் கொண்டிருக்கிறுள் அத்தே!" என்று ஏதோ ஒரு பெரிய அற்புதத்தைக் கண்டுவிட்டவள் போல் சொன்னுள்.

கரண்டியை பொத்தென்று போட்டுவிட்டு அலமேலு திரும்பி "என்ன! நிஜமாகவா!" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"ஆமாம்! இதோ பார்!" என்று தட்டைக் கொண்டுவந்து காட்டினுள் சுசீலா.

"அவள் எங்கே லலிதா?"

"குளிக்கப் போனுள்!"

"வந்தவுடன் கூப்பிடு!"

ஈரப் புடவையுடன் முகம் வெளுக்க வந்து நின்ற லலிதாவை முழித்துப் பார்த்தாள் அலமேலு.

"இந்தச் செண்டு யாருக்குடி?"

லலிதா பேசாமலிருந்தாள்.

"வாயைத் திறக்கிறுயா இல்லையா?"

லலிதா நடுங்கும் குரலில் "எனக்குத்தான் மாமி!" என்றுள்.

"உனக்கா! தேவடியாள்! உன் லக்ஷணத்துக்கு மினுக்கு வேறையா? எந்தக் கை தொடுத்தது? இந்தக் கை தானே!" என்று

கல்லின்மேல் காய்ந்து கொண்டிருந்த தோசைத் திருப்பியை எடுத்து சுருசுருவென்று அவளுடைய வலதுகையில் தேய்த்தாள் அலமேலு.

வலி பொறுக்க முடியாமல் "ஐயோ! அம்மா!" என்று கதறினாள் லலிதா.

அவளை பரபரவென்று இழுத்துக் கொண்டு போய் சாமான் உள்ளில் தள்ளிவிட்டு கதவைச் சாத்திக் கொண்டு வெளியே வந்தாள் அலமேலு.

அதே சமயத்தில் வாசலில் வந்து நின்ற அழகிய காரிலிருந்து விஸ்வேஸ்வரன் இறங்கி உள்ளே வந்தான்.

அலமேலுவும் சுசிலாவும் ஆனந்தக் கடலில் துள்ளி விளையாடினார்கள்! மருமானுக்கு வித விதமாக அலங்கரித்து விட்டாள் அலமேலு. மகனோடு வேடிக்கை பரிகாசங்கள் செய்தாள். வரப்போகும் கலியாணத்தைப் பற்றியும், அதில் தனக்கு தம்பி செய்யப்போகும் சீர் வரிசைகளைப் பற்றியும் வாய் வலிக்குமட்டும் பேசினாள். மத்தியான்னம் சாப்பிடும் பொழுது மட்டும் கைலாஸம் ஒரு தடவை "லலிதா எங்கே?" என்று கேட்டார்.

"யார் அப்பா லலிதா?" என்று விஸ்வேஸ்வரன் இடை மறித்தான்.

அவர் பதில் சொல்லுவதற்குள் அலமேலு பேச்சை வேறு திக்கில் சாமார்த்தியமாக திருப்பிவிட்டாள்! கைலாஸமும் அதைப்பற்றி அப்புறம் கேட்க மறந்து விட்டார்.

லலிதாவுக்கு நினைவு வந்தபோது அவளுடைய ஈரப்புடவைகூட உலர்ந்து விட்டிருந்தது. கையில் சூடிட்ட இடம் சீழ் பிடித்துக் கொப்பளித்துக் கொண்டிருந்தது. காலையிலிருந்து ஒருவித ஆகாரமும் சாப்பிடவில்லை. மெள்ள எழுந்திருந்து வெளியில் வந்தாள். வாசற்படிகூட தாண்டியிருக்கமாட்டாள், தலை சுத்தவே 'ஐயோ' வென்று கதறியவாறு தடாலென்று கீழே விழுந்து விட்டாள்.

ஆபீஸ் அறையில் சிநேகிதர்களுடன் பேசிக் கொண்டிருந்த விஸ்வேஸ்வரன் காதில் இந்த அபயக்குரல் விழுந்தது. பரபரப்புடன் எழுந்திருந்து உள்ளே வந்தான்.

தங்கச் சிலைபோல் தரையில் கிடந்த பெண்ணைக் கண்டு ஸ்தம்பித்து நின்றான்!

நெற்றியில் கையை வைத்துப் பார்த்தான். ஜுரம் நெருப்பாய் அடித்துக்கொண்டிருந்தது. இரு கையாலும் அவளை அணைத்துத் தூக்கிக் கொண்டுபோய் தன்னுடைய கட்டிலில் படுக்க வைத்தான்.

வேலைக்காரி முனியாயி வந்து அவளுக்கு வேற்றுடை அணிவித்துவிட்டு, துக்கரமான சரித்திரத்தையும் சொல்லிவிட்டுப் போனாள்.

விஸ்வேஸ்வரனின் விடாமுயற்சினால் லலிதா பிழைத்துக் கொண்டாள். கண்களை மலர விழித்ததும், தன்னெதிரில், தான் இதுவரை பார்த்திராத அழகிய முகத்தைக் கண்டதும், லலிதா ஒருங்கே, வெட்கமும் சந்தோஷமும் அடைந்தாள். சாயலில் தன் தாயை ஒத்த விஸ்வேஸ்வரன்பால் அவள் இதயத்தில் அன்பு பெருக்கெடுத்து ஓடியது.

"அம்மாஞ்சி! என்னை எதற்காக பிழைக்க வைத்தீர்கள்? நான் யாருக்காக உயிர் வாழ வேண்டும்?" என்று கதறின லலிதாவின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு, 'லல்லு!

பயப்படாதேம்மா! நான் இருக்கிறேன்! என் உயிர் உள்ளவரையில் உன்னை என் கண்ணின் கருமணிபோல பார்த்துக் கொள்வேன்!" என்று அந்த சிறுமியின் நெற்றியில் முத்தமிட்டான் விஸ்வேஸ்வரன். அன்பையே அறியாத அவளுடம்பு அவன் ஸ்பரிசத்தினால் சிலிர்த்தது. இதைப் பார்த்துக் கொண்டே உள்ளே வந்தார்கள், அலமேலுவும், சுசிலாவும்.

எழுந்திருக்கப்போன லலிதாவை படுக்க வைத்தான் விஸ்வேஸ்வரன். அலமேலுவின் கண்கள் விஷத்தைக் கக்கின. வெறித்துப் பார்க்கும் தாயைப் பார்த்து மெல்ல சிரித்தான் விஸ்வேஸ்வரன்.

"அம்மா! இந்த சொர்ணப் பதுமையை எனக்குக் காட்டாமல் ஏன் அம்மா மறைத்து வைத்தாய்? சிறுவயதில் நான் அத்தைக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் காலம் வந்து விட்டது!" என்று குதூகலமாக மொழிந்தான் விசு.

அலமேலு பேசாமல் உள்ளே போய் விட்டாள்!

விஸ்வேஸ்வரனின் கண் காணிப்பில் லலிதா பூரண சுகமடைந்தாள். ஏதோ வேலை விஷயமாக அங்கு வந்த அலமேலுவின் தம்பி சம்பவங்களை ஜாடையாகத் தெரிந்துகொண்டு தன் பெண்ணை அழைத்துக்கொண்டு போய் விட்டார். தன் ஒரே மகனை விரோதித்துக்கொள்ள அலமேலுவும் இஷ்டப்படவில்லை.

ஒரு நல்ல சுப முகூர்த்தத்தில் விஸ்வேஸ்வரனுக்கும் லலிதாவுக்கும் விமரிசையாக கலியாணம் நடந்தேறியது.

பாலைவனமாயிருந்த அவள் வாழ்க்கையில் நீரோடைகளும், பூந்தோட்டங்களும் பின்னின! நாளுக்கு நாள் வளர் பிறைபோல் வளர்ந்த அவள் அழகில் அலமேலுவே மயங்கினாள்! விஸ்வேஸ்வரனைப்பற்றி சொல்ல வேண்டுமா! இன்பக் கொடியில் பூத்த அன்புப் பூக்களின் சுகந்தம் லலிதாவை திணறச் செய்தது.

மூவாயிர ரூபாய் சம்பளத்தில் ரங்கூனில் ஒரு பெரிய வேலை விஸ்வேஸ்வரனுக்குக் கிடைத்தது. லலிதாவுடன் ஒரு நல்ல நாளில் பிரயாணமானான்.

நிலாவின் வெள்ளிக் கதிர்கள் நீலக்கடலை பாற்கடலோவென பிரமிக்கும்படி மாற்றிக் கொண்டிருந்தன. சந்திரிகையின் பிரதிமைக்கும் கப்பலுக்கும் நடந்த ஓட்டப் பந்தயத்தை பார்த்தவாறு மேல் தளத்தில் நின்று கொண்டிருந்தாள் லலிதா.

தன் கண்களைப் பொத்தின கரங்களை எடுத்துவிட்டு லலிதா, "எவ்வளவு அழகாயிருக்கிறது!" என்றாள்.

"எது?" என்று கேட்டான் விசு.

"நிலா!"

"நிலாவா! எங்கே யிருக்கிறது?"

லலிதா சிரித்துக் கொண்டே. "பாப்பாவுக்குத் தெரியவில்லையா? அதோ பாருங்கள் ஆகாயத்தில்!" என்று சுட்டிக் காண்பித்தாள்.

"இல்லையே! ஆகாயத்தில் காணோமே! ஓ! இங்கே வந்துவிட்டது என் பக்கத்தில்!" என்று லலிதாவின் முகத்தை தன் முகத்துக் கருகில் இழுத்தான். இருவர் சிரிப்பையும் காற்று தூக்கிக்கொண்டு கனவேகமாய் ஓடிற்று.

"லலிதா?"

"என்ன?"

"திடீரென்று கப்பல் மூழ்கிவிட்டால் என்ன செய்வாய்?"

"போங்கள்! அப்படி ஒன்றும் நேராது! நேர்ந்தாலும் என்ன? இருவரும் ஒன்றாக..."

"அதுதான் இல்லை! உன்னை முதலில் படகில் ஏற்றிவிட்டு விடுவார்கள்!" என்று சிரித்தான் விசு.

"ஒரு நாளுமில்லை! இந்த உயிர் உடலில் இருக்கும் வரையில் நான் உங்களைவிட்டு பிரியவே மாட்டேன்!" என்றாள் லலிதா. அவள் கண்களில் உறுதி ஜொலித்தது.

விசு தனக்குள் சிரித்துக் கொண்டான்.

ஐந்து வருஷங்கள் போனவிதம் தெரியாமல் போயின! விசுவும், லலிதாவும் வசித்த இன்பத் தோணி சென்றுகொண்டிருந்த நதியில் திடீரென்று வெள்ளம் வரத் தொடங்கியது.

யுத்தத் தீ ரங்கூனில் பரவிய சமயம் அது. எவ்வளவோ ஜனங்கள் ரங்கூனைவிட்டு ஓடி வந்

தார்கள். தாங்கள் போவதா வேண்டாமா என்ற பிரச்னையிலேயே சிலநாட்களைப் போக்கி விட்டார்கள் விசுவும், லலிதாவும். பிறகு கர்ப்பிணியாயிருக்கும் மனைவியை உத்தேசித்து விசு புறப்படத் தீர்மானித்தான்.

அந்தக் கடைசிக் கப்பல் துறைமுகத்தை விட்டபொழுது லலிதாவுக்குத் திக்கென்றது. என்னவோ ஒரு விவரிக்க முடியாத பயம்... ஜன்ம பூமியை மிதிப்போமா என்ற சந்தேகம் லேசாகத் தோன்றியது.

அமாவாசை இருள் எங்கும் கவிழ்ந்திருந்தது. நிராசையும், பீதியும் நிறைந்த மக்களைச் சுமந்துக்கொண்டு அந்தக் கப்பல் இருளைக் கிழித்துக்கொண்டு சென்றது. வெளியில் சூழ்ந்திருந்த காரிருளைப் போலவே கப்பலில் உள்ளவர்கள் மனமும் கறுத்திருந்தது.

நடு இரவு இருக்கும். திடீரென்று காப்டன் வந்து "அபாயம்! எல்லோரும் தயாராக இருங்கள்! நான் சொன்னவுடன் பெண்களும் குழந்தைகளும் உயிர்ப் படகில் குதிக்க வேண்டும்!" என்று சொல்லிவிட்டுப் போனான்.

ஜப்பான் டார்பீடோ கப்பலைத் துரத்திக் கொண்டு வருவதாகவும் அது எந்த நிமிஷத்தில் கப்பலை இடிக்குமோ தெரியாதென்றும் எல்லோரும் பேசிக்கொண்டார்கள்.

"ஒரே ஒரு வித்தியாசம்!" என்றாள் லலிதா.

"என்ன?"

"அன்று நாம் வரும்பொழுது பௌர்ணமி! இன்று அமாசை! நான் அன்று பேசினது இன்று பலிக்கப் போகிறது!" என்று சிரித்தாள்.

"அசடு! வீண் பிடிவாதம் பிடிக்காதே! பேசாமல் படகில் ஏறிக்கொள்; வயிற்றில் குழந்தை யிருக்கிறது!" என்றான் விசு. அவன் குரலும் சிறிது நடுங்கிற்று.

"கொஞ்சம் இருங்கள்! அறை வரையில் போய் வருகிறேன்!" என்றெழுந்திருந்தாள் லலிதா.

"எதற்கு?"

"பெட்டியிலிருக்கும் வைர நகைகளை எடுத்து தலைப்பில் முடிந்துக் கொண்டு வருகிறேன். உயிர் பிழைத்தால் உதவியாயிருக்கும்!" என்றோடினாள் அவள்.

-600 008

"போகிறது! இந்த மட்டும் தப்பித்துக் கொள்ள சம்மதித்தாளே!" என்று கவலையற்றிருந்தான் விசு.

வெகுநேரம் கழித்து வந்த லலிதா விசுவின் மடியில் தலையை வைத்துப் படுத்துக் கொண்டாள்.

"என்ன லலி? உனக்கென்ன செய்கிறது?" என்று பதறியவாறு அவளைத் தூக்கிப்பிடித்தான் விசு......"

பதில் சொல்ல வாயைத்திறந்த லலிதா குபீரென்று ஒரே ரத்தமாய் வாந்தி யெடுத்தாள்.

"ஐயோ! எனக்கொன்றும் தெரியவில்லையே!" என்று பதறினான் விசு. அருகிலிருந்தவர்களும் 'என்ன? என்ன?' வென்று அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள்.

லலிதாவுக்கு மேல்மூச்சு வாங்கியது. கையும் காலும் சில்லிட்டு விட்டது. விசுவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவனுடம்பு நடுங்கிற்று.

"லலிதா!"

சிரமப்பட்டுக் கண்களைத் திறந்தாள் அவள். "மன்னித்து விடுங்கள்! ஒரு நிமிஷம் கூட உங்களைப் பிரிந்து என்னால் இருக்கமுடியாது! எங்கே படகில் தள்ளிவிடுவீர்களோ என்று பயந்தே வைரத்தைப் பொடி பண்ணிச் சாப்பிட்டு விட்டேன்!" என்றாள். கண்கள் மூடிக் கொண்டன. அவன் மடியில் தலை துவண்டு விழுந்தது.

அதே சமயம் கேப்டன் வந்து "அபாயம் நீங்கிவிட்டது!" என்று அறிவித்து விட்டுச் சென்றான்.

இருண்ட அந்த இரவில் சந்தோஷம் நிரம்பிய எண்ணற்ற மக்களையும், நிராசை அடைந்த ஒரே ஒரு மனிதனையும் இன்பமாக உயிரைத் துறந்த ஒரு யுவதியின் சடலத்தையும் தாங்கிச் சென்று மறைந்தது அந்தக் கப்பல்!

கமலாவின் புடவை

— லக்ஷ்மி நாராயணன் —

நம்முள் அழகை விரும்பாதவர் யார்? ஒவ்வொருவரும் தானும், தன்னுடைய நடை உடை பாவனை முதலியவைகளும், மற்றும் தன்னைச் சேர்ந்த விஷயங்களும் அழகாய் இருக்க வேண்டுமென்றே ஆசைப்படுகிறார்கள். ஆனால் இந்த ஆசை சிலருக்குத்தான் இயற்கையிலேயே கிட்டுகிறது. மற்றவர்கள் செயற்கை முறைகளையே அனுசரிக்க வேண்டியிருக்கிறது. அழகாயிருப்பவர்கள் கூடத் தம் அழகை மேன்மை படுத்திக்கொள்ள விரும்புகிறார்கள். 'அழகுக்கு அழகு செய்ய' முயலுகிறார்கள். இந்தச் செயற்கை முறைகள் அளவுக்கு மீறாமலும், அவரவர்கள் சக்திக்கு ஏற்றவாறும் இருக்க வேண்டுமல்லவா?

இந்தக் காலமோ 'சர்வம் பஞ்ச மயம்' என்று சொல்லும் காலமாய் இருக்கிறது. ஒரு சாமானும் வேண்டும்போது வேண்டியபடி கிடைப்பதில்லை. அப்படித் தப்பித் தவறிக் கிடைத்தாலும் ஒவ்வொன்றும் யானை விலை குதிரை விலையாய் இருக்கிறது. அப்படியிருந்தும் நமக்கு மிகவும் அவசியமான பொருள்களை வாங்கித்தானே ஆக வேண்டியிருக்கிறது. நமது உடைக்கு அத்தியாவசியமாக இருக்கும் துணி மாத்திரம் இவ் விதிக்கு விலக்காய் எப்படி இருக்க முடியும்?

இப்போது ஸ்கூலுக்கும் காலேஜுக்கும் போகிற பெண்களுக்கு தினசரி உடுத்திக் கொள்ள வேண்டியிருக்கும் புடவைகள் கிடைப்பதே அரிதாயிருக்கிறது. பட்டுப் புடவைகளின் விலையைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். நூல் புடவைகளின் விலையைப் பட்டுப் புடவைகளின் விலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, குறைவாகக் காணப்படுகிறதே தவிர, அதை மட்டும் தனியாகப் பார்க்கும்போது, அது மிக உயர்ந்த ஸ்தானத்தையே வகிக்கிறது. ரேஷன் மூலம் கொடுக்கப்படும் புடவை 'விலையில் மிக சல்லிசாக இருக்கிறதே வாங்குவோம்' என்றால் ஐந்து கஜம். சாதாரணமானவர்களுக்கே போதுமோ போதாதோ என்று இருக்கிறது. இரட்டை நாடி சரீரமுள்ளவர்களுக்குப் போதுவதே யில்லை. உயரமாயுள்ளவர்களுக்கும், காலை வீசி நடப்பவர்களுக்கும் காலில் தடுக்குகிறது. இக் காலத்திலோ உடலை அடக்கி ஒடுக்கி அன்ன நடை நடந்தால் ஒரு காரியமும் ஆவதில்லை. பஸ், டிராம் போன்றவைகளுக்கு 'நான் முந்தி, நீ முந்தி' என்று போட்டி போட்டுப் பந்தய ஓட்டம் ஓடவேண்டியிருக்கிறது. அந்த அவசரத்தில் புடவை தடுக்கி, ஏறுவதற்கே திண்டாட்டமாய் விடுகிறது. ஆகையால் புடவை ஆறு கஜமாக இருந்தால் தான் சௌகரியமாய் உடுத்திக்கொள்ள முடிகிறது. உள் பாவாடை போட்டுப் புடவை கட்டுபவர்களுக்கு அதற்கு மேல் நீளமும் அனாவசியம் என்றே சொல்ல வேண்டும்.

மேற் சொன்னவைகளுக்கு அனுகூலமாக ஓர் அழகான ஆறு கஜப் புடைவையை நாமே தயார் செய்து கொள்ளலாமே. அப்படிச் செய்தால் ஆறு ஏழு ரூபாய்க்குமேல் ஆகாது. அடிக்கடி வண்ணானுக்குப் போட்டு கட்டிக் கொள்ளவும் முடியும். வீட்டில் தையல்

உயர்தர
கொள்ளேகால பட்டுப் புடவை
கள், அசல் பூஜு புடவைகள்,
உறையூர் புடவைகள் எமது
ஸ்பெஷல் ரகங்கள்.
ஸ்ரீ ராம் ஸ்டோர்ஸ் லிமிடெட்
உயர்தர ஜவுளி வியாபாரிகள்
37. பைகிராப்ட்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி.

மெஷின் இருந்துவிட்டால் நாமே தைத்துக் கொள்ளலாம். தையல்காரன் கடைக்கு வாரக் கணக்காய் நடக்கும் நடையும் லாபந்தான். எதிர்வீட்டுக் கமலா அப்படித்தான் செய்திருக்கிறாள்.

கமலா கூப்பனுக்குப் புடைவை வாங்கிக் கொள்ளவில்லை. அதற்கு பதிலாக தன்னுடைய பங்கான ஐந்து கஜத்திற்கும், தன் அம்மாவை அவளுடைய பங்கிலிருந்து ஒரு கஜம் தனக்குத் தரும்படிக் கேட்டு, அதற்கு மாறாக, ஒரு புடைவைக்குக் காணும் படியாக மொத்தம் ஆறு கஜ மல் வாங்கிக் கொண்டாள். பின்பு, கைத்தறி துணி விற்கிறார்களே, பல மாதிரிகளில் பளிச்சென்ற வர்ணங்களில் கோடுகள் கட்டங்கள் போட்ட மாதிரிகளாக அந்தத் துணியில் ஒரு துண்டு வாங்கிக் கொண்டாள். அந்தத் துண்டு ஒரு கஜம் அகலம், ஒன்றே அரைக்கால் கஜம் நீளம். ஆறு கஜப் புடவைக்கு 'பார்டர்' வைத்துத் தைக்க வேண்டுமானால் 'பார்டர்' ஒன்பது கஜம் வேண்டுமல்லவா? அதற்காக, அந்தத் துண்டை எட்டு பாகங்களாக பகிர்ந்து கொண்டாள். பிறகு, கிழிந்த அந்த எட்டுத் துணிகளேயும் ஒன்றோடொன்று பிணைத்தாள். அப்படிச் செய்து ஒன்பது கஜம் 'பார்டர்' தயாராகி விட்டது.

பிறகு புடைவையின் இரண்டு பக்கத் தலைப்புக்களின் ஓரங்களேயும் மடித்துத் தைத்து விட்டு, கரை வைத்துத் தைக்கும் புடவைகளுக்குச் செய்வது போல் புடைவைக்காக கிழித்து வைத்திருக்கும் மல்லில் இந்த பார்டரை வைத்துத் தைத்து விட்டாள். அதாவது இரண்டு விளிம்புகளேயும் ... பக்கம் மடித்துவிட்டு, கரையின் ... புறத்தைப் புடைவையின் மேல் வை... இரண்டு விளிம்புகளின் மேலும் உள் தலைப்பின் ஒரு நுனியிலிருந்து தைக்க ஆரம்பித்து நீள தைத்துக் கொண்டே போனாள். தலைப்பின் மூலை வந்ததும் ஒழுங்காக மடித்து மூலை திருப்பித் தலைப்பைத் தைத்தாள். பிறகுதலைப்பின் மறு மூலையையும் ஒழுங்காகத் தைத்த பின், புடவையின் மறு பக்கத்தையும் தைத்துக்கொண்டே போனாள். புடவையில் கொசவம் வைக்க ஆரம்பிக்கும் இடம் வரையில் 'பார்டர்' வந்தது.

அவ்வளவுதான். ஒரு அழகிய புடவை ஆய்விட்டது! இம்மாதிரிப் புடவைக்கு ஏற்றாற் போல அந்த பார்டர் துணியிலேயே சட்டை வைத்துப் போட்டுக்கொண்டால், பார்ப்பதற்கு வெகு அழகாக இருக்கிறது. புடைவையால் சட்டையும், சட்டையால் புடைவையும் ஒன்றை ஒன்று அதிகம் அழகு படுத்துகிறது. கமலா கல்லூரிக்கு இந்த 'யூனிபார்ம்' அணிந்து கொண்டு போனபோது, அவள் சினேகிதர்களெல்லாம் 'எங்கே வாங்கினாய்? எங்கே கிடைக்கிறது?' என்று அவளேத் துளைத்து விட்டார்களாம்.

இதேமாதிரி கோடுகள் கட்டங்கள் போட்ட துணிக்குப் பதிலாக சாதாத் துணியை வாங்கி மெல்லியதாகக் கிழித்துப் புடைவைக்கு 'பைப்பிங்' பார்டராகவும் அமைத்துக் கொள்ளலாம். இதுவும் பார்ப்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது.

பெண்

இந்திரா

இன்று அனேக சிக்கலான பிரச்னைகள் காணப்படுகின்றன நம்முன். நாம் திடங்கொண்டு போராடவேண்டிய சமயமிது. இப்பிரச்னைகளுள் மிக முக்கியமானது, "சுதந்திர இந்தியாவில் பெண்களின் நிலை." நம் ஸ்தானம், உரிமைகள், கடமைகள் என்னும் முப்பிரிவு கொண்டது இது. உண்மையில், மற்றெல்லாப் பிரச்னைகளைக் காட்டிலும் மிகவும் சிக்கலானதும், விரைவில் தெளிவாக விளங்கப்பட வேண்டியதும் ஆன பிரச்னை இதுவே. பலதரப்பட்ட அபிப்பிராய பேதங்களும் கொள்கைகளும் இருக்கின்றன இவ் விஷயத்தில். ஆயினும் அடிப்படையான பொதுவான சில விஷயங்கள் ஆராய்ந்து பார்ப்போமிங்கு.

"ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோ மிந்த நாட்டிலே" என்ற அமரகவியின் அரும் வாக்கு பலிதமடையும் நாள் இது. தற்காலத்தில், எத்துறையிலும் ஆண்களோடு அரும் போட்டியிடும் ஆற்றல் மிக்கவர் மகளிர், என்பதும் மறுக்க முடியாததோர் உண்மை. ஸ்திரீகளில் விகிதாசாரம் பார்த்தால் நூற்றுக்கு ஐம்பது பேராவது இவ்வினத்தைச் சேர்ந்தவராக இருப்பது திண்ணம். நம் நாரீமணிகள் அடைந்திருக்கும் முன்னேற்றம் மனம் மகிழத் தக்கது. பெருமிதம் கொள்வதும் பொருத்தமே. குறுகிய காலத்தில், மா பெரும் தடைகளையும் கட்டுதிட்டங்களையும் மீறி சமாளித்துக்கொண்டு இன்று தலை நிமிர்ந்து, உன்னதமான பாதையில், தாய் நாட்டின் சேவையில், தாய்மையின் தண்மையில் திளைத்து விளையாடும், தீர மங்கை ஒவ்வொருத்தியையும், லக்ஷயப் பெண்மணி ஒவ்வொருத்தியையும், நினைக்கும்தோறும், பார்க்குந்தோறும், எந்த இந்தியப் பெண்தான் கர்வப் படமாட்டாள்? பாரத நாட்டின் பழம் பெரும் பெருமைக்கும், பாரத மகளிரின் வலி குன்றாத வயிர நெஞ்சிற்கும் அழியா ஞாபகச் சின்னமல்லவா இவர்கள்? அபலை என்றார் சிலர். யாரை? மங்கையின் வலி அறியாதார் போலும். அபலையின் வெற்றியின் ரகசியம்தான் என்ன? மனோதத்துவ சாஸ்திர ஆராய்ச்சியாளர் இதற்குத் தக்க பதில் தரவல்லவர். எடுத்தது எந்தக் காரியமானாலும் சரி, முடித்தே தீர வேண்டும். மனோ உறுதி, லக்ஷயத்தில் ஒன்றி விடுவது, இம்மூன்றும் பெண் குலத்தின் பிறப்புரிமை. ஸர்வ வித்தையும் கற்றுத் தேர்ந்தவர் முதல், எழுத்தறியா ஏழையின் கூட்டம் வரையிலும், பெண் மக்களிடம் இது தெளியக் காணக் கிடைக்கிறது. இதுவே பெண்களின் முதல் ஆயுதம்.

இந்த விசித்ர வலிமை பொருந்திய ஆயுதத்தின் உதவியாலேயே தொன்றுதொட்டு இன்றுவரை சரித்திரப் போக்கையே, ஓர் தேசத்தின் விதியையே, ஆக்கவும், அழிக்கவும், அறவே மாற்றவும் செய்து வந்தனர் வனிதைகள். மேற்கோள் காட்டப்போனால் கணக்கிலடங்காது, மிக விரியுமிந்தக் கட்டுரையும். ஒன்று, இரண்டு சான்றுகள் காட்டுவோம். அன்று முடித்த கூந்தல் விரித்து "நூற்றுவரின் கூட்டத்தையே நமனுக்கு விருந்தாக்கிய பின்னரே நான் விரித்த குழலை முடிப்பேன்" என்ற வீர வனிதை திரௌபதி இல்லாவிட்டால் பாரதப் போரும், மகாபாரதமுமேது இங்கு. பொன் மான் கிடைத்தே யாகவேண்டும், நீ இன்றி அயோத்தியும் காடே, நீயுற்ற காடும் நாடே என்று நாடிழந்த நாயகனுடன் நடந்து சென்ற பெண் மான் இன்றேல், இராமாயண மஹா காவ்யம் ஏது நமக்கு? சரித்திரத்திலோ, ராணி பத்மினி, சக்கரவர்த்தினி நூர்ஜஹான், ஜான்ஸி ராணி போன்றவர் போக்கையே மாற்றி விட்டனர். ப்ரம்ம ஸாக்ஷாத் காலத்திலோ பிரிதொன்றும் வேண்டா நின்ற மைத்ரேயின் தானம், மகளிர் குழாத்திற்கு ப்ருஹதாரண்யோகோபநிஷத். மும்மூர்த்திகளையும் மடியில் கிடக்கும் குழந்தைகளாக மாற்றிய அனஸூயை கற்பித்த படிப்பினை ஓர் பெரும் நீதி உலகிற்கு. பாரத நாட்டுப் பெண்மணிகள் முன்னுக்கு வருவதும் முற்றும் துறப்பதும், அத்துறையிலும் யாவரிலும் தலை சிறந்து விளங்குவதும் இன்று ஏற்பட்ட புதுமை யல்ல. ஆதிமுதல் தொடர்ந்து இருந்து வரும் புதுமையேயாம். சிறிது மயக்கம் மத்தியில், உணர்விழந்து உறங்கியதுண்டு. விழித்தெழுந்தனர் வீர முரசு கொட்ட. போர் சென்ற மகன் இறந்துவிட்டானே என்று அழாது பட்ட காயம் முதுகிலா, மார்பிலா என்று பார்க்கப் படுகளம் சென்று தேடிய வீரப்பெண்ணின் மரபு வந்த மகளிர் மாண்பு கூறற்பாலதோ!

காலமென்றாலே மாறுதலல்லவா. மாறுதலின்றேல் மற்றென்ன உளது, மஹாப்ரளயமின்றி. ஆகவே மாறுதலுக்குட்பட்டுக் காண்கின்றன செயலும் ஆற்றலும், அவ்வளவே.

சுமார் ஐம்பதாண்டுகளுக்கு முன் இத்தனை தைரியமில்லை பேச. மயக்கத்தின் மத்தி அது. பேசினாலோ பல் மேல் போடுவாள் பாட்டி. "நன்றாயிருக்குதடி உன் துடுக்கு. அதனப்ரஸங்கி. பெண்ணாக லக்ஷணமாக இராமல் அடக்கமின்றி உரிமையாம், ஸமத்துவமாம், படிப்பாம். சீ மூடு வாயை" என்பாள். நம்வீட்டுப் புருஷரோ கேட்க வேண்டாம். கதைகளிலும் காவ்யங்களிலும் வருமே "கதிரவனும் காணக் கிடைக்காத கன்னிகை" கற்பரசி என்று, அதுபோல அலங்காரப் பதுமையாகவோ, அடிமைப் பெண்ணாகவோ ஆண்டு வந்தார்கள் பெண்களை. அந்தக் காலம் மலையேறி விட்டது இப்பொழுது. புதுமைப் பெண் புத்துயிர் கொண்டு பூரித்து நிற்

கிறாள். களி நடம் புரிகிறாள்.வெற்றிக் காண்கிறாள். ...ஆம்...எத்துறையிலும் அவள் கைத்திறனைக் காணலாம்.

தொழிலாவது என்? செயலாற்றுவது. இது ஆண் பெண் இரு சாரார்க்கும் பொதுவானதே. ஆயினும் சில வகைத் தொழில்கள் ஆண்களுக்கே யேற்றவை என்று கருதப்பட்டு வந்தன. அவற்றில் என்ஜினீரிங் வித்தை மிகக் கடினம். ஸ்திரீகளுக்கு அடியோடு தகுதியற்றது என்று கூறப்பட்டு வந்தது. இன்றோ அதிலும் பெண் சக்தி பிரவேசம் செய்து விட்டது. வெற்றியும் கண்டுவிட்டது என்றால் மிகை ஆகாது. விஞ்ஞான வெளியிலோ; வேதாந்த ஒளியிலோ, வேய்ங்குழல் வேலைத்திறன் போற்றத் தக்கதே. வைத்யத் தொழிலிலோ,வனிதைகளை விரும்பாதவர் இல்லை. தன்னினத்தின் சேவையில், தன்னை மறந்து ஈடுபடுகிறாள் தைர்யலக்ஷ்மி. சட்டசபையிலே பெண்கள், சந்தைக் கடைகளிலே பெண்கள், வியாபாரத் துறையிலோ வனிதையர், வயல் காட்டிலே பெண்கள், சமூக சீர்திருத்த மாதர். சமையலறையில் மாதூர். தாய்நாட்டின் சேவையிலே தவப் புதல்விகள். தாய்மையின் தூய்மையிலே ஸ்திரீ ரத்னங்கள். அரசியலில் செயல் புரியும் மகளிர். மந்திரி மண்டலத்தில் மன்றாடும் மங்கையர். அந்நிய நாட்டுத் தூதுவர் மகளிர். புதுமை, பெண்மையின் புதுமைப் புரட்சி. இதற்குமுன் அன்னிய நாட்டுத் தூதுவரின் பெண்ணைக் கண்டதில்லை. கேட்டதில்லை. இன்று பெண் சக்தி ஆனந்த நடனமாடுகிறது.

இவ்வளவு விசேஷமான சக்தியை பெண்ணானவள் எப்படிப் பயன்படுத்துவது? தேசத்தில் வருங் காலத்தில் தன் இடத்தை உறுதிப்பாடு செய்துக் கொள்வது எப்படி? வெறும் உத்யோக வெறியால் மட்டும் பெண் உலகிற்கு வெற்றி கிட்டுமா? அல்லது ஆபீஸுகளில், பள்ளிக்கூடங்களில் வேலை பார்த்து விட்டால் மாத்திரம் வாழ்க்கையின் லக்ஷ்யம் பூர்த்தியாகிவிடுமா? இல்லை, இல்லை. முக்காலுமில்லை. கட்டிலிருந்து விடுபட்டதால் வரம்பு கடந்திருக்கும் வெறியை அடக்கவேண்டும். விவேகத்தை உபயோகித்து நன்மை தீமைகளையும், லாபாலாபங்களையும் தீர்க்க தரிசனத்துடன் ஆராய்ந்து அறியவேண்டும்.

பெண்மையின் பெரும் சக்தி என்ன? பெண்மையின் பிறப்புரிமை ஆயுதம் எது? பெண்மையின் பேரழகுதான் என்ன? மூன்றே எழுத்துக்களில் அடங்கிவிடுவது மந்திர மொழி. முத்தமிழின் முதல் மொழியாவது 'அன்பு'. ஆடும் பாம்பையும் அடக்கும் அன்பின் சக்தி, க்ரூர ஹ்ருதயத்தையும் குழையச் செய்யும். ஆத்திரங் கொண்டு வரும் பரம விரோதியையும் பின்னிடச் செய்யும் ப்ரேமையின் ப்ரபாவம். ஆணவமும் அகங்குன்றும் அன்பின் அருகே. இயற்கையன்னையின் அருளால் தனக்கு வாய்த்த அன்பெனும் அஸ்திவாரத்தின் மீது பெண் தன் கோட்டையை எழுப்பினால், பின்னதைத் தகர்த்தெறிய வல்லாரும் உளரோ! பெண் சக்தி பின்வாங்கும் தன்மை அற்றது. அத்தகையது ஒரு வேளை பிழைத்த பாதையில் ப்ரவசித்தால் பிறகு ப்ரளயம்தான். ஆதிமுதல் உத்தமமான மார்க்கத்தில் திரும்பி விடுதலின்று அழுவது-நன்மை நல்லதோ, அல்லதோ, பிடித்தால் உடும்புப் பிடி தான். இத்தகைய ஓர் சக்தியை உத்தம வழியில் செலுத்தியே தீரவேண்டும். இது இன்றியமையாதது.

அனேக பழக்கவழக்கங்கள் நம்மிடையே நிலவுகின்றனவே, இவற்றின் காரணமோ, காரியமோ, அறிந்தவர் எத்தனை பேர்? என்னமோ பெரியவர்கள் செய்து வந்தது பழைய நாள் வழக்கம். இதுதான் கேட்டால் பதில். அனுஷ்டிப்பதன் பலன் என்ன தெரியும் நமக்கு. யோசித்தால் தானே. நாகரீக நாமத்தால் நடமாடும் பழக்கங்களிலும் இத்தன்மையானது அனேகம் காண்கிறோம். நமது தேசத்திற்கு, காலத்திற்கு, ஆரோக்யத்திற்கு மனப்பண்பிற்கு எற்றதா இல்லையா என்றறியாத இம்மடமை தவிர்க்க, கருத்து உணராது காரியம் செய்வது கசடர் தன்மை. கல்வியறிவு கலையுணர்ச்சி, தேச ஸேவை ஸமூகத் தொண்டு, அரசியல் ஞானம் தொழிலாற்றல் அனைத்தும் நாமறிந்து நடத்த வேண்டியவையே. ஆனால் இவற்றை ஆர்வத்தோடு, அன்போடு பொருத்தி அற்புத செயல் புரிய வேண்டும். ஆத்திரமோ, தன்னலமோ அண்டுதல் கூடாது.

இத்துறையில் வீட்டுக்கு வெளியே பரந்த ஸேவை. வீட்டிலோ, விருப்பமற்று வெறுப்பூட்டும் உதாசீனம், சீறி விழுதல் பெண்மையல்ல. ஆம், பெண்ணும் மனிதவர்க்கம் தானே. உணர்ச்சி வரப்படுவது தவறா? இல்லை. ஆனால் அடக்கிக் கொள்ளும் சக்தி அன்பின் சக்தி. ஆணைக்காட்டிலும் பெண் இடத்தில் தலைதூக்கி இருக்கிறது. ஸகிப்பது அவள் தன்மை. தயை அவள் குணம்,க்ஷமை அவள் செயல். ஸேவை அவளது வாழ்க்கை. ஸேவையின் முதல் பாடம் கற்றுக் கொடுக்கப்படுவது குடும்பத்தில், கல்வியின் முதல் பாடம். 'அம்மா' என்பது. கலையுணர்ச்சியை குழந்தைக்கு ஊட்டுவது தாய். சமூக பந்தம் முதல் முதல் குடும்பத்தில் தான் எற்படுகிறது என்பதில் ஐயமில்லை. ஆட்சி ஞானம் அரசியல் தொழிற்ஞானம், பொருளாதார அறிவு. அன்புடன் அறிவுறுத்தப் படுவது அன்னையின் அன்பால்தான். அன்னை யார்? பெண். இத்தகைய பெண் எத்தகைய நிலையும் எற்க வல்லவள் என்பதில் என்ன தடை? இத்தகைய தாய்மையை அவமதித்தால் பெண்மைக்குப் புறம்பானது. அன்னையின் கடமையை அவமதித்தால் அண்டம் கிடுகிடுக்கும். மழலைச் சொல்லால் மாதாவை "அம்மா" என்றழைக்கும் குழந்தை ப்ரபஞ்சத்தின் ஸர்வ சக்தியையும், தேசத்தின் உன்னதியையும் கூவுகிறதல்லவா?

"அன்று என்னை அளித்த அன்பளிப்பு வாழ்க்கைப் பாடம் இன்று என்னை இயக்கிச் செல்கிறது" இது ஒவ்வோர் பெண்ணிற்கும் மந்திர மொழியல்லவா!

நம் நாரீமணிகள் குன்றின் மேலிட்ட விளக்கன்ன ஒளி வீசுதல் வேண்டும். வீண் ஜம்பம், ,மடமை மங்க வேண்டும். மாதர் தம்மின் பிரதியொரு அசைவும் அன்பினின்று எழும் அருட் கிரணங்களாகத் திகழ வேண்டும். அன்புப் பணியாற்றி, அன்பரசு புரிந்து, அன்புத் தொழில் ஆற்றும் வன்மை, பெண் சக்திக்கன்றி பிறிது எதற்கு உண்டு?

எத் துறையிலும், எஞ்ஞான்றும் ஊடுருவிச் செல்லும் அன்புக் கிரணம் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ அருளும் தேசத்தில், ஏன் உலகிலேயே பெண் தன் இடத்தை நிலைநாட்ட பேருதவி செய்யும் ஸாதனமாம் இது.

நம் தலைவி ஸரோஜினியின் இடம் எது? ஓர் மாகாண கவர்னராக, சரித்திரத்திலேயே முதன்மையாக ஓர் ஸ்திரீ வீற்றிருக்கிறார். அவரின் அந்தரங்க சக்திதான் என்னவோ, கவியரசி—கவர்னராஞர். இதில் அதிசயம் எது மில்லையே. கவி—காவ்யம், அன்பு—அன்புச் சக்தி. அன்பு அரசாளுதலில் ஐய மேது?

இன்று தொலை தூரத்தில் பொதுவுடைமை தலை தூக்கியதோர் நாட்டிலே தன் நிகரில்லா, வாக்கு வன்மையால், தாய் நாட்டின் தனிப் பெருமையை விளங்கச் செய்துகொண்டிருப்பவரும் ஓர் மாதுதான். இதென்ன விந்தை? எந்த நாட்டிலும் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. ஒரு ஸ்திரீயாவது, அன்னிய நாட்டுத் தூதராக ஆகவாவது. ஐரோப்பிய தேசங்களிலும் கூட இதுகாறுமில்லையே என்று மூக்கின் மேல் விரல் வைக்கிறார்கள். பாரதத் தாயின் தவப் புதல்வி விஜயலக்ஷ்மி வாழ்க! அன்னையின் அன்பு, அருள், ஆத்யந்தம் பரவி இருக்க, பின்வேறு எப்படி இருக்க முடியும்?

நம் ஒவ்வொரு மகளும் தன் சூழ்நிலைக்கேற்க, பணியாற்ற பதவி வகிக்க வேண்டும். ஒரு தொழிலுக்கு மற்றொன்று மட்டமில்லை. ஒவ்வொரு பெண்ணுக்குமிப் பயிற்சி அளிக்கவும் பெண்ணுகிய தாயே பிரதான போதகர். உபயோகமற்ற, வீணான எண்ணங்களும், நாகரீகமும் மறைய வேண்டும். பழையனவோ, புதியனவோ சமூக, தேச முன்னேற்றத்திற்கான மார்க்கங்களைக் கையாள வேண்டும். உற்பத்தி ஸ்தானம் எது என்கிறீர்களோ? மனைக் கோயில்தான். மனைக் கோயிலில் குடிகொண்ட தெய்வமோ—பெண்தான். ஆகவே பிரயத்தனம், பிரயோஜனம், ப்ரேமை மூன்றும் நமது கடமை. 'நெக்கு விடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்கு விடும்' என்பதுபோல் அதிக முரட்டு ஸ்வபாவத்தையும் பயன் பெறச் செய்யலாம் பெண் மனம் வைத்தால் வரும் தலைமுறைகளையே லக்ஷ்ய மக்களாக அமைத்து விடலாம். பெரும்பாரம் பெண் தலையில் இருக்கிறது.

இத்தகைய பெண் முதலில் கைப்பற்ற வேண்டியவை கல்விச் சாலைகளும், சுகாதார இலாகாக்களும். கிராமப் புனருத்தாரணம், சமூகசேவை என்ற அடிப்படையான இரண்டு அரும் பணிகளும் பெண்கள் கைப்பற்றி சீர்திருத்த சிறந்து விளங்கும் தாய் நாடு. இதினின்று எழுவதே அரசியல், சட்ட சபை பதவி முதலியவை. கல்விச் சாலைகளின் பெண்களின் சேவையும் தேவையும் அத்யாவசியம். பாலகரின் பச்சை மனதைப் புண்ணுக்காது அறிவூட்டவல்லது. பெண்மையின் தாய்மையோ ஸேவை—பெண்மை இரண்டும் பிரிக்க முடியாதவை. ஒன்றில்லாவிடின் மற்றொன்றும் இல்லைதான். உலகிற்கே வழிகாட்டியாக விளங்க வேண்டியவர் இந்திய மாதர். தனித்த முறையில் இன்றியமையாதவளும் பொதுத் துறையில் போதாவாகவும் பொலிவது பெண்ணின்பேரின்பண். கௌரவத்திற்கல்ல, பெருமைக்கல்ல, புகழுக்கல்ல. கடமை இது என்றுணர்ந்து பெண் பணியாற்றி, வழிகாட்டி சாந்தியளிக்க வேண்டும். வெற்றி, வித்தம், முயற்சி பெருக வேண்டும்.

நம் முன்னோர் சிவன் என்றிராதே. சக்தியைத் தொழு. ச்ரீ சேர்க்காது, நாராயண என்பது உசிதமல்ல. ஸரஸ்வதி மணாளனைப் போற்று. காயத்ரியை ஜெபி என்பது எல்லாம் வெட்டிப் பேச்சல்ல. சக்தியின்றி சிவமில்லை. திருவின்றி விஷ்ணு இல்லை. வாக்கின்றி, வாகீச்வரன் இல்லை. ஒன்று நடத்தும் சக்தி, மற்றொன்று ஆதார சக்தி. இதில் எதை விட்டால் எது இயங்கும்? நெய்க்கு தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய்யா கூறுங்கள் பார்க்கலாம். அன்புத் தெய்வங்களும் பெண்களே. சிறந்த வேதமந்திரங்கள் புகழுமித் தெய்வங்களே. கலையோ திருவோ, சக்தியோயின்றி பிரபஞ்சம் நிற்காது. அத்தகைய ஸ்தானத்தை அலங்கரிப்பது பெண் ரூபமான தெய்வங்கள். அன்பே அருள். பெண் தன்னையறிய, ஆண்சக்தி பெண் சக்தியின் அருமையறிந்து போற்றும். ஆளப் பிறந்தது அழியா அன்பு. அதன் ஆதிக்கத்தையும் வெற்றி முரசையும் கண்டோம், கேட்டோம். எங்கு? ரத்த வெள்ளத்தின் மத்தியிலேயே. கோரக் கொலைகளின் கூத்தின் நடுவே. அஹிம்சையின் வெற்றி—அன்பின் வெற்றி இன்று. நம் மாபெரும் தலைவர் அறிவுறுத்துவதுமதுவே. எச்சமயமும் எம்மதமும் அன்பெனும் அஸ்திவாரத்தின் மீதே நிலைத்து நிற்கும். இன்றேல் குறுகிய காலத்தில் வீழ்ச்சியுறும்.

வாழ்க அன்பு! வாழ்க
பெண்!! வாழ்க தாய்மை!!!

தாயும், சேயும்

எல். என்

நாள் பூராவும் வேலை செய்து களைப்புற்றிருக்கும் அவள் 'அம்மாடா' என்று இரவு பதினொரு மணிக்குப் படுக்கையில் வந்து படுக்கிறாள். 'எப்போடா அப்பா படுக்கையைக் காண்போம்' என்று ஏங்கியிருந்த அவள்மனம் நிம்மதியுற்று, அவள் அயர்ந்து தூங்கியும் விடுகிறாள். இரண்டுமணிநேரம் செல்கிறது. 'அம்மா!' என்று அவள் பக்கத்திலிருந்து ஒடு சிறு குரல் கூப்பிடுகிறது.

குழந்தையின் மழலைச் சொல் காதுக்கு எவ்வளவோ இனிமையாய்த்தான் இருக்கிறது. இதைப்பற்றி எத்தனையோ கவிகள் தங்கள் வர்ணனைகளை அளந்து விட்டிருக்கிறார்கள். அது தன் சிறு வாயைத் திறந்து கொச்சை கொச்சையாய்ப் பேசும்போது அதன் தாய் அப்படியே உள்ளம் பூரித்துப்போய்விடுகிறாள். ஆனாலும், பாதி ராத்திரி ஒரு மணிக்கு ஒரு குழந்தை எழுந்து சொற்பொழிவு செய்யத் தொடங்கினால் மிகவும் சோர்வுற்று, தூக்கத்திற்காக ஏங்கிக் கிடக்கும் அவளால்—அதன் தாயால் கூட—அதை அவ்வளவு ரஸிக்க முடிவதில்லை: ஆகையால் பேச்சுக் கொடுத்தால் குழந்தை மேன்மேலும் பேசிக்கொண்டேயிருக்கும் என்று எண்ணி, அவள் மௌனமாக இருந்து விடுகிறாள்.

'அம்மா!' என்று மறுபடியும் அச்சிறு குரல் கேட்டது.

"என்ன?" என்கிறாள்.

"நீ முழிச்சிண்டிருக்கிறாயா, அம்மா?"

"ஆமாம்."

"நானும்."

"நீ முழிச்சிண்டு இருக்கிறதுதான் நீ பேசுவதிலிருந்தே தெரிகிறதே" என்று சற்றுக் கிண்டலாகச் சொல்லி, 'என்ன வேணும்?' என்று கேட்கிறாள்.

"ஒண்ணுமில்லையே"

"பின்னே பேசாமல் படுத்துண்டு தூங்கு"

"நேக்கு தூக்கம் வல்லே அம்மா"

"எனக்கு வரதே கண்ணு"

"நோக்கா? நேக்கு துளிக்கூட வல்லே, சொல்லேன், அம்மா, அம்மா!"

"என்ன சொல்ல?"

"அப்பா ஊதுக்குப் போனா நேக்கு என்ன வாங்கிண்டு வருவா?"

"எனக்குத் தெரியாது—தூங்கு"

"நேக்கு ஒண்ணும் வாங்கமாட்டா அம்மா?"

"வாங்குவா, வாங்குவா. சரி நீ—"

"என்ன அம்மா?"

"மோட்டார் வண்டி வாங்கித் தருவா. சரி, நீ இனிமேல் சமத்தாய் தூங்கணும் கண்ணு"

"பம்பாம் இன்னு ஹான் அடிக்கும்படியாவா, அம்மா?"

"ஆமாம், ஆமாம். இப்பொ நீ—"

"சக்கதம் சுத்தி சுத்தி ஓடுமோல்லியோ?"

அவள் கொட்டாவி விட்டுக் கொண்டே

"ஆமாம், நீ கண்ணை மூடிண்டு—" என்று சொல்லும்போதே.

"அது சீத் இன்னு ஓடுமோன்னோ?" என்று குழந்தை மறுபடியும் கேட்கிறது.

"ஆமாம், ஆமாம். கிர்ருன்னு போகும். நீ தூங்கு!"

"அம்மா சொல்லேன்?"

அவளிடமிருந்து பதில் இல்லை.

"அம்மா!"

"சரி, இப்போ என்ன?"

"நோக்கு இதுட்டைப் பாத்தா பயமா அம்மா?"

"இல்லை" என்று தூங்கி வழிந்துகொண்டே சொல்கிறாள்.

"நேக்கும்"

"சரி"

"அப்பா மாதிரி நான் ஊதுக்குப் போனு, நோக்கு என்ன வாங்குவேன் தெதியுமா?"

"என்ன?"

"ஐஸ்க்தீம், சாகலேட், பிஸ்கோத்து, பஜூன், திப்பன், கலத்சிப்பு, சங்கிலி, வளை, அப்பதம்——"

"சரி, சரி, இவ்வளவு போதும். இப்போ நீ தூங்கணும், சமத்தோ இல்லையோ!

ஒரு அரை விநாடி அமைதி நிலவுகிறது. பிறகு—

"அம்மா—அம்மா!"

"சரி இப்போ என்ன?"

"நேக்குத் தூத்தம் வேணும்"

"உனக்கு இப்போ தாகம் எடுக்காது, தூங்கு"

"எடுக்கதது அம்மா"

குடிக்கத் தீர்த்தம் கொடுத்தால் ஒழியக் குழந்தை பேசாமலிருக்காது என்று நன்றாக அறிந்து கொண்டிருக்கும் அவள், தூங்கி வழிந்துகொண்டே தட்டுத் தடுமாறிக்கொண்டு நடந்து போய் ஒரு டம்பளரில் ஜலத்தைக் கொண்டுவந்து குழந்தையிடம் கொடுத்து விட்டு, 'சரி இனிமேல் தூங்கணும், நச்சு நச்சுன்னு பேசக் கூடாது' என்று எச்சரிக்கிறாள்.

நிஜமாகவே விரும்பாத ஜலத்தை லபக் லபக் கென்று விழுங்கிவிட்டு, படுத்துக் கொண்டே குழந்தை, இரண்டு நிமிஷம் கழித்து மறுபடியும் 'அம்மா!' என்கிறது.

"இதைப் பார், அம்மா கோச்சுப்பேன். நீ--"

நேக்கு "குள்ளநதியும், காக்காயுமாக—" இங்கித பாட்டுத் தெதியுமே' என்று அதை பாட ஆரம்பிக்கிறது குழந்தை.

"ராத்திரி வேளையிலே உன் பாட்டு யாருக்கு வேணும்? மணி ரெண்டு ஆறது. பேசாமல் தூங்கு!"

"அப்போ நான் நல்ல பொண்ணோல்லியோ?"

"ஆமாம், நீ எல்லாப் பொண்களையும் விட நல்லவள். சமத்துக் குட்டி"

"அம்மா!"

"அட ராமா! இப்போ என்ன?"

"நான் ஒன்னோடே பொண்ணுதானே? நோக்கு இன்னம் தெண்டு, மூது, ஆது, பத்து, முப்பத்தேழு, நாப்பத்தி பத்து, நூது பொண் இதுந்தா நன்னாதுக்குமோன்னோ?"

இதைக் கேட்டு அவள் அப்படியே மலைத்துப் போய், என்ன பதில் சொல்வது என்று தோன்றாமல் வாய் அடைபட்டிருக்கும்போது, அவள் பக்கத்திலிருந்து ஓரிரண்டு சிறு கொட்டாவிகள் கேட்கின்றன. ஒரு சிறிய உருவம் இப்படியும் அப்படியுமாய்ப் புரளுகிறது. இரண்டு குட்டிப் பாதங்கள் இரண்டு மூன்று தடவைகள் மேலே போய்ப் போய் வருகின்றன. ஒரு மிருதுவான கை 'அவள் இருக்கிறாளா' என்று ஊர்ஜிதப் படுத்திக்கொள்ள மெதுவாக அவளுடைய முகத்தைத் தடவிப் பார்க்கிறது......

மெள்ளக் கண்களைத் திறந்து பார்க்கிறாள். பொழுது விடிந்துவிட்டது! தலை இருந்த இடத்தில் கால்களும், கால்கள் இருந்த இடத்தில் தலையுமாகக் குழந்தை 'பூலோகமோ, கைலாஸமோ' என்று முகத்தில் புன் சிரிப்புத் தவழ தூங்கிக் கொண்டிருந்தது.

'என்ன ஸாதுவாய்த் தூங்குகிறது பாவம்' என்று சொல்லிக் கொண்டே, எதாவது சத்தம் பண்ணினால் 'எங்கே குழந்தை விழித்துக் கொண்டுவிடுமோ' என்ற பயத்துடன் மெதுவாகப் படுக்கையை விட்டு எழுந்து, தன் அலுவல்களைக் கவனிக்கச் செல்கிறாள் அதன் தாயான அவள்.

குகப்ரியை—ஹரிணி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

"மாலதி! நீதான் என் குறையைத் தீர்க்கவல்லவள் என்று எனக்குத் தோன்றுகிறது."

"ஜீஜாஜீ! உங்களுக்கு உடம்பு சரியாகயில்லை." என்றாள் மெதுவாக.

"இல்லை மாலதி! உடம்பு சரியாகத்தானிருக்கிறது. ஒரு வருஷமாகவே என் மனம் மெல்ல மெல்ல உன்னையே நாடுகின்றது. எத்தனையோ நாள் இதை உன்னிடம் சொல்ல எண்ணினேன். ஆனால் துணியவில்லை." மாலதி பேசவில்லை.

"மாலதி! என் வாழ்க்கை உன் வாய்ச் சொல்லில் தானிருக்கிறது, நீ மறுத்துவிட்டால் என் மனம் சிதறிப்போய்விடும். இந்த ஒரு ஆசையின் சிறு ரேகைதான் என்னை உயிருடன் வாழச்செய்கிறது. இதுவும் போய்விட்டால்......"

"ஜீஜாஜீ! நான் விதவை. கடவுள் என் தலையில் இப்படித்தான் வாழ விதித்துவிட்டார். என்னிடம் நீங்கள் இப்படிப் பேசுவது நியாயமா?"

"நான் சொல்வதில் நியாய விரோதம் ஒன்றுமில்லையே? நான் உன்னை முறைப்படி விவாகம் செய்து கொள்ளுகிறேன்."

"பெண்களுக்கு கணவர் ஒருவர் தானுண்டு," என்று சொல்லிக்கொண்டே 'விர்' றென்று எழுந்து வெளியே போய் விட்டாள் மாலதி. அவள் போனவுடன் தொப்பென்று கட்டிலில் உட்கார்ந்தார். அவளையே பார்த்துக் கொண்டிருந்த டாக்டர் நெடுநேரம் வரையில் சாய்ந்து கிடந்தார் படுக்கையில். அறை முழுவதும் இருள் சூழ்ந்தது. ஆனால் விளக்கேற்ற வேணுமென்று அவர் விரும்பவில்லை. வெளியிருளில் தன் மன இருளை மறக்க முயன்றார்.

அத்தியாயம் 3.

சமீபத்தில்தான் வெளி நாட்டிலிருந்து திரும்பி வந்த மாலதியின் தமையன், டாக்டர் சிவாதாரைப் பார்க்க வந்தான். அன்று பதினொரு மணிக்கு அவன் ஊருக்குப் புறப்படுவதாக ஏற்பாடு. பிரேமாவும் காலேஜுக்குப் போய்விட்டாள். மாலதியின் சகோதரன் தன் சாமான்களை ஒழுங்கு படுத்திக் கட்டிக் கொண்டிருந்தான். அதே சமயம் மாலதி மெதுவாக சிவாதாருடைய அறையில் நுழைந்தாள்.

அன்று நடந்த சம்பவத்திற்குப் பிறகு இன்றுதான் அவள் அவரைப் பார்த்தாள். அன்று முதல் அவள் அவருடைய வேலைகளையும், அவரை கவனிக்கும் பொறுப்பையும் வேலைக்காரரிடம் ஒப்புவித்துவிட்டாள்.

அவரைக் கண்டதும் 'நமஸ்தே' என்று கரங் குவித்தவளாய் அருகிலுள்ள நாற்காலியில் உட்கார்ந்தாள். "என்னம்மா! எப்படியிருக்கிறாய்?" என்றார்.

"இருக்கிறேன் வழக்கம்போல்" என்றாள்.

சற்று நேரம் இருவரும் பேசவில்லை. பிறகு மாலதி மெதுவான குரலில், "ஜீஜாஜீ! நான் அண்ணாவுடன் ஊருக்குப் போகலாமென்றிருக்கிறேன்" என்றாள்.

அவர் திடுக்கிட்டார். "ஏன்?" என்ற கேள்வி மிகுந்த சிரமத்துடன் அவர் வாயினின்றும் எழுந்தது.

"ஒன்றுமில்லை, அண்ணா கூப்பிடுகிறார். போய் விட்டு வரலாமே என்றுதான்."

"மாலதி! அன்று நான் சொன்ன விஷயத்தை மறந்துவிடு. மன்னித்துவிடு மாலதி! நீ எங்கேயும்

போக வேண்டியதில்லை. இங்கேயே இருக்கலாம்" என்று கெஞ்சிய குரலில் கூறினார். மாலதி பேசவேயில்லை.

மறுபடியும் டாக்டர் சொன்னார். "மாலதி! நீ நான்கு வருஷமாக இங்கேயிருக்கிறாயே...." ஜீஜாஜீ! நான் உங்களை ஒன்றும் குற்றம் சொல்லவில்லையே. ஆனாலும் நான் இங்கிருந்து போய்விடுவதுதான் நல்லது."

"நீ இப்படி திடீரென்று புறப்பட்டுப் போவது எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது."

"இல்லை, நான் போவதுதான் நல்லது. இது உங்களுக்குத்தான் நன்மை."

"சரி உன்னிஷ்டம்" என்றார். அதற்கு மேல் பேச அவருக்கு தைரியமில்லை.

மாலதி அவர் பாதத்தைத் தொட்டு வணங்கினாள். அவர் கண்கள் கண்ணீரால் நிறைந்தன. தழதழத்த குரலில், "மாலதி! எனக்காக இல்லாவிட்டாலும், தாயற்ற குழந்தை பிரேமாவுக்காகவாவது அடிக்கடி வந்துகொண்டிரு" என்றார். அதே சமயம் அவள் தமையன் அறைக்குள் நுழைந்தான். டாக்டர் உடனே தன்னை சமாளித்துக்கொண்டு, "என்ன? நீங்கள் தயாராகிவிட்டீர்களா?" என்றார்.

"ஏறக்குறைய தயார்தான்."

டாக்டர் வெளி வராந்தாவில் வந்து நின்றார். எதையோ இழந்துவிட்டது போல் அவர் மனம் தவித்தது. மனத்துள் கோரமான புயல் வீசிக்கொண்டிருந்தது. "ஐயோ! பாவம்! நல்ல பெண், புகலிடமற்றவள். இந்த இடம்தான் அவளுக்கு கிடைத்திருந்தது. இதிலும் தங்க முடியாமல் செய்துவிட்டேன். அவள் வந்தது முதல் பிரேமாவின் விஷயத்திலும், குடும்ப விஷயத்திலும் எவ்வளவு பற்றுதலுடன் இருந்து வந்தாள். நான் பாவி, அவளை அவமானப்படுத்தி விட்டேன்" என்றெல்லாம் எண்ணமிட்டார்.

அவர் வராந்தாவிலேயேதான் நின்றிருந்தார். சட்டென்று நிமிர்ந்தபோதுதான் மாலதி தன் எதிரிலேயே நிற்கிறாள் என்பது நினைவு வந்தது. "மாலதி மன்னித்துவிடு" என்ற சொற்தொடர்கள் மிகவும் மெதுவான குரலில் வெளி வந்தன.

அவள் கண்களிலும் கண்ணீர் ததும்பியது. "அடாடா! புருஷர்கள் எதிரில் நாம் பலஹீனர்களாகிவிடுகிறோமே" என்று நினைத்தாள். அன்றைய சம்பவத்திற்குப் பிறகு அவள் என்ன நினைத்தாளோ, யாருக்குத் தெரியும்? திடீரென்று தமையனைக் கண்டதும் 'சரி, இனிமேல் இந்த வீட்டிலிருப்பதில்லை' என்று தீர்மானித்துவிட்டாள். இப்பொழுது நாம் யோசனையில்லாமல் அவசரப்பட்டு முடிவுக்கு வந்துவிட்டோமே என்றுகூட அவள் சிந்திக்கத் தொடங்கினாள். ஆனாலும் சமாளித்துக்கொண்டு "நமஸ்தே" என்று கரங்குவித்தாள். அவரும் பதிலுக்கு கரங்குவித்தார். அவர் முகத்தில் அப்பொழுது தோன்றிய கருணையும், வேதனையும் அவளை ஒரு கணம் திகைக்க வைத்தன. இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு வகை வேதனையால் அவள் மனம் தவித்தது. இதற்குள் தமையன் வண்டியில் ஏறி உட்கார்ந்துவிட்டான். ஆகவே அவளும் அவனுடன் வண்டியில் ஏறினாள்.

வண்டி புறப்பட்டது. வண்டி கண்ணுக் கெட்டிய தூரம் செல்லும் வரையில் அவர் அந்த திசையையே பார்த்து நின்றார். வண்டி மறைந்ததும், தடாலென்று அங்கிருந்த ஈசிச்சேரில் விழுந்தார். வண்டி செல்லும் ஓசையும் வரவர குறைந்து காற்றுடன் கலந்து மறைந்து போயிற்று.

"ஹூம்! இதுதான் வாழ்க்கையின் நியமம். எங்கிருந்தாவது ஒரு சப்தம் கிளம்புகிறது. பிறகு மெல்ல மெல்ல வேறொரு சப்தத்துடன் இரண்டறக் கலந்து ஒன்றுமில்லாமல் போய்விடுகிறது......... ஆனால் மாலதியின் நினைவு, அவள் விஷயமாக என் நெஞ்சிலே எழுந்த அந்த ஜீவநாதம், மற்ற ஒலிகளைப் போல் தேய்ந்து காற்றுடன் இரண்டறக் கலந்து போகவில்லை" என்று அவர் வாய் முணுமுணுத்தது.

எவ்வளவு நேரம்தான் அவர் அப்படி உட்கார்ந்திருந்தாரோ தெரியாது. வேலைக்காரன் வந்து எட்டி எட்டிப் பார்த்துவிட்டுப் போய்விட்டான். அவனுக்குப் பேசத் துணிவில்லை. அன்று பிரேமா காலையிலேயே எழுந்து காலேஜுக்குப் போய்விட்டாள். மாலதி ஊருக்குப் புறப்படும்போது அவள் வீட்டிலில்லை. அவள் திரும்பி வந்தபொழுது, டாக்டர் தாழ்வாரத்திலுள்ள நாற்காலியில் கண் மூடி மௌனியாய் சாய்ந்திருப்பதைக் கண்டு நடுங்கிவிட்டாள். காலடி ஓசைக் கேட்டதும் டாக்டர் விழித்துக் கொண்டார். அவர் விழித்த பார்வை அவளை திகைக்கச் செய்தது. மிகவும் அன்பு கனிந்த குரலில் "அப்பா! உங்களுக்கு உடம்பு எப்படியிருக்கிறது?" என்றாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் திடுக்கிட்டு அப்பொழுதுதான் விழித்தவர் போல எழுந்து உட்கார்ந்தார். "ஒன்றுமில்லை பிரேமா! உடம்பு ஒன்றுமில்லை. ஏதோ யோசித்துக்கொண்டே கண் அயர்ந்துவிட்டேன் போலிருக்கிறது. நீ இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தாய்?" என்றார்.

"சுலேகா வீட்டில் பார்ட்டி. என்னைக் காலையிலேயே வந்துவிடும்படி சொன்னாள். ஆனால் நான் காலேஜுக்குப் போய்விட்டுத்தான் அங்கு போனேன். இன்னமும் வேலையிருக்கிறது அவளுக்கு உதவி செய்ய மறுபடியும் போகவேணும் அப்பா" என்றி சொல்லிக்கொண்டே அவரருகிலுள்ள நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"சரிதானம்மா, நீ வரவில்லையே எங்கே போனுயோ என்று நினைத்தேன். சித்தி ஊருக்குப் போனுள். போகும்போது உன்னைத் தேடினுள்" என்ருர்.

"என்னப்பா இது? சித்தியா! ஊருக்குப் போனுளா! ஏன்? சொல்லவே யில்லையே!" என்று ஆச்சர்யத்தால் மலர்ந்த கண்களுடன் கேட்டாள்.

டாக்டர் சற்று நேரம் யோசித்தார். பிறகு நிதானமாக, "ஆமாம் போய்விட்டாள். உன் பெரிய மாமா வந்திருந்தாரே, அவரோடு போய் விட்டாள்......"

"அப்படியானுல் எப்பொழுது வருவாள்?" என்ருள்.

இதற்கு அவர் என்ன பதில் சொல்லுவது? இனி அவள் வரவேமாட்டாள் என்று அவருக்குத் தெரியும். என்ன சொல்லுவது என்று சற்றே யோசித்துவிட்டு "இனிமேல் வரமாட்டாள்" என்ருர் அமைதியாக.

"வரமாட்டாளா? ஏனப்பா?" என்று மிகுந்த படபடப்புடன் கேட்டாள்.

"அது அவள் இஷ்டம். பெண்கள் புக்ககத்தைத் தவிர வேறெங்கும் அதிக நாள் தங்கமாட்டார்கள்- விதவையாகிவிட்ட பெண்கள் பிறந்தகத்தில், தமையனுடைய ஆதரவில்தானே இருக்கவேணும். அதுதான் அவர்களுக்கு கௌரவம்" என்ருர்.

அவர் சொன்ன தோரணையிலிருந்து அவரை மேலும் கேட்கத் துணியவில்லை பிரேமா. தவிர, சித்தி தன்னை விட்டுப் போனது அவளுக்கு வேதனையாயிருந்தது. இருந்தாலும் இவ்வளவு சீக்கிரம் சொல்லாமல் போகவேண்டிய அவசியமென்ன? இதுதான் அவளுக்குப் புரியாத புதிராயிருந்தது.

தன்னறைக்குள் நுழைந்த பிரேமா, அங்கே மேஜை மீது ஒரு கவர் வைத்திருப்பதைக் கண்டு அதை கையிலெடுத்தாள் அவசரமாக. "ஆம்! இது சித்தியின் கையெழுத்துதான்" என்று சொல்லிக்கொண்டே அதைப் பிரித்தாள்.

"பிரிய பிரேமா!

உன்னை விட்டுவிட்டுப் போகிறேன். உன்னிடம் நேரில் சொல்ல முடியாததற்கு வருந்துகிறேன். நீ என் மேல் வைத்திருக்கும் அன்பை ஒரு நிதி என்றே நான் நினைக்கிறேன். உன் அன்பு என் வாழ்நாள் முழுவதும் என் நெஞ்சை விட்டகலாது. இப்பொழுது சொல்லாமல் போவதைப் பற்றி வித்யாசமாக எண்ணுதே. மறுபடி எப்பொழுதாவது உன்னைப் பார்க்க வந்தாலும் வருவேன்.

வாழ்க்கையில் விதி நம்மை கேட்காமலே எப்படி எல்லாமோ தன் இஷ்டப்படி இழுத்துக்கொண்டு போகிறது. நம் இச்சைப்படி ஒன்றுமே நடப்பதில்லை. அது போலவேதான் இப்பொழுது இங்கேயிருந்து செல்லுகிறேன். நீ உடம்பை கவனித்துக் கொள். அப்பாவுக்கும் நன்ருக குணமாகவில்லை. அவரையும் நீதான் கவனித்துக் கொள்ளவேணும். அடிக்கடி அவருடன் பொழுதுபோக்காகப் பேசிக் கொண்டிரு. ஐயோ பாவம்! அவர் மனதில் எவ்வளவு வேதனையோ? நீதான் அவரை கவனிக்க வேணும். உன்னை விட்டால் அவருக்கு யாரிருக்கிருர்கள்?

சித்தியை ஞாபகம் வைத்துக்கொள்.

உன் பிரிய மாலதி.

கடிதத்தை திரும்பத் திரும்ப இரண்டு மூன்று முறை படித்தாள். இதிலிருந்து அவள் ஏன் புறப்பட்டுப் போனுள் என்பதை அவளால் ஊகிக்க முடியவில்லை. இருந்தாலும் வீட்டில் அவளுக்கு மன விரோதமாக ஏதோ நடந்திருக்கிறதென்று மட்டும் தெளிவாகத் தெரிந்தது. இதன் பிறகுதான் மாலதி கடந்த சில நாட்களாகவே ஒரு மாதிரி விசனமாக உட்கார்ந்திருந்தாளென்பதும் அவளுக்கு நினைவு வந்தது.

"சில நாட்களாகவே அப்பாவுக்குச் செய்ய வேண்டிய சிசுருஷைகளை யெல்லாம் நரேசனையே செய்யும்படி ஏவிவிட்டு இவள் சிரமபரிகாரம் செய்துகொள்வது போலல்லவா இருந்தாள், அப்பாதான் ஒருவேளை ஏதாவது சொல்லியிருப்பாரோ" என்று ஒரு கணம் நினைத்தாள். அவரைப் பற்றி அப்படி நினைப்பது அவளுக்கு இஷ்டமில்லை. "அவரோ நோயாளி. இந்த சமயத்தில் அவரைப் பற்றி இப்படி நினைப்பது சரியா? தவிரவும் அப்பா அவள் போனது முதல் ஏன் இப்படி இடிந்து போய் உட்கார்ந்திருக்கிருர்?!' என்றெல்லாம் எண்ணமிட்டது அவள் மனம்.

அத்தியாயம் 4.

நிசிதகுமாரபாபு காலேஜிலே புரொபஸர். ஒரு மாதிரி ஆசாமி. எதைக் கண்டாலும் ஒரு அசட்டை, சோம்பேறித்தனம். நாள் முழுவதும் புஸ்தகக் குவியல்களுக்கிடையே புதைந்து கிடப்பான். ஆனுல் மாணவர்களிடையே மட்டும் அவனுக்கு இவ்வளவு மதிப்பும், செல்வாக்கும் எப்படி ஏற்பட்டது என்பது ஒரு தனிக் கதை.

அவனுக்கு வயது முப்பது அல்லது முப்பத்தைந்துதான் இருக்கும். ஒழுங்காய் சீவப்படாமல் கோணலும் மாணலுமாக பறக்கும் தலை. பொன் சட்டமிட்ட மூக்குக் கண்ணுடி. தனக்குள்ளாகவே பேசிக்கொண்டு, விரலை ஆட்டிக்கொண்டே நடக்கும் அந்த கோணல் நடை, மிரண்ட பார்வை இதெல்லாம் பார்ப்பவருக்கு விநோதமா யிருக்கும். உலக முழுவதையுமே தன் மூக்குக் கண்ணுடிக்குள் அடக்கிவிடுபவன் போல் பார்ப்பான் ஒரு சமயம். பதினைந்து வருஷங்களுக்கு முன்னுல் பள்ளிக்கூடத்தில் அவனைப் பார்த்தவர்கள், இன்றும் அவன் செய்தவைகளைச் சொல்லிச் சிரிப்பதுண்டு. அவன்

DJK 5667 TM

சோர்வு நீங்கி உல்லாஸமாக விளங்க விரும்புகையில் நீங்கள் செய்யவேண்டிய தென்ன?

நாள் முழுதும் இடைவிடாத வேலையால் சோர்வு - இந்த நிலையில் அவ்வளவாக உற்சாக மூட்டாத ஒரு இடத்துக்குப் போயாகவேண் டும். என்ன செய்வது? சந்தேகமென்ன! முதலில் ஸ்னானம்—அல்லது முகங் கழுவிக் கொள்வது-பிறகு ஆனந்தமாக நயத்திலும் நயமான பெர்ல் டஸ்ட் டால்கமை ஒத்திக் கொள்வது—சில நிமிஷத்துக்கெல்லாம் நீங்கள் உங்களது பூர்ண பொலிவைப் பெற்றுவிடுவீர்கள். அப்போது உங்களுக்கு ஏற்படும் உள்ளப் பூரிப்பும், உற்சாகமும் இன்ப உணர்ச்சியும் மாலைப்போதெல்லாம் நீடிக்கும்.

Caroline
Pearl Dust
TALCUM POWDER

இப்பொழுது புதிய சிறிய சைஸ் பாக்கிங்கில் கிடைக்கிறது

மஞ்சள் டின்னில் அடங்கிய மிக நயமான நறுமண நவநாகரிகப் பவுடர்
பிரபலமான கடைகள் எல்லாவற்றிலும் கிடைக்கும்

கரோலின் • தனராஜ் மஹால் • அபாலோ பந்தர், பம்பாய்.

தோழன் அவிநாசபாபு இவனை 'பித்துக் குள்ளி' என்று சொல்லுவது வழக்கம். சாமான்யர்களுக்குப் புரியும் வார்த்தைகள்கூட சில சமயங்களில் அவனுக்குப் புரியவே புரியாது. இளமையில் உபாத்தியாயர் என்ன சொன்னாலும், எங்கேயோ யோசித்தவண்ணம் திருதிரு வென்று விழிப்பான்.

ஆனால் இப்படிப்பட்ட நிசிதகுமார பாபுவை பிரேமா எப்படிக் கணவனாக வரித்தாள் என்பதுதான் விளங்காத அதிசயமாயிருந்தது. எத்தனையோ இளைஞர்கள், குலமும், குணமும், அழகும் பொருந்திய வாலிபர்கள், பிரேமா தங்களை வரிக்க மாட்டாளா என்று ஏங்கியதுண்டு. ஆனால் அவர்களில் ஒருவரும் அவள் மனதை வசீகரிக்க வில்லை. அவள் தானாகவே தான் நிசிதபாபுவை விரும்புவதாக டாக்டர் சிவாதரரிடம் தெரிவித்தாள்.

டாக்டர் ஒன்றுமே சொல்லவில்லை. ஒரே பெண், செல்லப் பெண். அவளுக்குப் பிடித்து விட்டால் சரி. வேறு யாரைக் கேட்வேணும்?' என்று நினைத்தார். ஆகவே விவாகத்திற்கு ஒரு விதமான ஆக்ஷேபமும் சொல்லவில்லை.

அவள் கலியாணமாகிப் புக்ககம் வந்ததும் நிசிதபாபு தன் வாழ்க்கையில் புதிய ஒளி தோன்றியதை அவன் உணர்ந்தான். இருண்டு கிடந்த அவன் வீடு புதிய ஒளியும் சோபையும் பெற்று திகழ்ந்தது.

இதுவரை அவன் வீடு எப்படித் தானிருக்கிறது என்று கூட கவனித்ததே கிடையாது. முன் பக்கத்திலுள்ள செடிகள் ஏதோ வேலைக்காரன் விடும் தண்ணீரால் உயிரை வைத்துக் கொண்டிருக்கும். அங்கங்கே கூட்டங்கூட்டமாய் இருக்கும் ராஜாப் புதர்கள் உலர்ந்த குச்சிகளும், உதிர்ந்த இலைகளும், இதழ்களும் சூழ ஏங்கி நிற்கும். வழியெங்கும் புல் மண்டிக் கிடக்கும். அவனுக்கு இதிலெல்லாம் கவனம் ஏது?

தோ எல்லாவற்றையும் றந்த பரம வேதாந்தி ப் போல், புஸ்தக றயில், புஸ்தகங்கள் சூழ கொலு வீற்றி ான்.

ஆனால் பிரேமா வந்ததும், அவனுடைய செயல்களில் ஒரு வகையான மாறுதல் ஏற்படத் தொடங்கியது. அவனுடைய அசட்டையும், சோம்பலும்கூட குறைய ஆரம்பித்தது. எப்பொழுதும் நேரம் கழித்தே வரும் புரொபஸர் சரியான நேரத்தில் வருவதைப் பார்த்து மாணவர்கள் திகைத்துப் போனார்கள். அதுமட்டுமா? அவருடைய 'டை' இப்பொழுது ஒழுங்காகவும், அழகாகவும் கட்டப்பட்டிருந்தது. தலையும் நன்றாக எண்ணெய் தடவி சீவப்பட்டிருந்தது. இதையெல்லாம் கண்ட அவர்கள் ஆச்சர்யமடைந்தார்கள். ஆனால் அவர்கள் இவையெல்லாம் அவர் தானாகவே தான் செய்துக் கொள்ளுகிறார் என்றே நினைத்தார்கள்.

டாக்டர் கூட ஒரு நாள், "என்ன பிரேமா! நிசிதபாபுவை அடியோடு மாற்றிவிட்டாயே!'' என்று ஆச்சர்யத்துடன் கேட்டார். பிரேமா சிரித்துக் கொண்டே உள்ளே ஓடிவிட்டாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. அவன் தன்னுடைய புஸ்தக 'அறையில் உட்கார்ந்து வழக்கம் போல் வாசித்துக் கொண்டிருந்தாள்.

பிரேமா அருகில் வந்து நின்றதுகூட அவனுக்குத் தெரியவில்லை. அவள் நிழல் புஸ்தகத்தின் மீது விழுந்த பிறகுதான் அவன் தலை நிமிர்ந்தான். அவள் மிகவும் கனிவான குரலில், "என்ன! நாள் முழுவதும் இப்படி புஸ்தகத்திலேயே முழுகிக் கிடக்கிறீர்களே. உங்களைச் சுற்றி உலகம் என்று ஒன்றிருக்கிறது. நீங்களும் அதில் தான் வசிக்கிறீர்கள், என்பதைப் பற்றி எப்பொழுதாவது நினைக்க வேண்டாமா?'' என்றாள்.

"பிரேமா! இதைப் பார். இந்த உலக முழுவதும் இந்தப் புஸ்த

கத்திலேயே அடங்கியிருக்கிறது. இதிலேயே எல்லாம் தெரிகிறதே." என்றான் அவன். அதைக் கேட்டதும் பிரேமாவுக்கு குப்பென்று சிரிப்பு வந்துவிட்டது. "அப்படியா? எல்லாம் தெரிகிறதா? அப்படியானால் இன்று நம்மகத்தில் என்ன சமையல் செய்திருக்கிறது சொல்லுங்கள்?"

நிசிதபாபு மெதுவாகச் சிரித்தார். அந்தச் சிரிப்பு, "புஸ்தகங்களைத் தவிர வெளி விஷயங்களையும் தெரிந்து கொள்ளத் தான் வேணும் போலிருக்கிறது" என்று நினைப்பது போலிருந்தது.

சற்றுநேரம் இருவரும் பேசவில்லை. பிறகு நிசித பாபு புஸ்தகத்தை மேஜையின் மேல் பிரித்தபடியே கவிழ்த்து விட்டு, "சரி, வா பிரேமா! நீ வீட்டு விஷயங்களை எப்படி ஏற்பாடு செய்திருக்கிறாய் என்று பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டே எழுந்தான். "ஏதேது! வீட்டைத்தானே ஒட்டடை அடிக்கக்கூட கிளம்பிடுவார் போலிருக்கே" என்று நினைத்தவளாய் அவனுடன் உள்ளே சென்றாள்.

ஹாலுக்குள் நுழைந்ததும் அவன் திகைத்தே போனான். இவ்வளவு சீக்கிரத்தில் எத்தனை மாறுதல்கள்தான் செய்துவிட்டாள்" என்று நினைத்தான். "என்ன! இந்த ஹாலுக்கு ஒரு 'சோபா ஸெட்' இருந்தால் ரொம்ப அழகாயிருக்கும் என்று தோன்றிற்று. 'ஆர்டர்' கொடுத்திருக்கிறேன். இன்றைக்கே வந்தாலும் வரலாம்" என்றாள். "போட்டால் நன்றாய்த் தானிருக்கும்" என்று சொல்லிக்கொண்டே முன்னால் நடந்தான்.

இருவரும் சமயற்கட்டிற்கு அருகே வந்தனர். ஏற்கனவே அவள் ஒரு சமயற்காரியை ஏற்பாடு செய்திருந்தாள். அவளுக்கு இருபது வயதுதானிருக்கும். நல்ல சிவப்பு, அழகி, இளமையிலேயே விதவையாகி திக்கற்றவளாக நின்ற அவளை கருணையினால் தன்னிடம் வேலைக்கு வைத்துக் கொண்டாள் பிரேமா. தவிர பாத்திரங்கள் துலக்க, பெருக்கி மெழுக இவைகளுக்கு, இன்னொரு வேலைக்காரியையும் ஏற்பாடு செய்திருந்தாள். இப்போது வேலைகளை முடித்துவிட்டு இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். எஜமானரையும், எஜமானியம்மாளையும் ஒன்றாகக் கண்டதும் அவர்கள் அவசரமாக எழுந்து, ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றார்கள். இதுவரையிலும் அவர்களை நேருக்கு நேர் சந்தித்ததில்லை.

நிசிதபாபு அவர்களைப் பார்த்தான். அவர்கள் சங்கோசத்தினால் தலை குனிந்து கொண்டார்கள். சமயற்காரியின் முகம் நாணத்தினால் சிவந்தது.

"இவள் தான் நம்மகத்தில் சமையல் செய்பவள். விதவை பாவம்."

"ஐயோ பாவம்!"

"இவள் மற்ற வேலைகளைச் செய்யும் வேலைக்காரி. இவள்மட்டும் இரவில் வீட்டிற்குப் போய்விடுவாள்."

"சரி, சமையல்காரியின் பெயரென்ன?"

"பெயரா?" பிரேமாவுக்கு இந்தக் கேள்வி விசித்திரமாகப் பட்டது. "இதென்ன இதைக்கூடவா கேட்கவேணும்?" என்றாள். நிசிதன் சிரித்துக் கொண்டே, "ஒருவளை பெரியவள் என்றும், இன்னொருவளை சின்னவள் என்றும் சொல்லிவிட்டால் போகிறது" என்றான்.

வேலைக்காரி சிரித்தாள். சமையற்காரியின் முகம் குப்பென்று சிவந்துவிட்டது. நிசிதபாபு அவளைப் பார்த்துச் சிரித்தான். "இதேதுடா? க்ரஹசாரம்! இவரை இங்கு ஏன் அழைத்து வந்தோம்" என்று தோன்றிவிட்டது பிரேமாவுக்கு.

அன்றிரவு சாப்பாடு முடிந்ததும், அவனை சந்தித்தபோது பிரேமா, "நீங்கள் மத்தியானம் வேலைக்காரிகளைப் பற்றி விசாரித்தது சரியில்லை. அப்படி விசாரிக்கக் கூடாது" என்றாள்.

அவனுக்கு என்ன சொன்னோமென்பதே நினைவில்லை. வெகு நேரம் யோசித்துவிட்டு, "ஓகோ! அந்தப் பெயர் விஷயமா?" என்றான்.

"ஆம்,"

"கேட்டாலென்ன? எப்படியும் ஏதாவதொரு பெயர் இருந்துதானே தீரவேணும்?" என்றான் கபடமில்லாமல்.

"அட அப்பாவியே!" என்று நினைத்தவளாய், "இருந்தாலும் அவர்களுக்கு எதிரில் நாம் அந்த மாதிரி பேசிக்கொள்வது கௌரவமில்லை. நீங்கள் என்னைத் தனியே கூப்பிட்டு கேட்கலாம்" என்று சற்று அமர்த்தலாகவே சொன்னாள்.

"ஓகோ! அப்படியா? கேட்டால், என்ன பிரமாதம் என்று நான் நினைத்தேன்."

"இல்லை. நான் அப்படி நினைக்கவில்லை."

நிசிதபாபு யோசனையிலாழ்ந்தான். இதனால் சம்பாஷணையின் தொடர்பு தடைபட்டது. அவளுக்கு தூக்கம் வந்துவிட்டது.

அவன் விழித்தவண்ணம் யோசனையில் மூழ்கிவிட்டான். "இதென்ன! பிரேமா ஒரு விசித்திரப் பெண்ணாயிருக்கிறாளே. பெயரில்லாமல் கூட ஒருவர் இருக்க முடியுமா? அவர்களுக்கு எதிரில் ஏன் பேசக்கூடாது? அதில் என்ன இருக்கிறது" என்று எண்ணியவனாய் எழுந்து உட்கார்ந்தான்.

அருகில் அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். சுருண்ட கூந்தல் கன்னங்களின் மீது படிந்திருந்தது. அவைகளுக்கிடையே காதணிகள் புரண்டு கொண்டிருந்தன. ஜன்னலின் வழியே மெல்லிய வெண்ணிலவின் கதிர்கள் அவள் கைகள் மீது படிந்து, அவள் கை வளைகளை மின்னச் செய்தது. அவளது மாசற்ற எழில் வதனத்தைக் கண்ட நிசிதபாபு மெய்மறந்து போனான். தூக்கத்திலும் இளமுறுவலால் அவள் சிவந்த இதழ்கள் சற்றே மலர்ந்து அழகாகக் காணப்பட்டன. அவள் முகம் வழக்கத்தை விட அதிகமான எழிலுடன் தோன்றுவது போலிருந்தது. முகத்தில் புரண்டு கொண்டிருந்த குழல்சுருள்களைத் தள்ளிவிட்டு, வைத்த கண் வாங்காமல் அந்த அழகைப் பருகினான்.

"இவள் நல்ல அழகி! என் மனைவி! என் பிரேமா! எத்தனையோ இரவுகளை, இன்பகரமான நிலவு பொழியும் இரவுகளைத் தனிமையில் கழித்திருப்பாள். பாவம்! ஆனால், இன்று, இவள் என் உரிமை. எனக்கே உரிய பிரேமா, இவள் எனக்கே சொந்தம்" என்று சொல்லிக்கொண்டான்.

அவன் உள்ளம் இந்த இன்பகரமான நினைவுகளினால் நிரம்பி யிருந்தது. அவன் கண்கள் ஆனந்த மிகுதியினால் ஈரித்திருந்தன. "இந்த வாழ்க்கை என்பது எவ்வளவு இன்பமயமானது. இதைப்பற்றி யாராவது எண்ணிப் பார்க்கிறார்களா? முன்பின் தெரியாத இருவர், ஒரே படகில் பிரயாணம் செய்யத் தொடங்குகிறார்கள். புயல் வீசும் பொழுதும் சரி, அமைதி நிலவும்பொழுதும் சரி, இந்தப் படகு அவர்களை எங்கேயோ, நெடுந்தூரம் சுமந்து செல்லுகிறது.

அவள் புரண்டு படுத்தாள்.

அவனுடைய சிந்தனைத் தொடர் அறுந்தது. அவளை எழுப்பலாமா, என்று நினைத்தான். ஆனால் வழக்கமான அந்த சங்கோசம் அவனை விட்டபாடில்லை. அவள் தானாகவே விழித்துக்கொண்டு, நான் இப்படி உட்கார்ந்து அவளை உற்று பார்ப்பதைக் கண்டால் என்ன நினைப்பாள்.........என்று நினைத்ததும்......அன்று பகல் நடந்த சம்பவங்கள், வேலைக்காரிகளைத் தனக்கு அவள் காண்பித்தது நினைவு வந்தது. ஆமாம். பெயரைக் கேட்டாலென்ன? அது பிசகா?......பிரேமா ஏன் இப்படிச் சொன்னாள்? பெயர்! என்று பிரேமா சொன்ன சொற்களை நினைத்ததும் அவனுக்கு சிரிப்பு வந்தது. தன்னையும் மீறி வாய்விட்டுச் சிரித்து விட்டான் அவன்.

அவள் திடுக்கிட்டுக் கண் விழித்தாள். "என்ன சங்கதி, சிரித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று சொல்லியவளாய் கலைந்திருந்த தன் சேலையை ஒழுங்கு படுத்திக் கொண்டாள்.

என்ன பதில் சொல்லுவதென்றே அவனுக்கு விளங்கவில்லை. "ஒன்றுமில்லை, என்னமோ நினைவு வந்தது. சிரித்தேன்" என்றான்.

அவள் சற்றே புரண்டு மறுபுறம் திரும்பிப் படுத்தாள். ஆச்சர்யத்துடன் அவள் முகத்தையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இன்ப நிலவு தன் மேல் பொழிவது போலுணர்ந்தான் அவன்.

(தொடரும்)

சிற்பச்செல்வம்

'திருப்பரங்குன்றம்'

"ஹேமா"

கடுக்காய்க்கு மிஞ்சிய மருந்து மில்லை, கந்தனுக்கு மிஞ்சிய தெய்வமுமில்லை என்பது ஒரு முதுமொழி. பாண்டி நாட்டிலேயுள்ள ஸ்தலங்களுள் மிகவும் விசேஷமானதும், பழைமையானதுமான ஒரு அழகிய மலைக் கோயில் இது. 'சங்கறுப்பதெங்கள் குலம், சங்கரனுற் கேது குலம்? முக்கண்ணனுனாலும் குற்றம் குற்றமே' என்று சிவபெருமானையே எதிர்த்து நின்ற நக்கீரர் போற்றிப் புகழ்ந்த திருக்கோயில். இந்தக் கோயிலின் பழைமையைப் பற்றியும், முருகனின் பெருமையைப் பற்றியும் பழந் தமிழ் நூல்களாகிய பரிபாடல், சிலப்பதிகாரம் இவைகள் சொல்லும். இது முருகப் பெருமானது ஆறு படை வீடுகளில் ஒன்றுகக் கருதப்படுகிறது. இந்தக் கோயிலிலே குடி கொண்டிருக்கும் குஞ்சரி மணாளனை கலி தீர்க்க வந்த கந்தன் என்று போற்றிப் புகழுகிறது பக்தர் குழாம்.

மதுரைக்குத் தென் மேற்கில் சுமார் 3 மைல் தூரத்திலுள்ளது இந்த அழகிய மலை. இதற்கு முன் பசுமலை என்று அழகிய குன்றம் ஒன்றும் உண்டு. இதைத் தாண்டிச் சென்றுதான் திருப்பரங்குன்றத்தை அடைய வேணும். மதுரையிலிருந்து பஸ்மார்க்கமும், ரயில்மார்க்கமும் உண்டு.

மிகவும் உயர்ந்த மலை வானைஅளாவி, வந்தவர்களை வரவேற்கும். நீண்ட சந்நிதித்தெரு: தெருவின் முனையை அடையும் பொழுதே, நீண்ட தோகையுடன் கூடிய மயில், வாயிலே சிறு பாம்புக் குட்டியைக் கௌவியபடி நிற்கும் கோயிலை நோக்கி. மலையைப் பின் அணியாகக் கொண்ட சித்திரம்போல் காட்சி தரும் முன் மண்டபமும் கோபுரமும். கோபுரம் மதுரைக் கோபுரத்தைப் போல் அவ்வளவு உயரமல்ல. காட்சிகள் இருந்தாலும் கோயிலை நெருங்கும் பொழுதே அதன் அருமையாக வேலைபாடுகள் கண்களையும் கருத்தையும் கவரும். கந்தபுராண பல அருமையான சித்திரிக்கப் பட்டிருக்கும். கோபுர தரிசனம் செய்து மண்டபத்தை நெருங்கும் பொழுதே, பூம்பொழிலுக்குள் புகுவது போன்ற உணர்ச்சி உண்டாகும். வண்டுகளும் தேனீக்களும் மொய்க்கும். சென்னையைப் போன்ற நகரங்களில் வசிப்பவர்கள், வண்டு மொய்க்கும் காட்சிகளை யெல்லாம் காவியங்களிலும் ஓவியங்களிலும் தான் காண முடியும். ஆனல் அந்தக் காட்கியை, மதுரையிலும் இந்தப் பரங்கிரியிலும் கண்ணெதிரே காணலாம். பூ மணமும், தமிழ் மணமும், சிவ மணமும், கலந்து வீசுகிறதோ என்று தோன்றும். முன் மண்டபத்திலே பண்டாரங்களது இன்னிசை. இவைகளுடன் கூடிய அந்த மண்டபத்திலே, தூணுக்குத் தூண் சின்னஞ்சிறிய வடிவிலே சிற்பங்கள், இருபுறங்களிலும் கடைகள் முதலியன.

இவற்றைத் தாண்டிச் சென்றால், கோயிலுக்குக் கீழ்புறத்திலே குளம். இதைச் சரவணப் பொய்கை என்பர். வலதுபுறம் சென்றால் சன்னியாசிக் கிணறு என்ற பெயருள்ள ஒரு பெரிய கிணறு. இந்தச் சரவணப் பொய்கையை அடுத்த பிராகாரத்தில்தான் முருகப் பெருமானது அழகிய உத்ஸவமூர்த்தி வள்ளி-

குஞ்சரி மணாளனைக் காட்சிதரும். அந்த வாயிற்படிக்கு இருபுறமும் கையிலே பித்தளையினால் செய்த சாம்பிராணித் தண்டமும் விசிறியும் ஏந்திக் காட்சி தருவர் இரு பக்தர்கள். குங்கிலியம், சாம்பிராணி, மட்டிப்பால் இவைகளெல்லாம் ஒன்றுகூடி பவித்ரமான தெய்வீக உணர்ச்சியை நம் மனத்துள் எழுப்பும்.

பெரும்பாலும் வருபவர்கள் எல்லோரும் சரவணப் பொய்கையிலே அனுஷ்டானம் முடித்துத்தான் மலை ஏறவேண்டும். காவடி எடுப்பவர்கள் சரவணப் பொய்கையிலே தான் காவடி கட்டுவார்கள். 'ஹர ஹர முருகா! வேலும் மயிலும்!' என்ற கோஷம் அந்த மலைக்கோயில் முழுவதும் எதிரொலிக்கும். சரவணப் பொய்கையில் நீராடி மறுபடி மண்டபத்தை அடைந்து சற்று முன்னே சென்றால் இருபுறமும், பதினைந்து இருபது படிகள்மேல் நோக்கிச் செல்லும்.

சாதாரணமாய் வெளிப் பார்வைக்குக் கோயில் தரைமட்டத்திலிருப்பது போல் தோன்றினாலும், இங்கும், அங்குமாகப் பல படிகள் ஏறிச் செல்ல வேணும்.

ஏறக்குறைய மலையின் உயரத்தில் மூன்றிலொரு பங்கு வந்துவிட்டோமென்று நமக்குத் தோன்றும். இந்தப் படிகளின் ஆரம்பத்திலே தான் இடும்பன் கோயில், முருகன் கோயில் கொண்டிருக்கும் தலங்களிலெல்லாம், இடும்பன் இரண்டு மலைகளைக் காவடியில் வைத்து வருவது போலக் காட்சி தருவான். இந்த இடும்பன் யார்? மகாபாரதத்தில் வரும் இடும்பனோ என்னமோ தெரியாது.

இடும்பன் கோயிலைக் கடந்து செல்லும் பொழுதுதான் மலையைக் குடைந்து செய்த குகைக் கோயில் என்பது புலனாகும். இதையடுத்து ஒரு முன் மண்டபம், அதாவது மலையே விதானமாக விருக்கும். அதன் பின் சில படிகள் ஏறினால் எதிரே துர்க்கா தேவி கம்பீரமாய்க் கொலு வீற்றிருப்பதைக் காணலாம். எல்லாக் கோயில்களையும் போல சந்நிதிக்கு நேரே முருகன் சந்நிதியிராமல், துர்க்கையின் வலது கைப்புறம் ஒதுங்கித்தான் நிற்கிறார் முருகப் பெருமான்.

சூரபத்மன், தாரகாசூரன், சிம்மமுகாசூரன், மூவரையும் வென்று தன்னைக் காத்ததற்கு வெகுமதியாகத் தன் மகள் குஞ்சரியின் மலர்க்கரத்தை வெற்றி வடிவேலனுக்கு அளிக்கிறான் தேவேந்திரன். மதுரையிலுள்ள கல்யாணச் சிலைகள் போலவே இங்கும் தேவ குஞ்சரியும், குமரனும் மணக் கோலத்திலே காட்சிதரும் அருமையான சிற்பமும் இருக்கிறது. துர்க்கா தேவியின் சந்நிதியிலுள்ள கற்பலகணி வழியே பார்த்தால் இது தெளிவாகத் தெரியும்.

இந்த வெற்றி வேலனைக் கண் குளிரப் பார்ப்பது கடினம். திருப்பதி முதலிய தலங்களைப் போல், கட்டுக் காவலும் ஆடம்பரமும் இல்லாவிடினும் எப்பொழுதும் புனுகு சட்டம், அல்லது சந்தனக் காப்பு, இவைகளுள் ஒன்று. ஒரு முகத்துடனிருக்கும் அந்த ஆறுமுகவனைப் பார்க்கவொட்டாமல் தடுக்கும். இந்த கம்பீரமான அழகிய மூர்த்தியை தேர் திருவிழாக்களில்லாத காலத்தில் உச்சிவேளை சென்றால் தரிசிக்கலாம் ஆற அமர.

இவ்வளவு தூரம் வந்தோமே, முருகனை வலம் வரவேண்டாமா என்று நினைத்தால்தான் தெரியும். முருகனை வலம் வர முடியாது. இந்தக் கந்தன் மலையோடு மலையாய்த்தானிருக்கிறான் என்பதுதான். மலையைக் குகையாய்க் குடைந்து அதன் ஒரு சுவற்றிலே செதுக்கப் பெற்ற சிற்பச் செல்வம்தான் முருகனது திருஉருவம். இருபுறமும் வள்ளியும், குஞ்சரியும் தலைவணங்கி வெட்கத்துடன் நிற்பதுபோல் காட்சி தருவார். இந்த அழகிய காட்சியிலே மெய்மறந்து போவர் பக்த கோடிகள். பூஜை, காவடி, அபிஷேகம் முதலியவைகளெல்லாம் நடைப்பெறப் பெற நமது காலடிகளிலே பன்னீரும், சந்தனமும், பஞ்சாமிருதமும் ஓடி வருவது போல் தோன்றும். மற்ற சாதாரணமான கோயில்களைப்போல், தண்ணீர் வெளிச் செல்ல வழி ஏது?

பூஜை முடியும். ஓதுவார்கள் பாட, தீபாராதனை நடைபெறும். பிறகு வந்த வழியே திரும்பவேண்டும். முருகனை வலம் வரவேண்டுமானால் அந்த மலையையே சுற்றி வர வேணும், ஆகவே குஞ்சு குழந்தைகள் உள்பட, மலையை முருகனது ஸ்தூலவடிவாய் எண்ணி வலம் வரும் பக்தர் குழாம்.

வடநாட்டிலே ஹிந்து முஸ்லிம் கலகம் கோரமாய்த் தலைவிரித்தாடுகிறது. அதன் விளைவுகளின் கொடுமை மனதை உருக்குகிறது. ஆனால் நம் தமிழ் நாட்டிலே மிகவும் முக்யமான பழநி,

திருப்பரங்குன்றம் இவ்விரண்டு தலங்களிலும் இருவரும் ஒரே கோயிலில் தொழுவதைக் காணலாம். பழனியிலுள்ள போகர் சமாதியைப் போலவே திருபங்குன்றிலும் மலையின் மேலுள்ள சிகந்தர்பாட்சா, என்ற பெரியாரின் சமாதியை ஹிந்துக்களும், முஸ்லிம்களும் போற்றித் தொழுகின்றனர். அடிவாரத்திலே முருகன் திருக்கோயில், நடுவிலே சிகந்தரது சமாதி, பள்ளிவாசல், இவைகளைத் தாண்டி மேலே சென்றால் அழகிய சுனை. ஜலத்தின் எதிர் கரையிலே காசி விசுவநாதர். இந்தச் சுனையிலே பெரிய பெரிய மீன்கள், பொன்னிறமாய் மின்னும். இந்த மலையுச்சியிலிருந்து பார்த்தால் அழகிய சுற்றுப்புறங்களைப் பார்க்கும்பொழுது, பசும்புல் வயல்களும், அழகிய சாலைகள், குளங்கள் இவையெல்லாம் அற்புதமாய்த் தோன்றும். மலையிலிருந்து இறங்கும் பொழுது இடைவழியிலே பால் தீர்த்தம் என்று சொல்லும் அழகிய சிறு சுனை, வெண்மை நிறமாயிருக்கும். அந்த மலையில் ஏறி இறங்கும் சிரமம் தீர அள்ளிக் குடிக்கலாம். காலையில் பூசை முடித்து, கிரி பிரதக்ஷணம் செய்து மலை ஏறினால், இவைகளை யெல்லாம் பார்த்துக் கீழே இறங்கிவரவும் மணி பன்னிரண்டு அடிக்கும்.

உச்சிகால பூஜைமணி ஜாம் ஜாம் என்று இசைக்க மீண்டும் கூட்டம் கூட்டமாய் பக்தர்கள் பாடிச் செல்வர். சாதாரணமாக விநாயகருக்குத்தான் சூறைத் தேங்காய்கள் உடைப்பது வழக்கம். ஆனால் இந்த முருகன் தனக்கும் அதில் உரிமை உண்டென்று சொல்வது போல, மாணவர்கள் பிரார்த்தனைக்காரர்கள் எல்லோரும் போட்டியிட நூறும், ஐம்பதுமாக சூறை விடுவதை ஏற்றுக் கொள்வான். பசுமலையிலிருப்பது பாதிரி பள்ளிக்கூடம் தான். ஆனால் மாணவர்களிடமெல்லாம் தேங்காய் வசூலிப்பது முருகன். தவிர, தீராத நோய்களெல்லாம் தீர, கார்த்திகை விரதமிருந்து, பரங்குன்றத்திற்கு வாரம் நடக்கின்றேன் என்று வேண்டிக் கொள்வர் அக்கம் பக்கத்துச் சிற்றூர் வாசிகள்.

பங்குனி உத்திரத் திருவிழா மிகவும் பிரசித்தம். மற்ற தலங்களில் கந்த சஷ்டியிலே நடைபெறும் மறுநாள்தான் திருக்கல்யாணம். இந்தக் கல்யாண மகோற்ஸவத்திற்கும், வைகாசி விவாக மஹோற்சவத்திற்கும் நெடுந்தூரத்திலிருந்தும் திரள் திரளாக வந்து கூடுவர். இந்த விழாவின் பொருட்டு சாலை முழுவதும் அங்கங்கே தண்ணீர் பந்தல்களு வெயிலில் தங்க நிழலும் அமைப்பர்.

இந்தப் பரங்கிரியை, ஞான சம்பந்தப் பெருமானும், சுந்தரமூர்த்தி நாயனாரும் பாடியிருக்கின்றனர். ஆனால் இவ்விருவரது பாடல்களிலும் முருகன் இடம் பெறவில்லை. பரங்கிரிநாதர், ஆவுடை நாயகி என்ற பெயருடன் கூடிய சிவபெருமானையும் சக்தியையுமே பாடியிருக்கின்றனர். பிற்காலப் புலவர்களிலே பலர் முருகனைப் பாடிய பண் சுமந்த பாடல்களை வீடுகளிலும் கோயிலிலும் நடைபெறும் பஜனைகளில் கேட்கலாம்.

மேலும் இக் கோயிலைப் பற்றிப் புதை பொருள் ஆராய்ச்சி நிபுணரென்றும், சரித்திர சம்பந்தமான விஷயங்களில் ஆதர்சமாய்க் கொள்ளக்கூடிய வருமான கோபிநாத ராயரவர்கள் தமது நூலொன்றில், திருக்கோட்டைக் கிழத்தி என்று சொல்லப்படும் ஜேஷ்ட தேவியின் கோயிலாக இருந்திருக்கக் கூடுமென்றும் சொல்லுகிறார். அந்த வம்புகளெல்லாம் நமக்கேன்? கட்டாயம் ஒரு முறை சென்று பாருங்கள் தமிழ்க் கடவுளான முருகன் எப்படிக் காட்சியளிக்கிறானென்று.

அடுக்களை

கேக்

ஐரோப்பிய ஓட்டல்களில் செய்யும் கேக் முதலியவைகளின் ருசி எப்படி இருக்குமோ தெரியாது. ஆனால் அவர்கள் பார்ப்பவர்கள் பிரமிக்கும்படியாக அவைகளை அழகு படுத்தி வைக்கிறார்கள். கலர் பேப்பரில் கிண்ணம் போலவும் பூக்கூடை மாதிரியாகவும், குழல் மாதிரியாகவும் செய்து அவைகளில் கேக்குகளை வைத்து விடுகிறார்கள். அதுமட்டுமா? நாம் வாங்கும் கேக்குகளை அடுக்கித்தர அட்டையினால் பலவிதமான தட்டுகள் செய்து அதில் வைத்துத் தருகிறார்கள். குழந்தைகள் வாங்கி வந்து சாப்பிடும்பொழுது பார்த்த என் அத்தை, பஞ்சுமாதிரி இவ்வளவு மிருதுவாக செய்து இந்த கிண்ணத்தில் எப்படி வைத்தார்கள் என்று அதிசயப்பட்டாள். அவளுக்கு நான் ஆத்திலேயே கேக்செய்து கொடுத்தேன். நன்றாகஇருந்தது, நீயும் செய்துபார். மாதிரிக்காக கொஞ்சமாக அளவு கொடுத்திருக்கிறேன். உன் தேவைக்கு தகுந்தபடி செய்துகொள்.

1 ஆழாக்கு கோதுமை மாவு, $\frac{1}{4}$ ஆழாக்கு சக்கரை, $2\frac{1}{2}$ பலம் வெண்ணெய், ஒரு டீஸ்பூன் பேக்கிங் பவுடர், $\frac{1}{2}$ பலம் திராக்ஷை, 1 பலம் பாதம்பருப்பு, கொஞ்சம் குங்குமப்பூ, இவைகள் வேண்டும். முதலில் வெண்ணெயை ஒரு தாம்பாளத்தில் போட்டு பேக்கிங் பவுடரையும் சேர்த்து கையினால் நன்றாக தேய்க்கவேண்டும். கடல் நுரைமாதிரி வரும்பொழுது சக்கரையைப்போட்டு தேய்க்க வேண்டும். கை சூட்டினால் சக்கரை கரைந்து வெண்ணெயோடு சேர்ந்துவிடும்.

பிறகு மாவையும் குங்குமப் பூவையும் சேர்த்து மறுபடியும் தேய்க்க வேண்டும். எல்லாம் சேர்ந்து தோசைமாவு மாதிரி குழம்பாக வரும். பாதம் பருப்பின் தோலை நீக்கி சிறு துண்டுகளாக செய்து, அதையும் திராக்ஷையையும் மாவில் சேர்த்துவிடவும். கேக் எந்த மாதிரி வேண்டுமோ அந்தமாதிரியான கிண்ணங்களில் மாவை பாதி அளவிற்கு விட்டு வைக்கவும். பிஸ்கோத்து செய்யும் பாத்திரத்தில் மணலைப் போட்டு நன்றாய் காயவைத்து விடவேண்டும். மணலில் சூடு ஏறினவுடன் அடுப்பை தணித்து நிழல்மாதிரி எரியவிட வேண்டும். மணல் கிண்ணங்களின் அடியில் $\frac{1}{2}$ அங்குல கனம் இருந்தால் போதும். பாத்திரங்களை மணலின்மேல் பரப்பிவிட்டு மேல் மூடியில் தணலை போட்டு மூடிவிடவும். அரைமணிக்கு பிறகு எடுத்துவிடவும். கேக் வேக ஆரம்பித்ததும் நல்ல மணம் உண்டாகும். அதை கவனித்து எடுத்துவிடவும்.

உருளைக்கிழங்கு வற்றல் புட்டு

இது ஒரு பெரிய பலகாரமா? என்று கேட்காதே. இருந்தாலும் சாமான்களுக்கு கஷ்டப்படும் இந்த நாளில் கிடைத்ததைக் கொண்டு புதுமாதிரியாக செய்து குழந்தைகளை திருப்தி செய்யலாம் அல்லவா? உருளைக்கிழங்கு வற்றலில் $\frac{1}{4}$ படி எடுத்து $\frac{3}{4}$ மணி தண்ணீரில் ஊறவை. வாய் அகலமான பாத்திரத்தில் அரைக்கு தண்ணீர் வைத்து அதன் வாயை ஒரு துணியினால் கட்டிவிடவும். தண்ணீர் கொதி வந்ததும் ஊறி இருக்கும் வற்றலை அந்த துணியில் வைத்து ஆவி போகாமல் மேலே இட்லி மூடியையோ அல்லது வேறு எதையாவது மூடிவிடவும். புட்டுக்கு மாவை வேக வைப்பதுபோல் இந்த வறற்லையும் வேகவைக்க வேண்டும். 15 நிமிஷங்களில் பூ மாதிரி வற்றல் மலர்ந்து வெந்துவிடும். அதை தாம்பளத்தில் கொட்டி ஆற்றிவிட வேண்டும். பிறகு 1 ஆழாக்கு சக்கரை, 2 பலம் வறுத்த முந்திரிபருப்பு, கொஞ்சம் ஏலப்பொடி, இரண்டு மேஜை கரண்டி அளவு நெய் இவைகளை சேர்த்து கலந்துவிடவும். மஞ்சளாக இருக்க வேண்டுமானால் கேசரி பவுடரை கரைத்து வற்றலின்மேல் தெளித்து பிறகு வேக வைக்கலாம். சூட்டோடு எல்லா வற்றையும் சேர்த்து கிளறி மொத்தையாக்கிவிட்டு என்மேல் குறை கூறாதே. எந்த காரியத்திற்கும் நம்முடைய மூளையையும் கொஞ்சம் செலவு செய்யவேணும் என்று உனக்கு தெரியுமல்லவா, இதையும் செய்துபார்!

அண்டை வீட்டு விஷயம்

சரோஜா ராமமூர்த்தி

"அடுத்த வீட்டுக்குக் குடி வந்திருக்கிறார்களே, உங்களுக்குத் தெரியுமா?" என்று என் கணவரை விசாரித்தேன். அவர் அப்பொழுதுதான் ஆபீஸிலிருந்து வந்து காப்பி சாப்பிட்டு விட்டு தெருவில் வந்து உட்கார்ந்தார். மணி மாலை ஆறுக்குமேல் இருக்கும்.

"ஊஹூம்.... அப்படியா? எனக்குத் தெரியாதே" என்றார் மிகவும் நிதானமாக.

"தெரியாதா? நன்றாக இருக்கிறது! ஒரே கூச்சலும், ரகளையுமாக இருக்கிறதே எப்பொழுதும். ராத்திரி பத்து அடித்தாலும் குழந்தை, குட்டிகளின் சண்டை ஓய்வதில்லையே" என்றேன் அவரைப் பார்த்து.

"இருக்கும்; நான் எங்கே இதையெல்லாம் கவனிக்கிறேன். ராத்திரியானதும்தான் கண்ணைச் சுற்றிக்கொண்டு தூக்கம் வந்து விடுகிறதே. போகட்டும், நீதான் விஷயங்களைக் கவனிப்பதில் கெட்டிக்காரியாயிற்றே. ஏதோ சொல் பார்க்கலாம். யார் அவர்கள்?" என்று என்னைக் கேட்டார்,

"உண்மையிலேயே இந்த அண்டை வீட்டு விஷயம் இருக்கிறதே, இதில் ஸ்திரீகள்தான் அதிகம் கவனம் செலுத்துபவர்கள். தெருவில் ஒரு வீடு காலியாக இருந்தால் அதில் யார் குடி வரப் போகிறார்கள்? என்றைக்கு, எந்த இடத்திலிருந்து? என்றெல்லாம் விவரம் விசாரித்துக் கொள்கிறோம். குறிப்பிட்ட அன்று ஒழிந்தபோதெல்லாம் தெருவை எட்டி எட்டிப் பார்க்கிறோம். கட்டை வண்டியிலும், தள்ளு வண்டியிலும் சாமான்கள் வந்து இறங்குகின்றன. சாமான்களைப் பற்றி நமக்கு அவ்வளவாக அக்கறை இல்லை. அந்த வீட்டுக்கு வரப்போகும் மனிதர்களைப்பற்றி தான் நம் கவனமெல்லாம். முதலில் இரண்டு மூன்று தரம் வண்டியில் சாமான்கள் வந்து இறங்குகின்றன. கடைசியாக குழந்தைகளும், பெரியவர்களுமாக பத்துப் பேருக்குக் குறையாமல் வண்டியில் வந்து இறங்குகிறார்கள்.

"இவ்வளவு சிறிய வீட்டில் எப்படி இத்தனை பேரும் இருக்க முடியும்?" என்று சிந்திக்கிறோம். அந்தக் கவலை அவர்களுக்கு இருக்கிறதோ இல்லையோ நமக்கு இரவு பகலாக அதுதான் வீட்டில் பேச்சு. தெரிந்தவர்களிடம் அதே விஷயத்தைப் பற்றிதான் பேசுகிறோம். தெருப்பக்கம் ஜாடையாக நின்றுகொண்டு அடுத்த வீட்டு குழந்தைகளைக் கவனிக்கிறோம். குழந்தைகள் எல்லோரும் நன்றாக இருக்கிறார்கள். பெண் குழந்தைகள் கையில் தங்க வளையல்களும், காதல் ஜிமிக்கியுடனும், நல்ல உடையுடனும் காக்ஷி அளித்தால் அவர்கள் நல்ல அந்தஸ்த்தில் உள்ளவர்கள் என்ற தீர்மானம் ஏற்படுகிறது.

நம் குழந்தையை வேண்டுமென்றே தூண்டி விட்டு, "போய் அடுத்தாத்துப் பெண்களுடன் விளையாடேன்! ஏன் இங்கேயே நச்சரிக்கிறாய்" என்று வலுவில் அனுப்பி வைப்பதும் உண்டு. இப்படி முதலில் குழந்தைகள் ஒருவருக்கொருவர் சிநேகமாகின்றனர்.

அந்தக் குழந்தைகளும் நம் வீட்டுக்கு விளையாட வருகின்றனர்.

"ஏனம்மா! உன் பெயர் என்ன?" என்று ஆவலுடன் கேட்டு அவர்கள் வீட்டு விஷயங்களை அறிவதில் திருப்தி ஏற்படுகிறது.

இப்படியே அடுத்த வீட்டில் கல்யாணமாகாமல் ஒரு பெண் இருந்தால் அதைப்பற்றி சற்றுக் குறைவாகப் பேசுவது, அவர்கள் செட்டும், கட்டுமாகக் குடித்தனம் செய்வது, அவர்கள் வீட்டுப் புருஷர் பாங்கியில் எவ்வளவு சேர்த்து வைத்திருக்கிறார் என்பது எல்லா விஷயங்களிலும் பெண்களுக்குத்தான் முதலில் தெரியும். அப்படி புருஷர்கள் ஒருவருக்கொருவர் இந்த விஷயங்களில் தலையிட்டால், "நன்றாயிருக்கு! பொம்மனாட்டி மாதிரி இந்த வம்பெல்லாம் வேண்டியிருக்கே உங்களுக்கும்" என்று அவர்களை கேலி செய்கிறோம்.

அவர்கள் வீட்டில் வேலை செய்யும் செங்கமலம் நம் கண்ணில் தப்பித் தவறிப் பட்டுவிட்

டால் போதும் உடனே அவளைக் கூப்பிட்டு இரண்டு வெற்றிலை சாருகளைக் கொடுத்து, "ஏண்டியம்மா! அந்த வீட்டில் உனக்கு நிறைய சம்பளம் கொடுக்கிறார்களா? இந்தப் பக்கமே எட்டிப் பார்க்க மாட்டேன் என்கிறாயே. புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தை அடித்துப் போவது போல புது மனுஷாள் சிநேகிதம் உனக்குக் கிடைத்து விட்டது. இனிமேல் எங்களை கவனிப்பாயா என்ன?" என்று அவள் வாயைக் கிளறி விஷயங்களை, அறிவதில் சிலாது விருப்பம் நமக்கு உண்டு.

"அப்படி என்னஅம்மா கொடுத்துடறாங்க?" அஞ்சு ரூபாயும், ஒரு வேளை சாப்பாடும்தான் போடறாங்க. மூச்சுவிட நாழி இல்லே. அடுத்த முதல் தேதிக்கு வேலையை விட்டுடப் போறேன்" என்று செங்கமலம் சொன்னவுடன் நமக்கு உற்சாகம் ஏற்படுகிறது.

இரவு கணவர் ஆபீஸிலிருந்து வந்தவுடன் முதல் வேலையாக, "பார்த்தீர்களா? நாம் நம் வீட்டு வேலைக்காரிக்கு ஒரு வேலையும் இல்லாமல் ஐந்து ரூபாய் கொடுக்கிறோம். அடுத்த வீட்டிலும் ஐந்து ரூபாய்தானும்! பத்துபேர் இருக்கிறார்கள். நம் வீட்டைவிட வேலை குறைவாகவா இருக்கும். எனக்கு அப்பவே தெரியும் பணக்காரர்களெல்லாம் செட்டும் கட்டுமாகத்தான் இருப்பார்கள், நாம்தான் ஊதாரிகள்...." என்று ஆரம்பித்தவுடன் அவருக்குக் கோபம் வந்துவிடுகிறது.

"உஸ்ஸ்... இதென்ன வம்பு வேண்டியிருக்கிறது? யார் எப்படிப் போனால் என்ன?" என்று கோபத்துடன் கூறுகிறார்.

ஆனால், எப்படி பல விஷயங்களிலும் சிரத்தை ஏற்பட்டுக் கவனிக்கிறோமோ அதே போல் அவர்கள் வீட்டில் ஒரு அசந்தர்ப்பம் என்றால் உதவவும் செய்கிறோம். "பாவம்! அடுத்த வீட்டு அம்மாமி தவியாய்த் தவிக்கிறாள். மாமாவுக்கு மார்வலியாம். பிள்ளைகள், பெண்கள் எல்லாம் பள்ளிக்கூடத்துக்கும் காலேஜுக்குப் போய் விட்டதுகள். வீட்டிலே வேறு யாரும் இல்லை. புது ஊர். டாக்டர் வீடு இருக்கும் இடம் தெரியாது. பறந்தடித்துக் கொண்டு வந்து என்னை மத்தியானம் கூப்பிட்டாள். என்ன பிரமாதம் என்று டாக்டரைப் போய்க் கூட்டி வந்து காண்பித்தேன். இதற்கு முன் என்னோடு ஒரு வார்த்தைக்கூடப் பேசாத அம்மாமி என்னை வீட்டுக்கு வரவே விடவில்லை. ஆபத்தில் உதவுவது தானே வேண்டும்? அந்த மாமாவும் நல்ல மாதிரி. போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள். என்று கணவருக்கு உபதேசம் செய்கிறோம்

"சரி, சரி, நானே என்னைப் போய் அறிமுகம் செய்துகொள்ள வேண்டுமா என்ன? அவரை எனக்குத் தெரியாது. நாலு நாளைக்கு முன்னால்கூட ரயிலில் ஒரே 'ஸீட்'டில்தான் உட்கார்ந்திருந்தோம். மனுஷன் ஒரு வார்த்தை பேசவில்லை! வேலையில்லை உனக்கு!" என்று எரிந்து விழுகிறார் கணவர்.

அம்மாமியும்தான் நேற்றுவரை என்னுடன் பேசவில்லை. இருந்தாலும் பெண்கள் சுபாவம் அலாதி. கருணையே வடிவான அவர்கள் சுயமரியாதை கௌரவம் என்றெல்லாம் பார்க்க மாட்டார்கள்.

இப்படி அடுத்த வீட்டு விஷயங்களில் கவனம் செலுத்துவதை வம்பு என்று சொல்வது பொருந்துமா? பொருந்தாது என்றே எனக்குத் தோன்றுகிறது. அவர்களுடைய சுக துக்கங்களையும் நாம் பகிர்ந்து கொள்கிறோம்.

"மாமி! உங்கள் ஸரஸாவுக்கு இந்த வருஷம் கல்யாணம் செய்யவேண்டாமா? செய்கிற உத்தேசமிருந்தால் என் மைத்துனன் இருக்கிறார். குணம் தங்கக் கம்பி. ஜாதகம் இருந்தால் கொடுங்கள். மாமியாருக்கு அனுப்பி வைக்கிறேன்" என்று வலுவில் உதவி செய்ய ஆசைப்படுவதும் பெண்கள்தான்.

"அவர்கள்தான் நம்மை வந்து கேட்கட்டும் நம் வீட்டில் பெண் கொடுக்க அவர்கள் சம்மதிப்பார்களா இல்லையோ?" என்று புருஷர்கள் இந்த விஷயங்களில் வலுவில் சென்று கேட்பது அபூர்வமே.

"அடியே! நீதான் போய் ஒரு வெள்ளிக்கிழமை அந்தப் பையனை நம் காமுவுவைப் பார்த்துவிட்டு அவன் தாயாரைக் கேட்டு ஜாதகம் வாங்கிக்கொண்டு வாயேன்"

அப்புறம் நான் அவரைக் கண்டு பேசுகிவேன். என்று பேத்தியின் கல்யாணத்தில் அக்கரை கொண்ட தாத்தா கூறுகிறார்.

இவ்விதம் சரள மனோபாவமும், அன்பும் கொண்டு கவனிக்கும் விஷயங்களை வம்பு என்று சொல்வது பொருந்தாது என்றே எனக்குத் தோன்றுகிறது.

விவாக ரத்து

கி. ச.

"இந்தப் புருஷர்கள் இருக்கிறார்களே" என்று நீட்டினாள் ஸரோஜா.

"அவர்களுக்கு என்னவாம்?" என்று வினவினாள் கமலா.

"என் வஞ்சம் தீர அவர்களுக்கெல்லாம் ஒவ்வொருவருக்கும் ஒரு பன்னிரண்டு முழம் புடவையைக் கட்டிவிட வேண்டும்" "ஆமாம் ஸரோஜா! அப்போதாவது நாம் புடவைக் காகப்படும் பாட்டை அவர்கள் தெரிந்து கொள்ளமாட்டார்களா?" என்று ஆமோதித்தாள் ஆனந்தா.

"நல்ல யோசனை! உன் கனவு நனவாகிற வரையில் இந்தத் துணிப் பங்கீடும் நீடித்திருக்கட்டும். ஸ்திரீ புருஷர்களிடை அன்னியோன்னியம் ஏற்பட்டுவிடும் என்றாள் கனகம்.

"வாஸ்தவம்தான். நளதமயந்தி மாதிரி ஈருடலும் ஓர் புடவையுமாய் இருக்கலாம்" என்றாள் வினோதா.

"நான் சொல்லவந்த விஷயம் வேறு...... அட! அவளே இதோ வந்து விட்டாளே" என்று ஸரோஜா முடிப்பதற்குள் சுந்தரா பந்து போல் ஓடிவந்து பொத்தென்று ஒரு சோபாவில் விழுந்து இடி இடியென்று சிரிக்கலானாள்.

சுந்தராவிடத்தில் அவர்களுக்கெல்லாம் ஓர் அனுதாபம் உண்டு. அவள் புக்ககம் வந்து நான்கு மாதங்கள் ஆயின. ஆனால் அவள் புருஷன் அவளைச் சட்டை செய்ததாகவே தெரியவில்லை. சாயங்காலம் ஆபீசிலிருந்து வந்தால் ஒரு சினிமா உண்டா, கடைத் தெரு உண்டா, இல்லை கடற்கரைக்குத்தான் அழைத்துப் போவது உண்டா? ஒன்றும் கிடையாது அவள் விஷயம் அவர்கள் கிளப்பில் ஏற்கெனவே அலசி ஆராயப்பட்டதுதான்.

"அவள் என்னடி செய்வாள் பாவம்! வீட்டிற்குவரும்போதே பரபரன்னு வருவதும் ஆச்சா ஆச்சான்னு அவசரப்படுத்தி ஒரு வாய் காப்பியைக் குடித்துவிட்டு ஓடிவிடுவதும், எட்டு மணிக்குத் திரும்புவதுமாயிருந்தால்" என்று அங்கலாய்த்தாள் ஸரோஜா. "ஒன்று செய்யலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. நன்றாய் 'டிரஸ்' பண்ணிக்கொண்டு ஒருகையில் காப்பியும் மற்றொன்றில் ஷர்டுமாய் வாசலில் காத்துக்கொண்டிருந்து அவர் வந்ததும் வராததுமாய் "இந்தாருங்கள்! பிடியுங்கள் உங்கள் ஷர்டை. ஆபீஸ் உடையைக் கழற்றி இப்படிக் கொடுத்துவிட்டு இந்தக் காப்பியை ஒரு வாய் குடியுங்கள், எனக்கு நாழியாச்சு! அவசரம், சற்று இந்தப்பாத்திரத்தை நீங்களே உள்ளே கொண்டு போய் வைத்துவிட்டுப் போய்விடுகிறீர்களா?" என்று கேட்டுப் பார்க்கிறதுதானே?" என்றாள் கமலா.

"அப்படிச் செய்ததற்கு அவர் என்ன சொன்னாராம் தெரியுமா?" என்று வினவினாள் கனகம்.

"காப்பி போட்டு மூடிவைத்து விட்டுப் போயேன். நான் எடுத்துக்கொள்கிறேன் என்றாரோ?" என்று ஆனந்தா கேட்டாள். "அப்படிச் சொன்னாலும் தேவலையே, நான் எங்கேயாவது பார்த்துக் கொள்ளுகிறேன். நீ கலவலைப்படாதே என்னுட்டாராம்" என்றாள் கனகம்.

"பெண்ணைப் பிறப்பதைக் காட்டிலும் ...." ஒரு பெருமூச்சுவிட்டு அலுத்துக் கொண்டாள் சுந்திரா.

"போடி அசடே! அப்படி மிஞ்சிப்போனால் விவாகரத்து சட்டம்தான் வரப்போகிறதே, பார்த்துக்கொள்ளலாம் ஒருகை......" என்று காரசாரமாய்ப் பேசினாள் கனகம்.

"எனக்கு என்னமோ அம்மா, அதெல்லாம் பிடிக்கவில்லை. நாம் புருஷர்களைச் சரியாய்த் தெரிந்து கொள்ளுவதில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. நமக்கே எப்போதும் அவசரப் புத்திதான்" என்றாள் ஸரோஜா.

இப்படியாகச் சுந்திராவின் விஷயம் ஏற்கெனவே சர்ச்சை செய்யப்பட்டிருக்கிறது. அவள் இப்பொழுது அமர்க்களமாய்ச் சிரிப்பதைப் பார்த்தவுடன் ஏதோ முக்கிய சம்பவம் ஒன்று நடந்திருக்கவேண்டுமென்று அவர்கள் ஊகித்தார்கள்.

"கடைசியில்"! என்றாள் ஸரோஜா.

"வழிக்குவந்து விட்டாரா?" என்று வினவினாள் கமலா. 'என்ன பொடிபோட்டாய்?' என்று கனகம் கேட்டாள்.

சுந்திராவின் நகைப்பு நிற்பதாய்க் காணோம். வயிற்றை ஒரு கையால் அமுக்கிக்கொண்டு

அவள் விழுந்து விழுந்து சிரித்தாள். அவள் மாநிறம்தான். இருந்தாலும் அவள் முகவெட்டு வேறு ஒருவருக்கும் கிடையாது. சிலர் முகத்தைப் பார்த்தால் சதா பார்த்துக்கொண்டே இருக்கவேண்டுமென்று தோன்றுவதில்லையா? அப்பேர்ப்பட்ட முகம் அவளுடையது. அவள் கண்ணின் கோடியிலே தோன்றிய மின்வெட்டு. அங்கே துளித்துக் கொண்டிருந்த ஜ்வலிப்பு, அவள் அழகிய வாயைச் சுற்றி நடனமயாடின ஒளிக்கீற்றுக்கள், குரலிலே உதிர்ந்த நாதத்திவலைகள்—இவையெல்லாம் சேர்ந்து மற்றவர்களையும் அவள் நகைப்பில் கலந்து கொள்ளும்படி செய்துவிட்டன. இன்னது செய்கிறோம் என்று தெரியாமலே எல்லாரும் ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்தனர்! மறுபடி பார்த்தனர். மறுபடி மூண்டது சிரிப்பு!

மின்சார இயக்கம் போல் சுற்றிச்சுற்றி வந்த இந்தத் தொற்றுச் சிரிப்பிலிருந்து முதன் முதலில் விடுவித்துக் கொண்டவள் ஸரோஜா.

"சுந்திரா! அவிழ்த்து விடேன்" என்றாள் அவள்.

"எதையாம்?" என்றாள் கமலா.

"கதையை" என்றாள் கனகம்.

"ஆமாம் அவிழ்த்துவிட்ட கதைதான் அது!" என்று சொல்லி மறுபடி சிரிக்க ஆரம்பித்தாள் சந்திரா.

ஸரோஜா சரேல் என்று எழுந்துபோய் ஒரு கூஜா காப்பி கொணர்ந்து மேஜைமேல் வைத்து அவள் சிரிப்பை அடக்கினாள்.

"உன் கதை அப்புறம் இருக்கட்டும். விஷயத்தை ஒரே வார்த்தையில் முதலில் சொல்லிவிடு. நான் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறேன்" என்றாள் கனகம்.

"இதோ கேட்டுக் கொள். நான் விவாகரத்து செய்து கொண்டு விட்டேன்" என்று ஒரு போடு போட்டாள் சுந்திரா.

அந்த அறையில் அலைபோல் ஒரு பரபரப்பு எழுந்தது. அதில், புதைவாணம் போல் எழும்பி, ஒன்றையொன்று துரத்தி உதிரும் நீர்த்திவலைகள் போல, ஏககாலத்தில் எல்லாரும் கேள்விமேல் கேள்வி போட்டுஅவளைத் திணற வைத்தனர்.

டம்ளரில் காப்பியைக் கொட்டி அவளிடம் நகர்த்திக்கொண்டே சொன்னாள் ஸரோஜா.

"இந்தா இதைக் குடித்துவிட்டு அடியிலிருந்து ஆரம்பி பார்க்கலாம்."

சுந்திரா சொல்லத் தொடங்கினாள்.

"ஸரோஜா சொன்னது சரி என்று ஒப்புக் கொள்ளுகிறேன். நமக்கெல்லாம் புருஷர்களை அறிந்துகொள்ள முடிகிறதில்லைதான். ஆனால் அதற்காக நாம் பெண்தன்மையை இழந்து விடமுடியுமா? எனக்கு என்னவோ அம்மா! வேதனை தாங்க முடியவில்லை. ஒரு நாளா, இரண்டு நாளா, நான் வந்தது முதற்கொண்டு இப்படி என்றால்? அதுவும் நான் என்னென்ன கனவுகள் கண்டு கொண்டிருந்தேன் தெரியுமா இங்கு வருவதற்கு முன்?"

என் மாமியார் என்னிடத்தில் உயிரையே வைத்திருக்கிறார் என்பது உண்மைதான். ஆனால் அதுதான் என் துக்கத்தை அதிகப்படுத்திற்று என்று எனக்குத் தோன்றுகிறது. அவர் என்னிடத்தில் கொடுமையாக நடந்து கொண்டிருந்தால், 'அசல் மாமியாராக' மாறி ஆட்டிவைத்திருந்தால் நான் எல்லாவற்றையும் ஒரு வேளை பொறுத்துக் கொண்டிருந்திருப்பேன்! அவர் குழந்தை உள்ளமும், தாயைவிட அதிகமாக என் மேல் சொரிந்த அன்பும் என்னை வெறி கொள்ளச் செய்தன. இப்பேர்ப்பட்ட தாய்க்குப் பிறந்தவரா அவர்!

எனக்குத் திடீரென்று ஒரு விஷயம் உதயமாயிற்று. அவருக்கு எவளோ ஒரு ஆசை நாயகி இருக்கவேண்டுமென்று. ஆனால் அவளை எப்படிக் கண்டு பிடிக்கிறது? என் அண்ணாவிடம் சொல்லிப்பார்த்தேன். அவனால் ஒன்றும் கையாலாகவில்லை. 'போடி அசடே' அதெல்லாம் ஒன்றுமில்லை. ஆபீஸ்வேலையாயிருக்கும்' என்று சொல்லிவிட்டான்! அவனால் முடியாத காரியத்தை எங்கள் வீட்டு வேலைக்காரி சாதித்து விட்டாள்.

அவர் எங்கே போகிறார் என்பதை அவள் கண்டுகொண்டு வந்து எனக்குச் சொல்லி விட்டாள். அந்தக் குப்பை மேட்டுத் தெருவில் 25-ம் நெம்பர் வீட்டில் அவர் என்ன செய்கிறார் என்பதையறிய என் மனம் துடியாய்த் துடித்தது. நான் எப்படி அங்கே போக முடியும். ஒருயுக்தி செய்தேன், அன்றொருநாள் அவர் வரும் சமயத்திற்கு வீட்டிற்குப் புறப்படாமல் இங்கேயே இருந்தேனே, ஐந்தரை மணி வரையில் உனக்கு ஞாபகமிருக்கிறதா கனகா? அன்று நான் காப்பி போட்டு வைக்கவில்லை. அவருக்குத்தான் அவசரமாயிற்றே. நான் வீடு போவதற்குள் அன்று அவர் வந்து

விட்டுப் போய் விட்டார். நான் பரபரவென்று காப்பிபோட்டு, டிபனும் செய்து வேலைக்காரியிடம் கொடுத்து அவரிடம் கொண்டு போய்க் கொடுத்து வரச் சொன்னேன். என் நோக்கம் என்ன வென்று நீங்கள் ஊகித்துக் கொள்ளலாம்.

நான் நினைத்தது சரியாய்ப் போய்விட்டது! வேலைக்காரி பார்த்துவிட்டு வந்து ஆடு ஆடென்று ஆடினாள். அவள் முகம் போன போக்கும், கையைக் கொட்டிக் கன்னத்தில் வைத்து முறித்து, முகத்தைத் தோளில் இடித்துக் கொண்ட சொகுசும், இடுப்பில் ஒரு கையை மடித்து வைத்து மற்றொன்றை வீசின வீச்சையும் நீ மட்டும் பார்த்திருந்தால் ஸரோஜா......."என்ன பார்த்தாளாம்?" என்று கேட்டாள் வினோதா.

நல்ல வேளை, என் மாமியார் அடுத்த தெருவிற்குப் போயிருந்தார். இல்லாவிட்டால் ஒரே ரகளையாய்ப் போயிருக்கும். என் மனம் திக் திக்கென்று அடித்துக் கொண்டது அவள் என்ன சொன்னாள் தெரியுமா?

"பல்லில் நாக்கைப் போட்டு அதை எப்படி அம்மா சொல்றது? கூடத்திலே கட்டிலு போட்டிருக்கு, அதிலே ஒரு பொண்ணு ரதிக் கணக்கா உக்காந்திருக்கு. உங்க ஐயரு......... ஐயோடி!.......அந்தத் தெருவே தேவடியாத் தெரு மாதிரியல்ல இருக்கு?......."

இதைப்பற்றி ஒன்றும் ஒருவரிடமும் பேசாமலிருக்கும்படி அவளிடம் எச்சரித்துவிட்டு, என் அண்ணாவிடம் எல்லாம் விபரமாகச் சொன்னேன்.

அந்த ரதியை எனக்குப் பார்க்க வேணும் போல் ஆசையா யிருந்தது! அப்பாவிடம் சொன்னால் அனர்த்தத்தில் முடிந்துவிடும் என்று பயந்து, அண்ணாவும் நானும், அவன் நண்பன் ஒருவனுமாக அந்த 25-ம் நெம்பர் வீட்டை 'ரெயிடு' செய்ய ஏற்பாடு செய்தோம்.

நான்தான் முன்னால் சென்றேன். மெள்ள வீட்டுக்கூடத்தில் எட்டிப் பார்த்தேன். ஐயோ! பெண்ணா அவள்? தெய்வலோக ரம்பை! கட்டிலின் ஓரத்தில் பட்டதும் படாததுமாய் அவள் உட்கார்ந்திருந்த அழகும், உடை சற்றே நெகிழ்ந்திருந்த சொகுசும் தலையை ஒரு பக்கமாய்ச் சாய்த்துக்கொண்டு ஓரக் கண்ணால் பார்த்த பார்வையும்.......

"சுந்தரா! கதை சொல்லுகிறாயா என்ன?" என்று வினவினாள் ஆனந்தா.

எத்தனை சம்பவங்கள் நம் வாழ்க்கையில் சம்பவிக்கின்றன? அவைகளை எடுத்துச் சொன்னால் கதை போலத்தான் இருக்கும். அவரைப்பற்றிச் சொல்வதைவிட்டு அவளைப் பற்றி அசந்தர்ப்பமாய் வர்ணிக்கிறேன் என்று நீங்கள் நினைத்தால் அதில் பிசகில்லை. ஆனால் கதைக்கும் உண்மைக்கும் அதுதான் வித்தியாசம். அந்தக் கூடம் முழுவதும் அவளே நிரம்பியிருந்தாற்போல் எனக்குத் தோன்றியது. ஆனால் உண்மையில் அவரைத் தவிர இன்னும் சில பேரும் அங்கிருந்தனர். அவர்கள் கையில் பேப்பரும் பென்சிலும் இருந்தன. நான் ஸ்தம்பித்துவிட்டேன். என் மூளையில் ஓராயிரம் விஷயங்கள் எழுந்து ஒன்றையொன்று தாக்கின. பின்னால் வந்த என் அண்ணன் கலகல வென்று சிரிப்பதைக் கேட்டதும்தான் எனக்குச் சுய உணர்வு வந்தது. அவன் என்ன செய்தான் தெரியுமா? "புடவையைச் சரியாகக் கட்டிக்கொள்ளத் தெரிகிறதா? நான் கட்டிவிடுகிறேன் பாரு ஜோராய்" என்று சொல்லிக்கொண்டே 'விர்' ரென்று போய் அவள் புடவையை....!

"பாரேன்! நான் நிஜப் பெண் என்றல்லவா எண்ணிவிட்டேன். வேஷமா? சுந்தரா கதை சொல்வதில் கெட்டிக்காரிதான்" என்றாள் ஆனந்தா.

"அப்புறம் என்ன? ஒரு நாடகம் போட ஒத்திகை செய்துகொண்டிருந்தார்கள் என்று சொல்லி முடித்துவிடேன்" என்றாள் கனகம். "அதுதானே இல்லை! அவர்கள் எழுதக் கற்றுக்கொண்டிருந்தார்களாம்! ஒரு நிலையை உண்டாக்கி ஒவ்வொருவரும் அதை எப்படி எந்தக் கோணத்திலிருந்து பார்த்து வர்ணிக்கிறார் என்று ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்வார்களாம்! இரண்டு மூன்று நாளாய் இந்த 'ரதி' ஸீன். இதைப்போல் எத்தனையோ காட்சிகள்.......

"எழுத்தாளர் ஆவதற்கு இப்படியும் ஒரு வழியா? நல்ல ரகம்!" என்று சிரித்தாள் ஆனந்தா.

"இப்போ சொல்லு! இந்தப் புருஷாளுக்கெல்லாம் புடவையைக் கட்டிவிட்டால் என்ன?" என்று கேட்டாள் ஸரோஜா.

அப்ளிகே வேலை

அல்லது

ஒட்டுத் துணித் தையல்

~ வை. சரோஜினி ~

பூ நூல் வேலைகளுள் இதுவும் ஒன்று. மேஜை விரிப்பு, தலையணையுறை, குழந்தைகள் சட்டைகளின் கீழ் ஓரம் இவற்றிற்கும் பல வர்ணத் துண்டுத் துணிகளை ஒட்டுப் போட்டுப் பலவிதச் சித்திரவேலை செய்வதைத்தான் (applique work) அல்லது ஒட்டுத் துணிச் சித்திரம் என்று சொல்வார்கள்.

இம்மாதிரிச் சித்திர வேலை செய்வதற்கு பல மாதிரித் தையல்கள் தைத்து நம்மிடம் மிகுதியாயிருக்கும் சொற்ப நூல்களே போதுமானது. தையல் வேலையில் கத்தரித்துப் போட்ட மீதி துண்டு துணுக்குகளை யெல்லாம் இசைத்து அழகிய சித்திரங்களாக ஆக்கி விடலாம்.

ஒட்டுத் துணியில் நாம் முதலில் சித்திரத்தை வரைந்து கத்தரித்துக் கொண்டு அவற்றைத் துணியின் மேல் ஒட்டிவிட வேண்டும். பிறகு மெல்லிய நூலில் சித்திரத்தின் விளிம்புகளை துணியோடு சேர்த்து இரண்டு துணிகளிலும் தையல் விழும்படியாகத் தைக்க வேண்டும். பிறகு ஒட்டுத் துணியின் நிறத்தை ஒத்த நூலால் பொத்தான் தையல்களோ அல்லது இரண்டு துணிகளையும் சேர்த்து இணைக்கும் வேறு எவ்விதத் தையலாலோ தைக்க வேண்டும். ஜரிகை இழைகளாலும் சித்திரத்தின் விளிம்பைத் துணியில் இணைக்கலாம்.

(Stem Stitch) என்னும் காம்புத் தையலாலும்தான் பெரும்பாலும் தைக்கப்படுகிறது. ஆனால் பெரும்பாலும் (Button hole-Stitch) எனப்படும் பொத்தான் தையலும் இந்த ஒட்டுத் துணித் தையல் வேலை பட்டிலோ, வெல்வெட்டிலோ அல்லது வேறு எவ்விதமான துணியிலோ தைக்கலாம். எதில் தைத்தாலும் ஒட்டுப் போட்ட துணி பூ நூல் வேலை செய்ய வேண்டிய இடத்தை நிறப்புகிறது. சித்திரத்தின் வெளிக் கோடுகளை, பொத்தான் தையலாலும், இறுகுத் தையலாலும், பரப்புத் தையலாலும், இன்னும் எத்தனையோவித எம்பிராய்டரித் தையல்களாலும் தைக்கலாம்.

இந்தத் தையலைத் துடங்குமுன் நாம் சில முன் ஏற்பாடுகள் செய்தாக வேண்டும். கொஞ்சம் மைதாமா, அல்லது கோதுமை மாவைத் தண்ணீரில் கரைத்துக் கொஞ்சம் பசை காய்ச்சி வைத்துக்கொள்ள வேண்டும். கூழாய் விடாமல் நன்ருய் நீர்க்க இருக்கவேண்டும். பிறகு இந்தப் பசையை ஒரு துணியினால், எடுத்து பேப்பரில் ஒழுங்காக ஒன்று போல் தடவிவிட்டு அதன் மேல் நாம் ஒட்டுத் துணிக்காக வைத்திருக்கும் துணியின் அடிப்பாகத்தை வைத்து மற்ருெரு துணியால் மெதுவாக அதை அழுத்தி ஒழுங்கு செய்ய வேண்டும். பசையை அதிகமாகத் தடவி விட்டால் மேல் துணியிலும் ஊறி விகாரமாய் விடும். அதனால் பசையைத் தண்ணீர் போல் நீர்க்கச் செய்து கொள்ளவேண்டும். பேப்பரின் மேல் துணியை ஒட்டியபின் கனமான பொருள் ஏதாவதொன்றை எடுத்து அதன்மேல் பாரம் வைக்கவேண்டும். பசை நன்ருய் உலர்ந்தபின், நாம் தைக்க உத்தேசித்திருக்கும் சித்தி



படம் 3

ரத்தை இந்த ஒட்டுத்துணியின்மேல் வரைந்து கூர்மையான கத்தரிக்கோலால் சித்திரத்தைக் கத்தரித்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

இம்மாதிரி முறையில் நாம் ஒட்டுத் துணிகளைத் தயாரிப்பதால் அநேக சௌகரியங்கள் உண்டு. சித்திரத்தின் வெளிக் கோட்டில் நூல் இழை பிரிந்து போகாமல் ஒழுங்கா யிருக்கும். அதைத் தவிர சித்திரம் வரைவதற்கும் கத்தரிப்பதற்கும் எளிதாயிருக்கும். மெல்லிய துணிகளையும் இம் முறையில் தயார் செய்து ஒட்டுத் துணிக்கு உபயோகிக்கலாம்.

ஒட்டுத் துணிகளைத் தயார் செய்த பிறகு சித்திரம் தைக்க நாம் எடுத்துக்கொண்டிருக்கும் துணியில் சித்திரத்தை வரைந்து கொள்ளலாம். பிறகு இந்தத் துணியை ஒரு மேஜை மேல் விரித்துச் சுருக்கங்கள் இல்லாமல் செய்து கொண்டு நாம் முன் தயாரித்து வைத்திருக்கும் ஒட்டுத் துணிகளை துணியிலுள்ள சித்திரத்தின் மேல் ஒட்டவேண்டும். பேப்பர் ஒட்டப்பட்டிருக்கும் அப்பாகத்தில் பசையைத் தடவி சித்திரத்தின் வெளிக் கோடுகள் ஒன்றிற்கொன்று பொருந்தும்படி ஒட்டுத் துணிகளை ஒட்டவேண்டும். பிறகு இதன் மேலும் முன் போல் பாரம் ஏற்றிவைத்து,பசை உலர்ந்தபின் தைக்க ஆரம்பிக்கலாம். முதலில் சித்திரத்தின் வெளிக் கோடுகளுக்கருகே இரண்டு துணிகளையும் சேர்த்து ஒட்டுத் தையல் (Running Stitch) தைத்துக் கொள்வது நல்லது.

உதாரணமாக ஒரு நீலத் துணியில் குழந்தைகளுக்குப் பாவாடையோ அல்லது கவுனோ தைத்து அதில் வெள்ளைத் தாமரை, அன்னம், முயல், யானை இவைபோன்ற சித்திரங்களை வெள்ளை ஒட்டுத் துணிகள் போட்டுத் தைக்கலாம். இம்மாதிரிச் சித்திரங்கள் கீழ் ஓரங்களில் அங்கங்கே ஒன்று அமைத்தால் நேர்த்தியாயிருக்கும்.

படம் 2



படம் 1



தைப்பதற்கு நாம் பொறுக்கும் நூல் ஒட்டுத் துணியின் வர்ணமுடையதாயிருக்க வேண்டும். வெள்ளைத் துணிகளில் பல வர்ணமுள்ள ஒட்டுத் துணிகளால் சித்திரவேலை செய்வதற்கு அந்தந்த பாகத்தை அந்தந்த ஒட்டுத் துணிகளின் வர்ணத்திலுள்ள பூ நூலால் தைக்க வேண்டும்.

இந்தச் சித்திரங்களின் விளிம்புகளை பொத்தான் தையலால் நெருக்கமாகத் தைக்கலாம். சிலர் கொஞ்சம் இடை விட்டுவிட்டுப் பொத்தான் தையல் தைப்பதுமுண்டு. பாப்பு எம்பிராய்டரித் தையலாலும் தைக்கலாம்.

படம் 1, 2ல் உள்ள சித்திரங்களைப் பாருங்கள். ஒரு தாமரையும், அன்னமும் இந்த இரண்டு சித்திரங்களையும் மாறிமாறிப் பாவாடையின் கீழ்ஓரத்தில் வரைந்து முன் விவரித்தபடி ஒட்டுத் துணிகள் வெள்ளைத் துணியில் தயார் செய்து இருண்ட நிறமுள்ள பாவாடையில் தைத்தால் மிகவும் அழகாக இருக்கும்.

இதே மாதிரி ஒட்டுத் துணித் தையலில் மேஜை விரிப்புகளுக்கு பார்டர் மூலைப் பூ இவைகள் தைத்தாலும் வெகு நேர்த்தியாயிருக்கும். படம் 3ல் வரைந்திருக்குப் சித்திரத்தை மேஜை விரிப்பின் நாலு ஓரங்களுக்கும் அடுத்தடுத்து வரைந்து தைக்கலாம்.

சில சித்திரங்களுக்கு இலை ஒரு நிறமும், பூ, பழங்கள் வேறு நிறமும் ஒட்டுத் துணிகள் போட்டுத் தைக்கலாம். இப்படிச் செய்வதற்கு சித்திரத்தின் அந்தந்த பாகங்களை மட்டும் ஒட்டுத் துணிகளில் வரைந்து கத்தரித்துத் துணியில் வரைந்திருக்கும் முழுச் சித்திரத்தில் அங்கங்கே அவற்றைப் பசையால் ஒட்டிக் கொண்டு நன்றாய் உலர்ந்தபின் தைக்க ஆரம்பிக்கலாம்.

மூல ஆசிரியர்—
முனி மாணிக்கம் நரஸிம்ம ராவ்

முதல் கேஸ்

தமிழ்: சீதா தேவி

1

ஏஜெண்டுகளின் பொதுக்கூட்டம் முடிந்து விட்டது. எல்லாம் அவரவர்கள் வந்தவழியே திரும்பிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவரவர்கள்செய்த வேலைகளுக்கு வரவேண்டிய கமிஷனை வாங்கிக்கொண்டு பலர் சந்தோஷமாகப் போய் விட்டார்கள்.

ஈசுவர ராவ் மட்டும் ஒரு தம்பிடி கூட வாங்கிக் கொள்ளாமல் வெறுங்கையுடன் மிகுந்த வருத்தத் துடனும் திரும்பினான்.

ஜனரல் மானேஜர் கூப்பிடுகிறாரென்று ஈச்வரனுக்கு அழைப்பு வந்தது. அவன் போய் அவருக்கு எதிரில் உட்கார்ந்து கொண்டான்.

மானேஜர் 'என்ன ராவ், நீ ஏஜென்ஸி எடுத்து கொண்டு ஐந்தாறு மாதங்களாய் விட்டனவே. ஒரு கேஸ் கூட அனுப்பவில்லையே, என்ன சங்கதி ?' என்று கேட்டார்.

'என்னால் ஆன மட்டும் வஞ்சனை இல்லாமல் உழைக்கிறேன். இருந்தாலும் ஒன்றும் கூடி வரவில்லை. அதிருஷ்டம் இல்லை' என்றான் ராவ்.

'மிஸ்டர் ராவ்' இன்ஷ்யூரன்ஸில் அதிருஷ்டம் என்றும் துரதிருஷ்டம் என்றும் கிடையாது. நீ நன்றாய் வேலை செய்யவேண்டும்.'

''என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?''

'' நீ ஒவ்வொரு நிமிஷமும் இன்ஷ்யூரன்ஸைப் பற்றியே யோசிக்கவேண்டும்.''

'' இன்ஷயூரன்ஸைப் பற்றிப் புஸ்தகங்களைப் படித்துக் கொண்டிருக்கிறேன்.'

'' படித்துக்கொண்டா இருக்கிறாய்? அப்படியானால் உடனே அதை நிறுத்தி விடு. அது மாதிரிப் பைத்தியக்காரத்தனம் வேறு ஒன்றும் கிடையாது. புஸ்தகம் படிப்பதால் பிஸினெஸ் அபிவிருத்தியடையுமென்று நினைக்கிறாயா? ஏட்டுச் சுரைக்காய் வேறு. மனித வாழ்க்கை வேறு. நான் சொல்லுவது தெரிந்ததா?'

ஈசுவர ராவ் தெரிந்த பாவனையாகத் தலையை அசைத்தான். மானேஜர் மறுபடியும் சொன்னார். எல்லாம் சரியாக நடந்துகொண்டிருக்கும் பொழுது சாதாரணமாய்த் தன் எதிர்காலத்தைப் பற்றி ஒருவரும் நினைப்பதேயில்லை. அது உன்னைச் சேர்ந்தது. அவனுடைய எதிர்காலத்தைப்பற்றி ஆலோசிக்கும் வேலை உன்னுடையது தெரிந்ததா?''

"தெரிந்தது. ஒவ்வொரு மனிதனும் தன் வருங் காலத்தைக் குறித்து நினைப்பதே இல்லை. அவன் இறந்தால் அவன் மனைவி மக்களின் கதி என்னாகும் என்று திகிலடைந்து நான் அவனுக்கு ஓர் உபாயம் கண்டு பிடித்துச் சொல்லவேண்டும்."

" இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டின் வேலைதான் அது!' என்றார் மானேஜர் சிரித்துக் கொண்டே.

ஈசுவர ராவ் இளைஞன். உபயோகப்படக் கூடியவன். அவனைத் தகுந்தபடி உற்சாகப் படுத்தி எப்படியாவது அவன் மூலமாய் 'பிஸினெஸ்'ஸை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்று மானேஜர் நிச்சயித்தார்.

"மிஸ்டர். ஈச்வர ராவ், இதில் பிடிவாதத்துடன் வேலை செய்யவேண்டும். காலையில் எழுந்திருக்கும் பொழுதே அந்த நினைவுடனேயே எழுந்திருக்க வேண்டும்."

"ரயிலில் பிரயாணம் செய்கிறாயென்று வைத்துக் கொள். அந்தப் பொழுதை வீணாக்கக் கூடாது. இன்ஷயூர் செய்வதால் ஏற்படும் லாபங்கள், செய்து கொள்ளாதவர்களுடைய பெண்டு பிள்ளைகள் பட்ட கஷ்டங்கள் இவற்றைக் கதைபோல் சொல்ல வேண்டும். ஒருவர் இருவருக்காவது நீ சொல்லுவது உறைக்கும். உன் உழைப்புக்குப் பலன் கிடைக்கும். முயற்சிதான் வேண்டும்.!!" இப்படி வெகு நேரம் போதித்தார். குஷிப் படுத்தினார்.

பாவம், ஈச்வரராவ் வெறுங்கையுடன்போகிறானே யென்று பரிதாபமாகக் கூட இருந்தது அவருக்கு. அதனால் அவனுக்கு ஐம்பது ரூபாய் அட்வான்ஸ் கொடுத்து ஆசீர்வதித்து அனுப்பினார்.

ஈச்வர ராவுக்கு வெகு சந்தோஷம். பி. ஏ. பாஸ் செய்த வாலிபன். தாய்மொழியில் கவர்ச்சியோடு பேசும் திறமை உள்ளவன்.

இப்பொழுது அவனுக்கு உற்சாகம் உண்டாய் விட்டது. பிடிவாதம் அவனுடைய மனதில் பீடம் போட்டு உட்கார்ந்து விட்டது. என்ன ஆனாலும் சரி; ஒரு நாளைக்கு ஒரு கேஸ் பிடிக்காமல் சாப்பிடக்கூடாதென்று தீர்மானித்துக் கொண்டு தன் கிராமத்துக்குப் புறப்பட்டான். இந்தத் த்டவை ஈச்வர ராவ் உடும்புப் பிடியாகத் தீர்மானத்தை உறுதிப் படுத்திக்கொண்டான். பெஜவாடா சேர்ந்தவுடனே மண்டையை உடைத்தாவது யாராவது ஒருவர் இருவரைப் பிடித்து இன்ஷ்யூர் செய்து கொள்ளச் செய்து விடவேண்டுமென்று தீர்மானம் அவன் முகத்தில் பிரதிபலித்தது.

2

ஈச்வா ராவ் வேகமாக ஓடிவந்து ரயிலில் ஏறிக் கொண்டான். காலியாக இருந்த ஒரு வண்டியில் ஏறி ஒரு பெஞ்சியின்மேல் உட்கார்ந்து கொண்டான்.

மானேஜரின் உபதேசம் அவன் காதில் கணீரென்று ஒலித்துக்கொண்டேயிருந்தது. இது ரயில் தானே என்று சும்மாயிருக்கக் கூடாது. இங்கே போய் நமது வேட்டையைத் தொடங்கி நடத் வேண்டும் என்று நினைத்தான்.

அவனுக்கு எதிரில் சுமார் இருபது வய மதிக்கக்கூடிய வாலிபன் ஒருவன் உ கார்ந்து கொண்டிருந்தான். வருத்தத்துட அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் திரும்பிப் பா கிறான். அவனைப் பார்த்தால் ஒரு சாதாரண உத் யோகஸ்தன் என்று தோன்றுகிறது. பிச்சை காரனாக இருந்தாலும் இருக்கலாம். இருந்தா இருக்கட்டுமே, இதுவும் யோசிக்க வேண்டி விஷயந்தான் !

ஈச்வர ராவ் சாவதானமாக யோசித்தான். த முயற்சியை உடனே தொடங்கினால் நன்ன இவனைப் பிடித்துச் சிறிய தொகைக்காவது இன் யூர் செய்துகொள்ளச் சொன்னால் எப்படியிருக்கு என்று நினைத்துப் பார்த்தான்.

இது நல்ல யோசனை. இது அவனுடைய மு கேஸ். முதல் முயற்சியிலேயே கைகூட வேண்டு

ஈச்வரராவுக்கு இந்த பிஸினெஸ் முத விருந்தே பிடித்தமானது. தன் எதிர்காலத்தை குறித்து நன்றாக ஆலோசித்த பின்பே கடைசிய இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டாக அமர்ந்தான்.

இத்தனை மாதமாக ஒருகேஸ் கூடப்பிடிக்கவி யென்பது உண்மையானாலும் இன்றைக்கு அப் யில்லை. எதிரில் உட்கார்ந்திருந்த அந் பையனைப் பார்த்தவுடனே ஈச்வரராவ் அதிர்ஷ்டரேகை வெளிப்பட்டு விட்டதென தெரிந்துகொண்டான்.

பிறகு தனக்கு வரப்போகும் அதிர்ஷ்டத்தை பற்றிக் கற்பனை செய்து கொண்டே போனா இது தவறாமல் கைகூடும். அதன் பின்பு அ தொட்டதெல்லாம் பொன்னாய் விடலா பிஸினெஸ் அபிவிருத்தி அடையும். மாதச்சம்ப நூறு, 'இருநூறு கூட வாங்கலாம். அதன் பி 'ரின்யூவல் பிரீமியத்திய' கமிஷனைக் கொண் 'ஹாய்யாக வாழ்க்கையை நடத்தும் காலமும் சீ ரத்தில் வந்தே தீரவேண்டும்.

தான் முதன்முதலாகப் பிடிக்கும் கேஸில் வ வெற்றி தான் தனக்கு வரப்போகும் அதிர்ஷ் துக்கு ஆதாரம். எப்படியாவது பையனை வலை போட்டு விடவேண்டும்.

ஈச்வரராவ் அந்தப் பையனை நெருங்கி அ மெதுவாகப் பேச்சுக்கு இழுத்தான். அவ பற்றிய சங்கதிகளைக் கிரகித்துக் கொள்ள நேரம் பிடிக்கவில்லை.

அந்தப் பையன் ஒரு பள்ளிக்கூட வாத்தி குறைந்த சம்பளத்தில் எப்படியோ காலம் த கிறான்.

இனிமேல் அவன் வருங்கால வாழ்க்கையைப் ற்றி யோசிக்கவேண்டிய பொறுப்பு, தன்னு டயது, மானேஜர் சொல்லியதுபோல.

தற்காலம் அவன் குடும்பம் சிறியது. எப்படியோ லந்தள்ளுகிறான். இனிமேல் எப்படி நடக்கும்.

பிழைத்திருந்தால் தலையை அடகு வைத்தாவது ப்படியாவது பெண்டாட்டி, குழந்தை இவர்களைக் ப்பாற்றிவிடுகிறான் என்று வைத்துக்கொள்ளு பாம். விதி தலையிட்டு அவன்...என்று வைத்துக் காண்டால் அவர்கள் கதி என்னாய்விடும்? ஆகை ல் விஷயத்தை தெளிவாகச் சொல்லி அவனை ந பாலிஸி எடுத்துக்கொள்ளும்படி செய்து டவேண்டும்.

அனால் அந்தப் பிள்ளையாண்டானைப் பார்த்தால் வ்வளவு புத்திசாலியாகத் தோன்ற வில்லை. தமாகத் தோன்றுகிறது. அவன் பதில் ால்லுகிற மாதிரியிலிருந்து தெரிகிறது. கேயோ பார்த்துக்கொண்டு ஏதோ யோசனை ய்து கோண்டு பட்டதும் படாததுமாய்ப் பதில் ால்லுகிறான்.

அப்படித்தான் இருக்கட்டுமே. இவனைப் போன் ர்களை வழிக்குக் கொண்டுவந்து ஒரு பாலிஸி த்துக்கொள்ளச் செய்தால் ஒரு ஏழைக் குடும் தைக் காப்பாற்றிய புண்ணியம் கிடைக்கும்.

இப்படியெல்லாம் யோசித்த ஈச்வர ராவ் தன் லையை ஆரம்பித்து அந்தப் பள்ளிக்கூடத்து ்தியாரை மெள்ளமெள்ளப் பேச்சுக்கு இழுத்து ழ்க்கை அநித்தியம் என்னும் விஷயத்துக்குத் ப்பினான்.

பாருங்கள், இந்த வாழ்க்கை நிலையில்லை. உடம்பு றும் காற்றடைத்த பை. இப்பொழுது சந்தோஷ ப் பேசிக்கொண்டிருக்கிறோம். அடுத்த ஷத்தில் என்ன வரப்போகிறதென்று நமக்குத் ரிகிறதா ?''

ந்த இளைஞன் பதிலே பேசவில்லை. கேட்டும் ாததுபோல், இருந்தான். சரியென்றும் ல்லவில்லை. மறுக்கவும் இல்லை. ஏதோ க்குப்பொடியில் மயங்கியவனைப் போல்உட்கார்ந் ந்தான்.

வாத்தியார் ஸார், வண்டி இப்பொழுது பாலத் மேல் போகிறது. பாலம் உடைந்து தடா ன்று வண்டி விழுந்து விடுகிறதென்று த்துக்கொள்வோம்; ரயில் பிரயாணிகளில் சிலர் து விடலாம். பல சமயங்களில் அப்படி நடந் க்கிறது.''

வறு பக்கம் பார்த்திருந்த வாத்தியார் திரும்பி ன் பேச்சைக் கேட்பதில் சிரத்தை காண் ான்.

ச்வர ராவ் தைரியத்துடன் மறுபடியும் ஆரம் ான் "காலன் எப்பொழுதும் நம் அருகிலேயே க்கிறான். நாளை நம்முடையதோ, நமனுடை யதோ, எப்பொழுதும் நம்மைத் தொடர்ந்து வந்து திடீரென்று ஒரு நாள் மேலே பாய்ந்து விடுவான். எந்த ரூபத்தில் வருவானென்று சொல்ல முடியாது. ஒரு தடவை வழியோடு போய்க் கொண்டிருக்கும் இரட்டை மாட்டுவண்டி யொன்று ஒரு பையன் மேல் ஒடிந்து விழுந்து விட்டது. அந்த இடத்திலேயே அவன் உயிர் போய்விட்டது.''

வாத்தியாருக்கு இதைக்கேட்டவுடன் ரொம்ப ஆச்சரியம் உண்டாய்விட்டது. அப்படியா நடந்தது! என்று திகைப்புடன் பார்த்தான்.

3

ஏஜெண்டு பிரகஸ்பதிக்குப் பிடிவாதம் அதிகரித் தது. வாத்தியார் வலையில் விழுந்து விடுவார் போலிருக்கிறது. முகத்தை பார்த்தால் அப்படித் தான் தோன்றுகிறது. அதனாலேயே அவன் ஒரு குட்டிப் பிரசங்கம் செய்து முடித்தான். இடையில் அவனுடைய முகபாவங்களையும் கவனித்து வந்தான். மறுபேச்சுப் பேசாமல் வாத்தியார் உபந்நியாஸம் முழுவதையும் கேட்டான்.

கடைசியில் பிரசங்கி சொன்ன வாக்கியம் இது. "சைக்கிலிலிருந்து விழுந்த உடனே பிராணனை விட்டவர்களும் உண்டு.''

இதைக் கேட்ட இளைஞன் அழுவதற்குத் தயாராய் விட்டான். ஏஜெண்ட் ஈச்வர ராவுக்கு அசாத்திய சந்தோஷம். மானேஜர் சொன்னது போல் விடா முயற்சி இருந்தால் போதும். அதிருஷ்டம் தானே தேடி வரும். தன்னுடைய பேச்சுக்கு அந்த இளைஞன் நன்றாய் வசப்பட்டுவிட்டான். அவனைப் பாலிஸி எடுத்துக்கொள்ளச் செல்லுவதற்கு வெகு நேரம் ஆகாதென்று நினைத்த ஈச்வர ராவ் கொஞ் சம் கம்பீர பாவனையில் சொல்ல ஆரம்பித்தான்.

"வாத்தியார் ஸார், நான் ஒன்று சொல்லுகி றேன் கேளுங்கள். வேறு விதமாக நினைக்க வேண் டாம். உங்களுக்கு ஆஸ்தி கிடையாது. கிராமப் பள்ளிக்கூடத்தில் வாத்தியாராக இருந்து ஏதோ சம்பாதித்து வாழ்க்கை நடத்துகிறீர்கள். ஏதாவது அபாயம் நேர்ந்து—நான் சொன்னது போன்ற மாதிரி நடந்து நீங்கள் போய்விட்டால், உங்கள் மனைவியின் கதி என்னவாகும்? குழந்தைக்கு என்ன ஆதாரம்? அவர்கள் குடிக்கக் கஞ்சியில்லாமல் பட்டி னியால் சாகவேண்டியது தானா? என்ன, நான் சொல்வது சரிதானே?''

இதற்குப் பதில் என்ன வருமோ என்று ஈச்வர ராவ் வாத்தியாரையே கவனித்தான். வாத்தியாரிட மிருந்து பதில் வரவில்லை. 'ஆமாம்' என்று தலையை ஆட்டிவிட்டுக் கோவென்று அழ ஆரம்பித்து விட் டான்.

அடே, விஷயம் இவ்வளவு தூரத்துக்கு வந்து விடும் என்று ஈச்வர ராவ் நினைக்கவே இல்லை. அவன் ஆசைப்பட்டதெல்லாம் ஓர் ஐந்நூறு

ரூபாய் பாலிஸிதான்! மாதம் இரண்டே ரூபாய்கள் கட்டினால் போதும்.

பாலிஸியின் பேச்சை எடுக்கும் முன்பே இந்த ஆசாமி இப்படி அழுது விடுவானென்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. இது விசித்திரமாக அல்லவா இருக்கிறது! என்ன செய்வதென்றே தெரியவில்லை.

வாத்தியாரின் அழுகையைக் கேட்டு, அதற்கு முன் என்னென்னவோ பேசிக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் பேச்சை நிறுத்திவிட்டு இவர்கள் இருவரையுமே கவனித்தார்கள். அவர்களுக்கு தலையோ காலோ புரியவில்லை. இருவரும் சிறு பிள்ளைகள், ஒருவர்க்கொருவர் பேச்சு முற்றி அது விபரீதமாய் விட்டதோ என்று சந்தேகித்தார்கள்.

வாத்தியார் அழுகையை நிறுத்தவில்லை. 'ஹூம், நீ சொன்னது நிஜந்தான். இல்லாவிட்டால் பொய் எதற்காக சொல்லப் போகிறாய்?' என்று முகத்தை மூடிக்கொண்டு மறுபடியும் அழ ஆரம்பித்துவிட்டான்.

அவனைக் கண்டு எல்லோரும் இரங்கினார்கள். ஈச்வர ராவ் எதையோ சொல்லி அவனை அழ விட்டு விட்டானென்பது அவர்கள் எண்ணம்.

"ஏனையா அந்த பிள்ளையை அழவைக்கிறாய் ?" ஓரிரண்டு பெரியவர்கள் கேட்டே விட்டார்கள். பாவம்; ஈச்வரராவ் என்ன சொல்லமுடியும்? திருதிருவென்று விழித்தான்.

எல்லோருமே நிச்சப்தமாக உட்கார்ந்திருந்தார்கள். ஓர் இளைஞன் அப்படி விக்கி விக்கி அழுது கொண்டிருந்தால் யார் சந்தோஷமாய்ப் பேசுவார்கள்? ஈச்வர ராவின் வெளுத்த முகத்தையும், பேசாமல் உட்கார்ந்திருந்ததையும் பார்த்த எல்லோரும் அவன் தான் ஏதோ விஷமம் செய்திருக்கிறானென்று நிச்சயம் செய்து விட்டார்கள். இல்லாவிட்டால் அந்த இளைஞன் ஏன் அழ வேண்டும்? அவன் அழுகைக்குத் தானே காரணம் என்று மற்றவர்கள் நினைப்பது கண்டு ஈச்வர ராவுக்கு அவமானமும் ஆத்திரமுமாக வந்தது.

நான்கு நிமிஷங்கள் கழிந்தபின் அவன் அழுகையை நிறுத்திக் கொஞ்சம் தெளிவடைந்தான். அழுகை நின்றவுடன் அவன் பக்கத்தில் இருந்த ஒரு பாட்டி, 'ஏண்டாப்பா, நீயாரோ சின்னப் பிள்ளை, உன் துக்கத்தைப் பார்த்தால் என் வயிற்றில் என்னமோ சங்கடம் செய்கிறது. எதற்காக இப்படி அழுகிறாய்?' என்று கேட்டுவிட்டுத் தன் கண்ணையும் துடைத்துக் கொண்டாள்.

வாத்தியாராகிய இளைஞனுக்குப் பேச வாயெழவில்லை. கண்களில் நீர் நிறைந்தது. துக்கம் நெஞ்சை அடைத்தது; அழுகையால் நடுங்கிய குரலில் "என் பெண்டாட்டி சாகப் போகிறாள்." இதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. அந்தக் கிழவியின் மேல் சாய்ந்துகொண்டு அசப வீட்டில் அழுவது போலவே தேம்பித் தேம்பி அ ஆரம்பித்து விட்டான்.

கிழவிக்கும் ரொம்பக் கஷ்டமாக இருந்த வழியில் கிடைத்த இந்தப் பேரனைப் பார்த் 'பேசாமல் இரு அப்பா, உன் பெண்டாட்டிக் உடம்பு அதிகமாய்விட்டதா? என்ன செய்கிற அழாதே' என்று சமாதானப் படுத்திக்கொண் தானும் அழத் தொடங்கினாள்.

யாராவது சமாதானப் படுத்தியபொழுது பேசா விருப்பது, மறுபடியும் எதையோ நினைத்து கொண்டு திடீரென்று அழுவது. இப்படி மாறி கொண்டிருந்தது வாத்தியாரின் நிலைமை.

ஈச்வர ராவுக்குக் கூண்டில் உயிரே இல் தான் இருக்குமிடம், பிறர் பேசுவது ஒன்று அவனுக்கு நினைவில்லை.

4

அந்த வாலிபன் ஏன் அழுகிறானென்று வண்டி விருந்த யாருக்குமே தெரியாது. முதல் பெஞ்சியி உட்கார்ந்திருந்தவர்கள் அவன் மனைவியின் உ ருக்கு ஆபத்து என்று நினைத்தார்கள். மூன்று பெஞ்சியில் உட்கார்ந்திருந்தவர்கள் அவள் என் காரணத்தால் இறந்துவிடப் போகிறாள் என்ற வி யங்களையும் சேகரித்தார்கள்.

சிலருக்கு ஈச்வர ராவின் மேல் கோபம் வந்த அவனைச் சுட்டுவிடுவது போலப் பார்த்தார்கள் 'இந்தப் பாழும் செய்தியை இங்கேயே எ சொல்லவேண்டும்? ரயிலை விட்டு இறங்கியபி சொல்லக்கூடாதோ!' என்றார்கள்.

ஈச்வர ராவுக்கும் முதலில் அந்த இளைஞன் ஏன் எதற்காக அழுகிறானென்று தெரியவில்லை. பிற ஒருவேளை அவன் மனைவி வியாதியோடிருந் உடம்பு அதிகமாய் இருக்கலாம். அதனால்தா எங்கேயோ நினைவாய் உட்கார்ந்திருந்திருக்கிறான் என் பேச்சைக்கூட கவனிக்காமல் இருந்தா அல்லவா முதலில்! நான் உன் மனைவி மக்க சோற்றுக்கு இல்லாமல் பட்டினி கிடந்து இறந் விடுவார்கள் என்றது அவனுக்கு அபசகுனமாக தோன்றி அவன் மனதைப் புண்படுத்தி இருக்கும் அதனால் துக்கத்தைத் தாங்க முடியாமல் அழுகிற கிறான் என்று அந்த மேதாவி ஏஜண்டு தனக்கு தோன்றிய மனோதத்துவ ஆராய்ச்சியைக் கொண் முடிவு கட்டிவிட்டான்.

இதற்குள் இளைஞன் கொஞ்சம் அழுகையை நிறுத்தினான். பாட்டி அந்த சமயம் பார்த்து 'இப்படித்தான் தைரியப் படுத்திக் கொள்ள வேண் டும். அழுது என்ன பிரயோஜனம்?' என்றாள். அவன் ஓர் அசட்டுப் பார்வையோடு நிறுத்திக் கொண்டான்.

'அவர்கள் இருவரும் மாப்பிள்ளையும் மைத்துன னுமாமே' என்று கடைசிப் பெஞ்சியில் இருந்தவ

ள் சொல்லிக் கொண்டார்கள். அவர்கள் எப்படி ஊகித்து இச் சங்கதியை ஸ்திரப் படுத்தினார்களோ, தெரியவில்லை.

கிழவி இது பொய்யோ நிஜமோ என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்று, 'ஏண்டாப்பா, உன் அக்காவை அவருக்குக் கொடுத்திருக்கிறதா, அவர் அக்காவை உனக்குக் கொடுத்திருக்கிறதா?' என்று விசாரித்தாள்.

இந்த விசாரணையில் ஈச்வர ராவுக்குக் கொஞ்சம் கொஞ்சம் இருந்த தைரியமும் பறந்து போயிற்று. எல்லோருமாக இருவருக்கும் சொந்தம் வேறு ஏற்படுத்தி விட்டார்கள். இதற்குப் பதில் யார் சொல்வது! என்று பயந்து விட்டான்.

அந்த பையன் கிழவிக்குப் பதில் சொல்லத் தலையைத்தான் ஆட்டினானோ, கையை அசைத்தானோ, என்ன செய்தானோ பகவானுக்குத்தான் வெளிச்சம். எல்லோரும் அவர்கள் இருவரும் மைத்துனனும் மாப்பிள்ளையும் என்று தீர்மானித்து விட்டார்கள். இன்ஷ்யூரன்ஸ் தொழிலில் இப்படி விபரீதங்கள் வரும் என்று ஈச்வர ராவுக்குத் தெரியாது. அதனால் அவன் நடுங்கிக்கொண்டே இருந்தான்.

5

புதிதாகவந்த உறவை ஏற்றுக்கொண்டு வாத்தியார் இளைஞனும், ஏஜெண்டும் எதிரும் புதிருமாய் உட்கார்ந்திருக்கிறார்கள். கிழவி மறுபடியும், 'உனக்குக் குழந்தைகள் உண்டா!' என்று கேட்டாள். இளைஞன் பேசாமல் ஒரு விரலைக் காட்டினான். 'ஒரு குழந்தையா, அப்பா! சிறு வயதிலேயே குழந்தை பிறந்து விட்டது' என்றாள் கிழவி. குழந்தை என்ற பெயரைக் கேட்டவுடன் திடீரென்று முன்னைவிடப் பெரிய குரலில் அழத்தொடங்கினான். கிழவி 'நன்றாயிருக்கிறது, பேசாதிரு, அந்தக் குழந்தைக்காகவாவது தைரியமாய் இருக்கவேண்டாமா?' என்று அதட்டினாள்.

'அந்தக் குழந்தையும் பிழைக்காது!' என்று அந்த இளைஞன் ஈச்வர ராவின் மேல் சாய்ந்து ஒரே அழுகையாய் அழுது தீர்த்தான். யார் என்ன சொன்னாலும் கேட்கவில்லை.

ஈச்வர ராவுக்கு அவன் தன்மேல் சாய்ந்து கொண்டு அழுவது கஷ்டமாக இருந்தாலும், மற்றவர்களுக்கு அது விபரீதமாகத் தோன்றவில்லை. மாப்பிள்ளையும் மைத்துனனும் இப்படி அழுவதில் விபரீதம் ஒன்றும் இல்லை. சாகக் கிடக்கும் பெண் அவன் அக்காவாய் விட்டாள். அந்த நிலையில் அவன் அழாமலிருப்பது தான் விபரீதம்! என்று அவன் நினைத்தான்.

முதலிலேயே அவனை அங்கே இருப்பவர்கள் கல்நெஞ்சன் என்று தீர்மானித்து விட்டார்கள். இல்லை என்று சொல்லத் தைரியமும் இல்லை. வேறு வழியில்லாமல் அந்த இளைஞனைத் தன் மாப்பிள்ளை யென்று ஒப்புக்கொண்டான். ஆனால் இந்த கதி நேருமென்று எதிர்பார்க்கவில்லை.

'நாசமாய்ப் போன இன்ஷ்யூரன்ஸ் தொழிலில் இந்தக் கதிக்குக் கொண்டு வருமென்று தெரிந்திருந்தால் அன்றைக்கே இதை விட்டுத் தொலைத்திருப்பேன்' என்று நினைத்தான்.

அது இருக்கட்டும். இந்தச் சமயத்தில் என்ன செய்வது என்று விளங்கவில்லை. தமக்கையல்லவா போய்விட்டாள்! அழாவிட்டால் விடுமா? ஆனால் ஒரு விஷயம்; அந்த அழுகை வெறும் பாசாங்கு அல்ல; அது அவனுடைய இதயத்தின் ஆழத்திலிருந்து உண்மையாகவே வந்த அழுகைதான். அதற்குக் காரணம் என்னவோ?

பக்கத்தில் இருந்தவர்கள் எல்லோரும், 'போதுமப்பா! அழுகையை நிறுத்துங்கள். அழுது என்ன பிரயோஜனம்? நடந்தது நடந்துவிட்டது!' என்று மாப்பிள்ளையையும் மைத்துனனையும் தேற்றினார்கள்!

இந்தத் தடவை பாட்டியம்மாள் ஈச்வர ராவைப் பார்த்து 'பைத்தியக்காரப் பிள்ளை! நீயும் அழுதால் எப்படி? கொஞ்சம் தைரியப் படுத்திக்கொள்! உன் அத்திம்பேர்தான் இடிந்து போய்விட்டான். அவனுக்கு ஏதாவது ஆறுதல் சொல்லித் தேற்றுவது போக நீயும் அழலாமா?' என்று புத்திமதி சொன்னாள். ஏஜெண்டு ஈச்வர ராவ் பாட்டியின் பேச்சைக் கேட்டு அழுகையை நிறுத்தினான்! வாத்தியாரும் நிறுத்தினாலும் பூராவும் நிறுத்தவில்லை. சற்றுப் பேசாதிருப்பான். திடீரென்று எதையோ நினைத்து விம்முவான்.

ரயிலை விட்டு இறங்கிப் போய்விட்டால் என்ன என்று ஈச்வர ராவ் யோசிக்காமல் இல்லை. எப்படிப் போவது, எல்லோருமாய்ச் சேர்ந்து உறவு ஏற்படுத்தியிருக்கும் அத்திம்பேரை ரயிலில் விட்டு விட்டு......!

அப்படித் துணிந்து இறங்கினால் எல்லோரும் 'நீ என்ன, மனிதனா?' என்று அவமானப்படுத்துவார்கள். அதோடு விட்டுவிடுவார்களா? 'அந்த ஆசாமி பொங்கிப் பொங்கி அழும்பொழுது நீ எப்படிப் போகலாம்?' என்று இழுத்து உட்கார வைத்து விடுவார்கள். அதற்குமேல் ரகளை செய்தால் ஆளுக்கொரு அடி அடித்தாலும்......இதெல்லாம் யோசித்துப் பார்த்து ஈச்வர ராவ் இறங்க முடியாதென்று நிராசையுடன் உட்கார்ந்திருந்தான். பல ஸ்டேஷன்கள் போய்விட்டன. வாத்தியார் எங்கேயும் இறங்குவதாகத் தெரியவில்லை.

வண்டி ஒரு ஸ்டேஷனைச் சமீபித்தது. வண்டி நின்றவுடன் ஒரு கிழவர் இவர்கள் வண்டியை எட்டிப் பார்த்து 'இங்கே இருக்கிறான்' என்று கூவினார். உடனே இன்னொரு கிழவர் ஓடிவந்து இந்த வண்டியிலேயே ஏறினார்.

வந்தவர்கள் இருவரும் வாத்தியார் இளைஞனுக்கு இருபக்கத்திலும் உட்கார்ந்துகொண்டார்கள். ஒருவர் 'அட பாவி, உன்னைத் தேடித் தேடி ஒவ்வொரு ஸ்டேஷனிலும் இறங்கி, இறங்கி,

எங்கள் உயிரே போய்விட்டதே' என்றார். மற்றொருவர், 'இந்த வண்டிக்கு எப்படி வந்தார் துரைவாள்?' என்றார்.

அவர்களைப் பார்த்தவுடன் வாத்தியார் மறுபடியும் அழுகையை ஆரம்பித்தான்.

பாட்டி அவர்களில் ஒருவரை 'இந்தப் பிள்ளையாண்டான் உங்களுக்கு என்ன ஆகவேண்டும்?' என்று கேட்டாள்.

'என் பிள்ளை' என்றார் அவர்.

"அவர்" என்று மற்றவரைச் சுட்டிக் காட்டினாள் பாட்டி.

"அவனுடைய் மாமா' என்றார் கிழவர்.

பாட்டி அத்துடன் விடவில்லை. 'இதுவரைக்கும் ஒரே அழுகை. நாங்கள் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. ஏன் இவனை இப்படித் தனியாக விட்டு விட்டீர்கள்? பாவம்!' என்றாள்.

அந்தக் கிழவர் கோபமாகப் பிள்ளையைப் பார்த்து 'எதற்கடா அழுகை?' என்று அதட்டினார். அவன் முகத்தைச் சிணுக்கினான்.

அதைப் பார்த்த கிழவி, 'ஐயோ பாவம், கோபிக்காதீர்கள், அழாமல் என்ன செய்வான்! ஒரு குழந்தை, அந்தக் குழந்தைக்கும் இப்படி வரவேண்டுமா என்று நினைத்தால் பகீரென்று இருக்காதா? நம்மைப் போல் கஷ்ட சுகங்களில் அடிபட்டிருக்கிறானா? சிறுசுதானே?' என்று பரிந்தாள்.

கிழவர், கிழவியை வெறுப்புடன் பார்த்தார்.

'இவனுக்குக் குழந்தை ஏதம்மா?' என்று ஆச்சரியத்துடனே கேட்டார்.

'இல்லையா, ஆனால் பெண்டாட்டி போய் விட்டாளென்று தான் அப்படி அழுதானா?' என்றாள் மறுபடியும்.

'செச்சே! என்னம்மா உன் பேச்சு! பெண்டாட்டியாவது, சாகவாவது?'

'உங்கள் பிள்ளை இத்தனை நாழியாய்ப் பெண்டாட்டி செத்துப்போய் விட்டாளென்று தானே அழுதான்?'

"சீச்சீ, என்னம்மா இப்படி அபசகுனம் மாதிரிப் பேசுகிறீர்கள்! அவனுக்கு இன்னும் கல்யாணமே ஆகவில்லையே" என்றார் அவன் மாமா.

கல்யாணம் ஆகாவிட்டால் ஈச்வர ராவுக்கு அவன் எப்படி அத்திம்பேர் ஆனான்? ஈச்வர ராவ் எதற்காக அழுதான்? இந்தக் கேள்விகள் எழுந்தால் ஏஜெண்டவர்கள் தான் பதில் சொல்லியாக வேண்டும். எல்லோர் பார்வையும் அவன் பக்கமே திரும்பியது.

ஈச்வர ராவின் நிலைமை மிக நெருக்கடியில் வந்து விட்டது. இந்தமாதிரிக் கஷ்டத்தில் அவன் அகப்பட்டுக் கொண்டதே யில்லை, இப்பொழுது எதற்காக அழுததாக அவன் சமாதானம் சொல்லுவான்?

நடந்த விஷயத்தை முதலிலிருந்து சொன்னால் எல்லோரும் கல்லை விட்டெறிவார்கள். சிரிப்பார்கள். சந்தேகத்துக்கு இடமாய்விடும். அதோடு போகாது. தன்பெயர், குடும்பம் எல்லாம் விசாரித்துக் கொண்டு எல்லோரிடமும் சொல்லுவார்கள். ஊர் பூராவும் பரவிவிடும். இந்த ஊர்க்காரனும், இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டாம். இப்படி நடந்தாம் என்று எல்லோரும் சிரிப்பார்கள். ஆகையால் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டுமென்று யோசித்தான்.

இதற்குள் பாட்டி, 'பெண்டாட்டி இல்லை, பிள்ளை இல்லை, எதற்காக இப்படி விழுந்து விழுந்து அழுதானும்,' என்று கிழவரைக் கேட்டாள்.

'அவன் அழுகைக்கென்ன, வேறு வேலை? எதையோ நினைத்துக் கொள்வான், அழுவான்' என்று சலித்துக் கொண்டார்.

அவனுடைய மாமா பதில் சொன்னார்:

'அவனுக்கு ஒரு மாதமாக உடம்பு சரியாக இல்லை......ஒரு மாதிரிப் பைத்தியம். மணிக்கணக்காக ஒருவரிடமும் பேசாமல் உட்கார்ந்த இடத்திலேயே உட்கார்ந்து விடுவான். யாரையாவது கோபித்துக் கொண்டாலும் சரி; தனக்குப் பிடிக்காதவற்றைச் சொன்னாலும் சரி, அழ ஆரம்பித்து விடுவான். விசாகபட்டிணத்தில் வைத்தியம் பார்க்க அழைத்துக் கொண்டு போகிறோம்.'

இளைஞன் இதைக் கேட்டதும், ''பைத்தியமாவது அப்பா, நான் அழுத காரணத்தைச் சொல்லுகிறேன் கேள். எனக்கு கல்யாணம் ஆனாலும் என் பெண்டாட்டி இறந்து விடுவாளாம். குழந்தை போய்விடுமாம். இவர் சொன்னார்' என்றான்.

எல்லோரும் ஆத்திரத்துடன் ஈச்வர ராவைப் பார்த்தார்கள். இந்தமாதிரி இரக்கமில்லாமல் ஒருவன் சாக்குருவி மாதிரியாகப் பேசுவானா என்று. 'நானும் செத்துப்போய் விடுவேனாம், அப்பா, இந்த ரயில் விழுந்தோ, மோட்டாரில் அறைந்தோ, மாட்டு வண்டி ஏறியோ சாவது நிச்சயம் தானாம்!' என்று சொல்லி மறுபடியும் அழத் தொடங்கினான் அவன்.

ஈச்வர ராவுக்குக் கிலி பிடித்தது. என்ன பதில் சொல்லுவது!

சிவசிவா! அவன் பட்ட நரகவேதனை சொல்ல முடியாது.

பாட்டிக்கு கோபம் வந்து விட்டது. 'உனக்கென்ன போங்காலம் வந்து விட்டது. பாவம், சிறு பிள்ளையைப் பிடித்துக் கொண்டு வாயில் வந்தவற்றைக் கன்னா பின்னா என்று எதற்காக உளறினாய்?" என்று ஈச்வர ராவைத் துளைத்தாள்.

மற்றொருவர், 'ஆமாம், அக்கா செத்துபோய் விட்டாளென்று அழுதாயே. அதற்கு என்ன அர்த்தம்?' என்றார்.

எல்லோரும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் பேசாதிருந்தால் விபரீதம்தான் என்று,வண்டி நன்றாய் நிற்கும் முன்பே ஈச்வர ராவ் பெஜவாடா பிளாட்பாரத்தில் பாய்ந்து ஜன சமுத்திரத்துக்குள் மறைந்து விட்டான்.

பாட்டியும் வண்டியில் இருந்த பிறரும் அவனுக்கும் 'பைத்தியம் தான்' என்று முடிவு கட்டினார்கள்.

நாம்

வசுமதி ராமசாமி

இந்த தடவை 'கதை வனம்' பத்திரிகை 'தீபாவளி மலருக்கு' ஒரு சிறு கதை எழுதி அனுப்பவதென்று தீர்மானம். ஏனென்றால் என்வாயரட்டையும், விமர்சனத்தையும் பார்த்து "கதை வனம்" பத்திரிகை ஆசிரியை நான் பெரிய எழுத்தாளரென்று நினைத்து ஒரு கதை கேட்டு விட்டார். வலுவில் வரும் கௌரவத்தை யார் தான் இழக்க விரும்புவார்கள்? தவிரவும் சிறு கதை எழுதுவது என்ன பெரிய விசித்திர செயல்? ஒன்று எழுதி அனுப்பினால் போகிறதென்று நினைத்துக் கொண்டேன். எனக்கு பெரிய எழுத்தாளராக வேண்டுமென்று வெகு நாளாய் ஆசை. இது ஒரு தூண்டுகோலாயிருந்தது. பேனாவைக் கொண்டு நல்ல வெண்மையான காகிதத்தை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தேன். இரண்டு மணி நேரம் சிந்தித்தும் என் காகிதமும், மூளையும் காலியாகத்தான் இருந்தன. அப்பொழுது தான் கதை எழுதுவது நினைத்தபடி அவ்வளவு சுலபமில்லை யென்று புரிந்தது. இருந்தாலும் நான் பின்வாங்கவில்லை.

'ஆசையிருக்கு தாசில் பண்ண, அதிர்ஷ்டம் இருக்கு மடிசஞ்சி தூக்க' என்பது போல் தானிருந்தது. எவ்வளவு தான் மண்டையை உடைத்துக் கொண்டும் ஒன்றும் தோன்றவில்லை. ஒருசமயம் ங்கேயோ ஒரு சிறு சம்பவம் அகப்பட்ட மாதிரி தான்றும். பிறகு வழுக்கிக் கொண்டு போய்விடும். ல சமயம் நமக்கு தெரிந்த அத்தனை ஹாஸ்யங்ளையும் அதில் புகுத்தி வாசகர்களை திணற வைக்கவேணுமென்று நினைப்பேன். உடனே கதைக்கு பொருந்தணுமே யென்று கவலை. கதையே பொருந்தாவிட்டால் தானென்ன? நகைச்சுவை, கைச்சுவை தானே! திணித்து விடுவதென்று தீர்னம்! இப்படியே இரண்டு மாதமாய் போராட்டம். டு நடுவில் இன்னும் நாட்கள் இருக்கின்றனவே, தற்குள் ஒரு கதை எழுதாமலா போகிறோம் ன்று ஆறுதல் அடைவேன். தினம் காலண்டரை ர்ப்பேன். 'இன்னும் இருபத்தைந்து நாட்கள் ருக்கிறதே. அதற்குள் ஒரு கதை உருவாகாமலா பாய் விடும்?' ஆனால் நடு நடுவில் திடுக்கிட்டு இப்டியே நாட்கள் சென்று விட்டால் என்ன செய்து?

ஹூம்! இன்னும் ஒரு மாதமிருக்கிறதே. நம் குடும்பத்தில் நடந்த சிறு சம்பவங்களைக் கொண்டு ஒரு அருமையான சித்திரம் தீட்டிவிடலாமே! தினம் "சமையலுக்கு யானைதலை பெருங்காயம் கரைக்கிற பிறந்தகத்திலும், கழிநீரை ஐவேலி நிலம் பாய்ச்சும் புக்ககத்திலும்" பிறந்து புகுந்த எனக்கு சம்பவங்களுக்கு குறைவா? எழுதாமலா போகிறோம். வண்டி வண்டியாய் எழுதி தள்ளி விடலாம். அதிலும் என் ஆசைக்கதை ஆகாயத்தை அளாவும், அபூர்வமான கற்பனையில் இருக்க வேண்டும். உண்மை ததும்பி நிற்க வேண்டும். வாழ்க்கையோடு கோத்து வைத்து ஒட்டியது போல் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும். அற்புத கதாபாத்திரங்கள். இப்படியெல்லாம் மனக்கோட்டை கட்டி பொழுதை தள்ளினேன்.

'அடி என்பதற்கு அகமுடையாளைக் காணோம், அஷ்ட புத்ராள் எத்தனையோ?' என்பது ஒரு பழமொழி. நடு நடுவே எந்த மாதிரியான நடையில் எழுதுவதென்ற பிரச்னை வரும்.

'சஞ்சலை' அவர்களின் நடை மாதிரி எழுதினால் என்ன? உணர்ச்சி வேகம், அழுத்தமான வாக்கியங்கள், ஒவ்வொருவரும் தனது அநுபவமென்று நினைக்கும் படியான விஷயம், இம்மாதிரி எழுதலாமா? அந்த முயற்சி 'முடவன் கொம்புத்தேன்' கதை தான். அது வேண்டாம்.

"புது நாடகம்" அவர்களுடைய பங்கீடான நடை, அழகிய தமிழ், மதயானை போன்ற அசைவு, உயர்தர நகைச்சுவை, அழகான முடிவு, பிரகாசமான விஸ்தரிப்பு. அம்மாதிரியான நடையை பின்பற்றினால் என்ன? நொண்டி தென்னை மரத்தில் ஏற முயன்று கீழே விழுந்ததைப் போல் ஆய்விட்டால்?

"சமர்த்தினி" நடைக்கென்ன? ஆடம்பரமற்ற வார்த்தைகள். ரங்கூன் பருப்பு மாதிரி குண்டு குண்டான வார்த்தைகள். உயர்வான அனுபவ திரட்டுடன் கூடிய நடை அது. அதை பின்பற்றலாமா? அதுவும் கஷ்டம் தான்.

எனக்கு எப்பொழுதுமே இரவல் பிழைப்பு பிடிக்காது. நான் தான் பிரபல எழுத்தாளராகப் போகிறவள்! அதிலும் சிறு கதை ஆசிரியரில் முதல் ஸ்தானம் வகிக்கணுமென்றெல்லாம் தீர்மானம் செய்து விட்டு இரவல் நடை எதற்கு? ஆகவே எனக்கென்று சொந்த நடை வேண்டியதென்று தீர்மானம் செய்தேன். இந்த தீர்மானம் செய்ய நான் வாசலுக்கும், உள்ளுக்கும் நடந்தேன். (நான் யோசிக்கும் பொழுதெல்லாம் உலாவிக் கொண்டே தான் யோசிப்பது வழக்கம்) ஏனென்றால் ஓரிடத்தில் உட்கார்ந்து நான் யோசித்தால் மூளையும் 'உட்கார வேணுமே ?' என்று ஒத்துழைக்கத் தொடங்கி விட்டால்? என் பழக்கத்தை உங்களுக்கு சொல்லி விட்டேன். தனி நடையென்று தீர்மானம் செய்த பிறகு எந்த விதமான கதை அமைப்பு நன்றாக இருக்குமென்று யோசித்தேன்; ஒன்றும் புரியவில்லை. அமோகமாய் எண்ணங்கள் சுழன்றன. ஆனால் என்ன? ஒன்றுக்காவது பூரண ரூபமில்லை. தற்காலம் சிறுகதைக் காலம். இடறி விழுந்தால் கதைகளின் மேல் தான் விழ வேணும். எல்லோரும் தான் எழுதுகிறார்கள். அது ஒரு பெருமையா? நாம் (பழைய காலத்து நாடக மேடையில் தோன்றும் ராஜாக்கள் நாடகத்தில் சொல்லும் நாமென்று தான் நினைத்துக் கொள்ளுங்களேன். எனக்கொன்றும் பயமில்லை) அப்படி அற்ப சொற்பமாய் எழுதுவதாவது? அற்புதமாய் எழுத வேணும். ஒன்று எழுதினாலும் மாணிக்கமாய் விளங்கவேணும்.

சரி போகட்டும். முறையைப் பற்றி தீர்மானம் செய்வோம். நாம் சொல்லுவது போல் கதையை எழுதுவதா? அல்லது கதா பாத்திரங்களையும், வாசகர்களையும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி விட்டு நாம் பட்ட சிரமத்திற்கு களைப்பாறுவோமா? அல்லது நம் கனவில் தோன்றிய கதையாக செய்து விடுவோமா? அல்லது உயிரற்ற பீரோ, மேஜை, ஜன்னல் இவைகள் தான் சொல்லட்டுமே......... இதொன்றும் சரிப்படாது. ஆரம்பத்திலிருந்து கடைசி வரை நாமே கதா பாத்திரங்களுக்கு சிரமம் கொடுக்காமல் 'அதோபார், இதோ பார்' என்று பொம்மலாட்டம் காட்டுவோமா? சே! சே—கதை பூராவும் கடிதங்களாக நிரப்பி விட்டால், வாசகர்களுக்கு அலுத்துப்போகுமோ? இவை ஒன்றுமே சரியான முறையில்லை. சிலவற்றை நாம் சொல்வோம். சிலவற்றை சிந்தனைக்கு விடுவோம். இன்னும் சிலவற்றை கதாபாத்திரங்களை விட்டுச் சொல்லச் சொன்னால் போகிறது.

சிலரைப்போல் நானும் எழுதினேனென்று எழுதி விடக் கூடாது. கற்பனையைக் கண்டு மூக்கின் மேல் விரலை வைக்க வேணும். நடை அழகைக் கண்டு பிரமித்துப் போகவேணும். எழுதும் முறை அப்படியே வாசகர்கள் மனதில் படிய வேணும். சிலருடைய கதைகள் இல்லாத பத்திரிகைகளே கிடையாது. அவர்கள் ஒருக்கால் நிறைய எழுதி பெரிய பிப்பாயில் போட்டு வைத்திருப்பார்கள் போலும். கேட்டவர்களுக்கெல்லாம் இல்லை என்று சொல்லாமல் வாறி வழங்கும் வள்ளல்களென்று நினைக்கிறேன். அதெல்லாம் எனக்கு பிடிக்கவில்லை. எப்பொழுதோ ஒன்று அவுட் விடுவது போல் எழுத வேணும். அது வாசகர்கள் மனதில் போய் பதிவாய் உட்காரவேணும்.

சரி, ஆரம்பம் எப்படி இருந்தால் நன்றாயிருக்கும்? நடப்பு விஷயத்தை ஒரு பாரா எழுதி உடனே அவன் சிந்தனை நான்கு வருடங்களுக்கு முன் நடந்த சம்பவத்தை பற்றி சென்றது. பிறகு மூன்று நக்ஷத்திரப் புள்ளி......அது வேண்டாம். நூதன முறையாக பார்ப்போம்.

இப்படியாக சிந்தித்து நெற்றியில் இரு பக்கமும் விண் விண்ணென்று தலைவலி! எழுந்து ஒரு டம்ளர் காப்பியையும் தலைவலி மாத்திரையையும் சாப்பிட்டு விட்டு உட்கார்ந்தேன். ஆரம்பம் ஊறி ஊறி பளிச் சென்று தோன்றி விடும். முடிவை யோசிப்போம் என்று தொடங்கினேன். எனக்கு கானண்டாயில் கதை தான் மிகவும் பிடிக்கும். அவருடைய கதைகளுள் பிரசித்தி பெற்றவை அப்பறியும் கதைகள். ஒரு கதையில் புரொபஸர் முறையாரிட்டியுடன் ஷெர்லாக் ஹோம்ஸை ஒரு மலை உச்சியில் ஜன்ம விரோதிகளாக சந்திக்க வைத்தே முடிவை தெரிவிக்காமல் வாசகர்களுக்கு விட்டு விட்டார். உடனே பத்து தினங்களுக்குள் வாசகர்களிடமிருந்து கத்தை யாக கடிதங்கள் வந்து விட்டன. 'ஷெர்லாக் ஹோம்ஸை என்ன செய்து விட்டாய்? அவனை கொண்டுவா உடனே' இதுதான் கடிதங்களின் ஸாரம். 'ஷெர்லாக் ஹோம்ஸ் திரும்பி வருகை' *Return of Sherlock Holmes* என்று எழுதினார் அவர்கள். ஜனநாயக ஆட்சிக்காரர்கள், வாசகர்கள் மனதை கவரும் முறையில் எழுதப் பாடுபடுவர்கள். அவர்கள் கற்பனைகளையே எழுதுவார்கள்.

நம் நாட்டில் இறந்தால் கூட பிழைத்து வந்த சித்தப்பாவோ மாமாவோ வைத்துவிட்டு போன

ஆஸ்தியையும் வைத்துக்கொண்டு நந்தவனத்தில் கதாநாயகன் ஒரு குழந்தை மனைவியோடு கொஞ்சி குலாவித்தான் ஆகணும். நீங்கள் வேண்டாமென்றால் விடமுடியாது. கட்டாயமாகத்தான் படிக்க வேண்டும். எப்படிப்பட்ட கொலை வழக்கில் அவன் மாட்டிக் கொண்டிருந்தாலும் எப்படியோ வெளிவந்து விடுவான். அதெல்லாம் கதாநாயக லக்ஷணம். ஆனால் இதெல்லாம் நடுவார்த்திர காலம். ஆதியில் கலைப் பண்பில் இணையற்ற நம் நாட்டில் இன்று மறுமலர்ச்சி தோன்றியிருக்கிறது. இப்பொழுது சுதந்திரநாடு, கதையையும் கட்டாயப்படுத்தி 'சுபம், சுபம், சுபம்' என்று கொண்டுவர முடியாது. கதைக்கும் அவசியம் சுதந்திரம் கொடுத்துதான் ஆகவேணும்.

தலை சிறந்த 'மறு மலர்ச்சி' எழுத்தாளரில் நானும் ஒருவளாக சேரப் போகிறேனாகையால் என் கதைகளும் சிட்டுகுருவி மாதிரி கூட்டைவிட்டு விடுதலையாகிப் பறந்து செல்லும். அடம் பண்ணி உட்காராது. ஆகவே, முடிவை வாசகர்கள் கற்பனைக்கு விட்டு விடுவோம். அதுதான் சரி. ஆரம்பத்தைப் பற்றி தீர்மானம் செய்யாவிட்டாலும் முடிவை தீர்மானித்து விட்டேன்! சில வருஷங்களுக்கு முன் ராஜாஜி சில கடுமையான திட்டங்களை அனுசரித்து கதை எழுதவேணுமென்று தீபாவளிமலரில் அழகான ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதை ஒரு பக்கமாக எடுத்து பிரித்து வைத்துக் கொண்டேன்.

கதை அமைப்பு ஐந்தாறு உருவில்லாமல் தோன்றியது. ஒரு பெண் கணவனால் நிராகரிக்கப்படுகிறாள். கர்ப்பிணி. பிறகு ஒரு குழந்தை பிறக்கிறது. சில வருஷங்களுக்குப் பிறகு அவனுக்கு புத்தி திருந்தி மனைவியையும் மகனையும் அழைத்துக் கொள்கிறான். இதுதான். விஷயம். அதற்கு அழகான மனித இயல்பு கொடுத்து ரஸமாக எழுதவேணும். பெண் நைந்து உருகுகிறாள். பெற்றோர்கள் 'தக்கடா புக்கடா' வென்று சண்டை போடுகிறார்கள். குழந்தையின் மாசற்ற முகம். இதெல்லாம் வர்ணனை; எழுத ஆரம்பித்து இரண்டு வரி முடிவதற்குள், 'அடேடே இது மிகவும் அடிபட்ட 'கதை அமைப்பு' அல்லவா? சகுந்தலை துஷ்யந்தன் கதை தானே, வேண்டாம். வேறு பார்ப்போம்' என்று விட்டுவிட்டேன்.

ஒரு பெண் ஒரு யுவனை காதலிக்கிறாள். ஆனால் அவர்கள் மணம் செய்து கொள்ள முடியாதபடி தடை வருகிறது. அதுதான் காதலின் மகத்துவம். அவர்கள் பெற்றோர்கள் பரஸ்பர சத்துருக்கள், அல்லது ஏழை, பணக்காரன் என்ற மதிற் சுவர் நடுவில். காதலித்து கல்யாணம் செய்துகொண்டு விட்டால் அதில் என்ன ரஸமிருக்கிறது? இதுவும் நாவல் பாணி. ரொம்ப இடங்களில் படித்து அலுத்து விட்டோம்.

ஷேக்ஸ்பியர் எழுதிய "ரோமியோ—ஜூலியத்', மாதிரி முடித்தால்? ஹூம்! முதன் முதலில் அசுபமாய் எதற்கு கதை எழுதவேண்டும்.

ஆஹா! தோன்றிவிட்டது. அழகான கதை அமைப்பு. ஒரு பெண் பிறந்தகத்து பெருமையால் கணவனை மதிக்காமல் பிறந்தகத்துக்குப் போகிறாள். கொஞ்ச நாட்களில் அவ்விடத்து உபசாரம் தேய்பிறை சந்திரனாகி அவமதிப்பு வளருகிறது. புத்தி வந்து கணவன் வீட்டிற்கு வந்து குடும்பம் செய்கிறாள். அட ராமா! இது கூட புதுமையில்லை. தக்ஷ யக்ஞத்தை ஒட்டினதுதான். இருக்கட்டும். எனக்கு என்னிடம் நல்ல நம்பிக்கை இருக்கிறது.

தேசிய வாதிகள், பிரபல வியாபாரிகள் அல்லது நல்ல கவிஞன் இவர்களைக்கொண்டு பேஷான கதைகள் சிருஷ்டித்தால் போகிறது. நவரஸம் சொட்டச் சொட்ட புதுமையான அமைப்புள்ள உயிர்பெற்று உலாவும் கதா பாத்திரங்களுடன் நான் எழுதி தள்ளுகிறேன்.

அடுத்த தீபாவளி மலரை எதிர்பாருங்கள். எப்படிப்பட்ட கதை என்று நான் சொல்லவேண்டியதில்லை. அதுவே உங்களுக்கு சொல்லும். நான் அப்படி அற்ப சொற்பமாய் எழுதுவது உசிதமில்லை. எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

வாழ்க்கைப் புயல்

சந்திரா ராமசேஷன்

பெண்ணைக் கண்டால் பேயுமிரங்கும். ஆனால் அவளைக் கண்டால் அவள் மாமியாருக்கு இரக்கம் என்பதே மறந்து விடுகிறது போலும்! பெண்கள் பற்றி,

மங்கையராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவம் செய்திட வேணுமம்மா
இன்ப உரைகள் உரைப்பவர் யார்?—வீட்டை
இன்னகையால் ஒளி செய்பவர் யார்?

என்று பாடப்பட்டுள்ள பாட்டிற்கும் அவளுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்றுதான் எண்ணுகிறது அவள் பேதை மனம். சமூகமாகிற சமுத்திரத்திலே, வாழ்க்கைப் படகிலே, அன்புப் பாசத்தால் ஏற்பட்ட சிறையிலே அடைக்கப்பட்டு, அடிமைபோல விடுதலை பெறத் தவிக்கும் அவள் மனம் குறுகிய எண்ணம் கொண்டுள்ளதில் ஆச்சர்யம் இல்லை.

அன்று ஒரு நாள் வெகு சாதாரணமான குற்றத்திற்காக அவளை அவள் மாமியார் கடிந்து கொண்டாள். அன்றொரு நாளென்ன? தினமும் இதே நாடகம்தான். ஆனால் அன்று நடந்த சம்பவம்...தனக்கு வந்தால் தானே தெரியும் தலைவலியும் காய்ச்சலும்....என்பதை படிப்பித்தது!

× + ×

அன்று நடந்தது சாதாரண சம்பவம்தான் ....ஆம். அவள் செய்த குற்றம்தான். அதே குற்றத்தை அவள் நாத்தி முன்பு செய்த போது அவள் மாமியார் அவ்வளவு கடுமையாக இல்லை...ஆமாம் என்ன இருந்தாலும் அவள் மூன்றாவது வீட்டுப் பெண்தானே...... என்ன சொன்னாலும் கேட்டுக்கொள்ள வேண்டியவள்தானே என்ற எண்ணமோ? அப்படியானால் அவளைப் போலவேதான் அவள் நாத்தியும் வேறொருவருக்கு அ'்படி இருக்க வேண்டும். ஏன்? அவள் மாமியாரும் ஒரு நாள் அவள் போல இருந்தவள்தானே? தனக்கு யாரோ இழைத்த கொடுமைக்காக பழியா? பின் எதற்காக.......? அதிகமாமி பாசத்தினாலோ? இதையெல்லாம் அவள் மாமியார் நினைத்துப் பார்த்தால் தானே? அவள் மட்டும் மனதைத் துன்பப் படுத்திக் கொள்வதால் கரையேற முடியுமா?

சம்பவம் இதுதான்

வீட்டில் அன்று உப்பு இல்லை. "ஏண்டி, கமலம், போய் அடுத்தாத்து மாமிகிட்டே போய் உப்பு ஒரு டம்ளர் வாங்கிக் கொண்டு வா" என்றாள் அவள் மாமியார்.

அன்று வெள்ளிக்கிழமையாதலால் உப்புக்குக் கடன் போக வேண்டாமென்பது அவள் எண்ணம். நிதானித்தாள் அதே காரணத்தினால். மறுபடியும் ஞாபகப் படுத்தும்போது, சற்றுக் கொடுமையுடன்தான் பேசினாள். "சொல்றேனே கேட்கப்படாதா? நான் தான் எல்லாம் செய்யவேண்டி யிருக்கு. கூடமாடச் செய்வதுகூட முடியாத காரியமா?" என்று கேட்டாள். அவள் தயக்கத்தின் காரணத்தைத் தெரியப்படுத்தவே, மாமியார் மேலே பேசவில்லை. ஆனால் அவளால் வேறொன்றும் செய்ய முடியவில்லை. அவள் இதுவரை படித்த பெண்ணாயினும் கடைக்குப் போனதில்லை. விசுவநாதன்தான் ஏதாவது வேண்டுமென்றால் வாங்கி வர வேண்டும். இல்லாவிட அவள் மாமியார்தான் போகவேண்டும்.

"வெள்ளிக்கிழமை கடன் வாங்காட்டா போறது. கடையிலே வாங்கினா நல்லதுன்னு சொல்லுவா பெரியவா... போய் உப்புக் குத்தியை துடைத்து எடுத்து வா...நான் போகிறேன்" என்று உத்திரவிட்டாள் மாமியார்.

மாமியார் பேசின தினுசில், தன் மே கோபத்துடன் பேசுகிறாள் என்பதை அவள் உணர்ந்தாள். நடு நடுங்கிக்கொண்டே, உப்பு

குத்தியை எடுத்துத் துடைக்கும் போது அது கைதவறி கீழே விழுந்து விட்டது. அதற்கு அவளை அவள் மாமியார் கடிந்து கொண்ட விதம் மாமியார் என்ற முறைக்கே தனிமையான சுபாவத்துடன் இருந்தது. பொறுத்துப் பொறுத்துத்தான் போனாள் அவள். அன்று என்னவோ பொறுக்க முடியவில்லை.

“கை தவறி விட்டது அம்மா. அதற்காக என்னை மட்டும் நிந்திக்கிறதை விட்டுவிட்டு எதற்காக எப்பவோ போன அப்பா, அம்மா வரைக்கும் இழுத்துப் பேசி, அவர்கள் எல்லோரையும் நிந்தனை செய்கிறேள்? அன்னிக்குக்கூட ராஜி இதுமாதிரி உப்புக்குத்தியை....”

“ஆமாண்டி ஆமாம், நான்தான் ராக்ஷஸியாகப் போயிட்டேன் இப்போ. இல்லாட்டா என்ன வாழ்ந்தது? நான் அப்பவே சொன்னேன், அவன்கிட்டே; படிச்ச பொண்ணு மரியாதை இல்லாமே எதிர்த்துப் பேசுவாள் என்று. கேட்டானா? இப்போ கஷ்டப்படறது நான்தான்!” என்றாள் அவள் மாமியார்.

படித்த பெண்தான் அவள். ஆனால் இது வரை ஒரு வார்த்தையாவது எதிர்த்துப் பேசியிருப்பாளா? அதை அவள் மாமியார் எண்ணவில்லையே? இப்போதுதான் என்னவென்று எதிர்த்துப் பேசினாள். எதற்காகப் பெற்றோர் செய்ததையெல்லாம் ஒரு உப்புக் குத்தி உடைந்ததற்காக இழுக்கவேண்டும்? அதுமட்டும் நியாயமாக்கும்? வெள்ளிக்கிழமை உப்புக் குத்தியை போட்டு உடைக்கப்படாதுதான். ஆனால் பெண்ணை மனது நோக அடிக்கலாமாக்கும்?

விசுவநாதனோ, காலையிலிருந்து மாலை வரை மாடு மாதிரி உழைத்து விட்டு, ட்ராமுக்கும், பஸ்ஸிற்கும், மல்லுக்கு நின்று மன நிம்மதியைப் பெறலாமென்று வீட்டிற்குத் தினமும் தான் வருகிறான். ஆனால்....? வீட்டிற்கு வந்தால் அவன் “நியாயந் தீர்க்கும்” வேலையை மேற்கொள்ளுவது சகஜமாகி விட்டது. களைப்படைந்த அவனை, மனைவி எதிர்பார்த்துக் கொண்டு வாசலில் நின்றிப்பாள் என்று ஏக்கத்துடன்தான் வருவான். அவன் அதிலும் ஏமாற்றமடைந்து சலித்துப் போய்விட்டான்.

வழக்கம்போல் அவன் குழந்தை சுமதி வாசலில் மண்ணை வாறி மேலே இறைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருக்கும் மற்ற குழந்தைகளுடன், கவனிப்பாரற்று! தார் ரோட்டில்...மண் எங்கிருக்கிறது என்பதை நிமிஷம் துப்பறியும் சக்தியைப் படைத்திருந்தான். பகவான் குழந்தைகளுக்கு! அநேகமாக விசுவநாதனோ, அல்லது சுமதியோ ஒருவரை யொருவர் சாயங்காலம் கவனிப்பதில்லை. அவன் உள்ளே போவான். கோட்டை கழட்டி மாட்டிவிட்டு புழக்கடைப் பக்கம்போவதற்குள் அவன் கண்கள், ஏதோ ஒருவித உணர்ச்சியுடன், எல்லா இடத்திலும் யாருக்காகவோ துழாவும். சில சமயங்களில் அவை, யாரையோ கண்டால் உடனே வெறுப்பையும், அதே நிமிஷத்தில் மன நிம்மதியையும் குறித்து சுருங்கி, அகலவிரியும். ஆனால் அவன் மனது அடுத்த மணியில் நடக்கப் போகும் “விசாரணையை” நினைத்து அல்லற்படும். கைகால் அலம்பிக்கொண்டு உள்ளே சென்று அவனுக்

எடுத்துத் தனித்தனியாக வைக்கப்பட் க்கும் உணவை எடுத்து உண்பான். ஒன் டிபன் தயாரிக்கப்படா விட்டால் அடுப்பங் ரயில் பூனை படுத்திருக்கும். சமையற் கதவு ர்த்திச் சங்கிலி போடப் பட்டிருக்கும். யாரா எழுந்து வரமாட்டார்களா என்று பார்ப் ற்காக வேண்டுமென்றே டம்ளரையோ, ம்பையோ போட்டு உடைப்பான். யாரும் கமாக அவன் பக்கம் வந்து அவனை விசா மாட்டார்கள். எலியோ, பூனையோ யிருந்து வெளியே ஓடும்.

டியே ஆறு வருஷம் கழித்துவிட்டான். குழந்தைகளுக்குத் தகப்பன் என்ற பெற்றுவிட்டான்....ஏன்? தெரு பாகிற கழுதைக்கும் நமக்கும் என்ன யாசம் என்று. அவன் மனம் எண்ணும்.

ன்று விசுவநாதன் வந்தபோது அவன் சுமதி படியிலேயே விளையாடிக்கொண் ாள். விசுவநாதனைக் கண்டதும் ஓடி காலைக் கட்டிக்கொண்டாள். ஐந்து க் குழந்தையான அவளை எடுத்துக் ண்டு உள்ளே சென்றான் விசுவநாதன். டில் தூசி விழுந்தால்கூட கேட்கும் அவ் ளவு நிசப்தமாக இருந்தது. சுற்றுமுற்றும் ழக்கம்போல் பார்த்து விட்டு, ஏமாற்ற டைந்த கண்களுடன் டிபனைச் சாப்பிட்டு டு கூடத்தில் வந்து உட்கார்ந்தான் அவன். தும் நிசப்தம்.

அம்மா எங்கேடி?"

அப்பா, அம்மா எங்கேயோ தெரியலையே! தியானம் அம்மா டப்பாவை போட்டு டச்சா. பாட்டி கோவிச்சுண்டா. பாட்டி பிடாமே அடுத்தாத்துலே போய் படுத் ண்டா. அம்மாவும் சாப்பிடலை. நாங்கமட் சாப்பிட்டோம். அங்கச்சி பாப்பா தூங் து" என்று சுருக்கமாக கேஸைச் சொல்லி த்தாள் சுமதி மழலைச் சொற்களில். றிந்தோ, அதிக பாசத்தினாலோ குழந்தை ன் கண்களிலும் நீர் அரும்பி நின்றது!

றுபடியும் சஞ்சலம். "சீ"...என்று ய்விட்டது அவனுக்கு. வழக்கம் போல் றும் விசாரணை நடந்தது. ஒரு பக்கத் இடியும், மின்னலும், மறுபக்கத்தில் ர்பு கனிந்த சொல்லம்புகளும் வந்து தாக் .

அவன் தீர்ப்பு அன்று அவன் தாயாரால் ராகரிக்கப்பட்டது. அவர்களை விட்டு விட்டு ராஜியின் வீட்டிற்குச் செல்லத் தீர்மானித்தாள் அவள் மாமியார்.

பாட்டி பாட்டி என்று கதறும் குழந்தை களையும் "உடம்பைப் பார்த்துக்குங்கோ. ராஜி பிரசவம் ஆனதும் தலைக்கு ஜலம் விட்ட பின் அவளோடேயே புறப்பட்டு வந்து டுங்கோ" என்ற அன்பின் எச்சரிப்பையும் கண்டு பெரியவள் மனது விம்மியது.

"பாவம்"! என்ற வார்த்தை அவளை யறி யாமல் அவள் வாயிலிருந்து வெளிவந்தது. அந்த ஒரு நிமிஷத்திற்கு பழைய சம்பவங்கள் அவள் மனதில் தனித்து நின்றன.

அவள் மாமியார் கண்களில் நீர் துளித்தது. "விசு, உடம்பு ஜாக்கிரதை! வாசல் குழா யிலே இருட்டிலே ஜலமெடுக்காதே கமலி. சுமதியை மண்ணிலே விளையாட விடாதே.

கைக் குழந்தைக்குக் கண்ட பாலைப் போட் டாதே. கட்டி வந்துவிடும்!'' என்பது போன்ற உபதேச மொழிகள் வெளியே உதிர்ந்தன ஆலம்பழம் போல. பாசைக்கயிறு பிடித்து இழுத்தது. மனது சஞ்சல சுபாவ முடையது. 'பாவம் தனியாகச் சமைத்துப் பழக்கமில்லையே. குழந்தைகளையும் கவனித் துக்கொண்டு எப்படி சீக்கிரம் சமைத்துப் போடப்போகிறுள்? காலையில் போய் மாலை யில் இருட்டிய பின் வரும் அவனுல் என்ன செய்ய முடியும்? அவளும் தனியாகக் கடைக் குப் போகமாட்டாளே? சாமான்களில்லாமல் பட்டினி கிடக்கப் போறுளே!'....பதிலை தானே சொல்லிக்கொண்டு தேற்றிக்கொண்டாள்.

போய்ச் சேர்ந்ததும் கடிதம் வந்துவிட்டது அவள் மாமியாரிடமிருந்து. ஒரு மாதம் அவள் வீட்டில் எல்லோருக்கும் ஒய்வு என்று தான் சொல்லவேண்டும். விசுவநாதனுக்கு வழக்கப்படி இருந்த விசாரணை இல்லாமல் வலது கை ஒடிந்த மாதிரி இருந்தது. தாயின் பிரிவாற்றுமையை நன்றுக உணர்ந்தான். "எல்லாம் உன் மனைவியினுல்தான்'' என்றது ஒரு பக்கம் அவன் மனம்.

ஆனுல் மறு நிமிஷமே "பாவம், உன் மனைவி எத்தனை நாள்தான் பொறுத்துக் கொண்டிருப்பாள். உன் தாயார் வயதானவள் ...றே? வீட்டில் நடப்பவைகளில் உள்ள ...ங்களை சரிப்படுத்திக்கொண்டு போக ...டியவள் அவளல்லவா? அவள் என் ...னைவியை சொந்த பெண் போல பாவிக் ...டாது? உன் சகோதரியிடம் உள்ள ...பை ஏன் அவளிடம் காட்டுவதில்லை? கண ...ா நம்பி "கல்லென்றுலும் கணவன், புல் ...ன்றுலும் புருஷன்' என்று வாழ வந்த அவளை விரட்டுவதுதான் நியாயமா? எதற் காக அவள் பயப்படும்படி உன் தாயார் அவ ளிடம் நடந்துகொள்ள வேண்டும்? அவள் அடிமையா? உனக்கு இருக்கும் அந்தஸ்தில் சம உரிமை பெற்றவள் அல்லவா அவள்? உன் வாழ்க்கைத் தோணி, அவளில்லாவிடில் பாய்மரமில்லாத படகு போல் தவிக்காதா? நன்றுக யோசி. உன் தாயாரையும் யோசிக் கச் செய்! நீ புருஷன். பெண்கள் சஞ்சல புத்தியையுடையவர்கள்'' என்று குத்தும்.

அவள் மனதோ "பாவம்! பெரியவர்கள் தானே! என்ன இருந்தாலும் முன் கோபம் ...பது பெரியோர்களிடத்தில், வயதானவர்க ...த்தில் சகஜமான சுபாவம்தானே? அது ...ராதத்தினுலா? அப்படியிருந்தால் மனது ...கிவிடாதா? 'எண்ணெய்த் தேய்த் துக்கோ, சாதத்தை எறியாதே' என்று ... கடி எப்படி அன்பு மொழிகள் அவள் ... ருந்து வெளிவர முடியும்? பாட்டி, ப... என்று ஏங்கும் குழந்தைகளுக்கு அவள்... தால் எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கு...

மாதமொன்றுக்குப் பின், ஒரு நாள் வி... நாதன் ஆபீஸிற்கு கிளம்பிக்கொண்டிருந்த... வாசலில் வண்டி ஒன்று வந்து நின்றது. ... லிருந்து அவன் தாயாரும் ராஜியும் இ... உள்ளே போயினர். "பாட்டி வந்துட்... என்று சுமதி ஆர்ப்பரித்தாள். வி... னுக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. அ... சமைந்துவிட்டாள்.

"கமலம் சௌக்கியமா?'' என்று... கேட்டபின்தான் "வாம்மா சௌக்... என்று கேட்கத் தோன்றிற்று அவனுக்கு...

"என் வரேன்னு லெட்டர் கூடப் போட... என்று தொடர்ந்து கேட்டான்.

"வீட்டிற்கு வீடு வாசற்படி!'' என்று... வார்த்தையில் பதிலளித்தாள் அவன் தா...

விசுவநாதனுக்கு முதலில் புரியவில்லை...

"ஆமாம், அவ மாமியார் ராஜியை ... நான் பார்க்கிறதில்லைன்னு ராஜியைப் பிடி... கிட்டினுளாம். எப்பவும் அதே பேச்சு... தானும். ராஜி கவலைப்பட்டுண்டு சரியா சாப்பி... கிறதுகூட இல்லையாம். தினமும் ராஜிக்கு... அவ மாமியாருக்கும் ஏதாவது சண்டைதா... ராஜி பதில் சொல்ல, மாமியார் அவளைத் ... ரகளைதான். ஆனுல் கொஞ்ச நேரத்தி... எல்லாம் சரியாய்ப் போயிடும். எனக்குத்த... அவ மாமியார் சொல்றது எல்லாம் 'சுரீர்'ன்... பட்டது. ராஜியை அழைத்துக்கொ... வந்துவிட்டேன். ஆமா, நீ ஏன் இத்த... நாழி கழிச்சுப் புறப்படறே ஆபீஸிற்கு?''

"நான், இன்னைக்கு என் ஜன்ம நக்ஷத்தி... மோல்லியோ, அஸ்வத்தப் பிரதக்ஷணம் செ... தேன். நாழியா யிடுத்து,'' என்று சொல்லு... போது அரசமர நாகம் அவன் கவனத்திற்... வந்தது.

கல்லாலடிக்கப் பட்ட நாகரில் நடுவில் உள்... கிருஷ்ண விக்ரஹத்திற்கு, இரு புறமு... இரண்டு நாகப்பாம்புகள் கல்லைச் சுற்றி... கொண்டு, ஒன்றையொன்று பார்த்து, சீ... கொண்டிருப்பது போல் செதுக்கி யிருந்த... உள்ளூர சிரித்துக் கொண்டான்.

ஆமாம், பாசத்தால்-கடமையால் பிணைக்க... பட்ட தாயார் மனைவிக்கு மத்தியில் உள்ள தன்னையும் அந்த நாகரையும் ஒப்பிடுவதில் என்ன தப்பு. "வாழ்க்கையின் புயலை'' அல் லவா அது சித்தரிக்கிறது.